

கல்கி
KALKI
13.6.2004
ரூ.6.00
இணைப்பு:
மினி கல்கி
காசு கொட்டும் மல்டி மீடியா!
வியக்கிறார் மல்லிகா!
சாடுகிறார் இராம. கோபாலன்!
ஓடுகிறார் டெல்லி கணேஷ்!

# IIPE LAXMI RAMAN IMPROVEMENT SCHOOL




## மீண்டும் சாதனை

**மாநில அளவில் 2-ம் இடம்**
**மாவட்டத்தில் முதல் இடம்**

### ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் ரேங்குகள்
### எண்ணற்ற மாணவர்கள் மருத்துவம்/பொறியியல் கல்லூரிகளில் அனுமதி





D. Hema Malini
State 2nd in Biology Ent. 49.64
Dist. First in Medical Ent. 98.71

M. Sivasankar
District First Engg. Ent. 96.90
District First Maths Ent. 48.88

K. Jerel Livingston
Medical Ent. 97.98
District 2nd Medical Ent.

J. Rose Bell
Medical Ent. 97.98
District 2nd Medical Ent.



இந்த ஆண்டு...

- 97.04 க்கு மேல் — 18 பேர்
- 95.03 க்கு மேல் — 43 பேர்
- 90.24 க்கு மேல் — 112 பேர்

## Last Year from Tirunelveli Improvement School *Gems*

**69 Medical**
**36 Anna Univ.**
**508 Engineering**

} **Admissions**



- Best Coaching
- Excellent atmosphere
- Printed study materials
- Enormous Tests
- State rank produced every year
- Best Hostels
- Best Improvement School

| | |
|---|---|
| 1999-ம் ஆண்டு | எஸ். கோமதி – மருத்துவ மாநில முதல் இடம் |
| 2001-ம் ஆண்டு | எம். இசைவாணி – மருத்துவ மாநில 2ம் இடம்<br>எம். கார்த்திக் ரங்கநாத் – பொறியியல் மாநில 2ம் இடம் |
| 2002-ம் ஆண்டு | கே.ஹரிதய பாத்திமா – மருத்துவ மாநில முதல் இடம்<br>எஸ்.ஏ.கண்ணன் – பொறியியல் மாநில 4ம் இடம் |
| 2003-ம் ஆண்டு | எஸ். ஆக்னஸ் சிந்தியா – மருத்துவ மாநில 2ம்இடம் |
| 2004-ம் ஆண்டு | டி. ஹேமமாலினி – மருத்துவ மாநில 2ம்இடம் |

**ஆண்/பெண் ஹாஸ்டல் வசதி**

**IIPE**
TIRUNELVELI


1C, Roche Complex (II Floor), & 42, Trivandrum Road (I Floor),
Near Palai Bus Stand, Tirunelveli-2. ✆: 25 61 171, 25 61 172.

**Improvement Admissions started from 20.05.2004**



விஜய் 'கில்லி' பதில்கள் - 4, 5
இராம. கோபாலன் சாடுகிறார் 9, 10
பா. விஜய் கவிதைத் தொடர் 20 - 22
தராசு - 68-70
அரவிந்த அமுதம் -76-79
சம்திங் ஸ்பெஷல்
அறிவிப்பு - 80
கல்கி
13.6.2004
மல்லிகா
ஜெயிக்கிறார் 40, 41


## பத்து மலை விசேஷம்!

மலேஷியாவில் உள்ள பத்துமலை முருகன் கோயில் ரொம்ப விசேஷமானது. ஒரு காலத்தில் சுண்ணாம்புப் பாறைகளால் நிறைந்து, குகையாய்க் கிடந்த பத்துமலை, இன்று அழகிய சிற்பங்கள் நிறைந்த கலைக்கூடமாகத் திகழ்கிறது. இவை குறித்த விளக்கங்கள் கணினியில், பல்வேறு மொழிகளில் பதிவு செய்திருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகள் ஹெட்போனைக் காதில் மாட்டிக் கொண்டால் போதும். ஒவ்வொரு சிலையைத் தாண்டிச் செல்லும் போதும், சமய, தொழில் நுட்ப, கலை விளக்கங்கள் தெளிவாகக் கேட்கின்றன. பாராட்ட



# இரண்டு, மூணு விஷயம்





## இது லேட்டஸ்ட்!


மிகக் குறைந்த எடையுள்ள செல்ஃபோன்களை வடிவமைக்கும் முயற்சியில் சோனி நிறுவனம் இறங்கியுள்ளது. தட்டை, பென்சில், சதுரம், கூம்பு, வட்டம் என பல மாதிரிகளிலும் வடிவமைத்து பத்திரிகைகள் மூலம் பொது மக்களின் கருத்துக்கு வெளியிட்டிருக்கின்றனர். இதில் மக்கள் எதை அதிகம் விரும்புகிறார்களோ அதைத்தான் லேட்டஸ்ட் செல்ஃபோன் மாடலாகத் தயாரிப்பார்களாம்!

- பாரீஸ். பார்த்தசாரதி

## வாசகர்கள் பக்கம்

## நல்ல ஐடியா!

நம் நாட்டில் உள்ள பெரும்பாலான பள்ளிகளில், குறிப்பாக கிராமங்களில் செயல்படும் பள்ளிகளில் - ஆசிரியர்கள் பூகோளப் பாடம் நடத்தும்போது வகுப்பறையில் இந்திய மற்றும் உலக வரைபடங்கள் அட்லஸ், குளோப் முதலியவற்றைக் காண்பித்து மாணவர்களுக்கு விளக்க இயலவில்லை. ஒவ்வொரு வகுப்பறையிலும் ஓர் இந்திய வரைபடமாவது இருப்பது இன்றியமையாதது. இதைச் சமாளிக்க



வேண்டிய முயற்சி அல்லவா?

அலர்மேலு ரிஷி, சென்னை - 20

இலட்சக்கணக்கான இந்திய வரைபடங்கள் தேவைப்படும். சிறிதும் செலவின்றி இவற்றைப் பெற ஒரு வழி உள்ளது.

இந்திய ரயில்வே கால அட்டவணைகள் ஒவ்வொரு ஆண்டிலும் இலட்சக்கணக்கில் வெளியாகின்றன. ஒவ்வொரு அட்டவணையிலும் ஒரு ரயில்வே வரைபடம் இணைக்கப்படுகிறது. புது அட்டவணை வந்தவுடன் பழைய புத்தகத்தை அப்படியே தூக்கி எறிகிறோம், அல்லது பழைய பேப்பர்காரருக்குப் போட்டு விடுகிறோம்.

மாறாக, புதிய புத்தகம் வந்தவுடன், பழைய புத்தகத்தில் உள்ள வரைபடத்தை எடுத்து, அதை பள்ளிகளுக்குக் கொடுத்து உதவினால், மாணவர்கள் மகிழ்ச்சியும், பயனும் அடைவார்கள்.

- தி.வி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 90




**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# விஜய் 'கில்லி' பதில்கள்!



★ மே 10 அன்று ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினீர்களா விஜய்? உங்கள் வோட்டு யாருக்கு?

- ஆர். செல்வம்,
மன்றச் செயலாளர், குஷி விஜய் ரசிகர் மன்றம், வாலகுடி

அதிகாலை ஏழு முப்பது மணிக்கே வோட்டுப் போட்டேன். யாருக்குப் போட்டேன் என்பதை வெளியே சொல்வது தர்மம் இல்லை. நீங்களும் வெளியே சொல்லாதீர்கள். தேர்தல் முடிந்த பிறகு எக்ஸிட் போல் கருத்துக் கணிப்பில் யாருக்குப் போட்டோம் என்பதை நிறையப் பேர் சொல்லப் போய், அதனால் நம்ம நாட்டு ஷேர்மார்க்கெட்டில் எவ்வளவு நஷ்டம் பார்த்தீர்களா?



★ சென்னை சாலிகிராமத்திலிருந்து, அடையாறுக்குக் குடி போய் விட்டீர்களாமே! என்ன தனிக்குடித்தனமா?

- ஆர். சதீஷ்குமார், லவ்கிங் விஜய் ரசிகர் மன்றம், உறையூர்

எஸ்! திருமணம் முடிந்த பிறகு, தனிக்குடித்தனம் போனால்தான் பொறுப்பு வரும் என்று அப்பா செய்த ஏற்பாடு. எவ்வளவு மறுத்தும் அவர் கேட்கவே இல்லை. ஆரம்பத்தில் கொஞ்சம் அசௌகரியமாக இருந்தது. இப்போது அடையாறு வீடும் பிடித்திருக்கிறது.



★ யார் யாரோ மணிரத்னம், ஷங்கர் படங்களில் நடிக்கிறார்கள். நீங்கள் ஏன் இன்னும் நடிக்கவில்லை?

- என். கபூர்கான்,
மாநகர்ப் பிரதிநிதி, ஃபாஸ்ட் கிங் விஜய் மன்றம், குடமுருட்டி, திருச்சி

அவங்க இயக்கத்தில் நடிக்க நான் தயாராகத்தான் இருக்கேன். இதுவரை, அவங்ககிட்டேயிருந்து அழைப்பு வரவில்லை. வரும்னு காத்துக்கிட்டு இருக்கேன்.



★ காதல் தோல்விக்கு மருந்து உண்டா விஜய்?

- ஏ. செந்தில்,
தலைவர், 'கில்லி' அ.இ.காதலர்களின் இதயத் துடிப்பு, விஜய் ரசிகர் மன்றம், சூளைமேடு, சென்னை

உண்டு. உங்கள் தொழிலைக் காதலியுங்கள்.



★ ஒரு நடிகனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்?

- பி. சுரேஷ்,
செயலாளர், 'கில்லி' அ.இ.காதலர்களின் இதயத் துடிப்பு, விஜய் ரசிகர் மன்றம், சூளைமேடு, சென்னை

1. திறமை 2 தோற்றம் 3. பொறுப்பு 4 ஈடுபாடு 5 ஒழுக்கம்



**வாசகர்களும் 'விஜய் கேள்வி', கல்கி சென்னை-97 என்று குறிப்பிட்டு போஸ்ட் கார்டில் கேள்விகள் அனுப்பலாம்.**

★ ரசிகர்கள் எல்லாம் தங்களுக்குப் பிடிச்ச ஹீரோ, ஹீரோயினைப் பார்க்க, பஸ் பிடித்து சென்னைக்கு வர்றாங்க! ஆனா எந்த நடிகரும் ரசிகர்களைத் தேடி வந்து, பார்த்ததாக நான் கேள்விப் படவில்லை. நீங்களாவது ரசிகர்களைத் தேடி வருவீங்களா?

- அ. ரேணுகா,
ப்ளஸ் ஒன் மாணவி
எஸ்ரிதிங் இம்பாசிபிள்
விஜய் ரசிகர் மன்றம்,
முதலியார் தெரு,
உறையூர், திருச்சி.




சூப்பரா கேட்டீங்க ரேணுகா! ஆனா நீங்க பேப்பரோ, பத்திரிகையோ - படிக்க மாட்டீங்கன்னு மட்டும் தெரியுது. மற்ற நடிகர் நடிகைகளைப் பற்றி நான் சொல்லக் கூடாது. கடந்த மாதம் நான் பாண்டிச்சேரி போயிருந்தேன். ஏன் தெரியுமா? சீர்காழி, சிதம்பரம், கடலூர் இந்த மூன்று பகுதி ரசிகர்களையும் மையமாக இருக்கும் பாண்டிச்சேரிக்கு வரவழைச்சு, அவங்களோட கெட் டு கெதர்லே கலந்துகிட்டேன். ரொம்ப நல்ல அனுபவம். இதே போல, மூன்று மாதத்திற்கு ஒருமுறை, மூன்று மாவட்ட ரசிகர்களை, அந்த மூன்று மாவட்டத்திற்கும் மையமாக இருக்கிற ஒரு ஊர்லே சந்திக்கிறதுன்னு திட்டம். இப்போ சொல்லுங்க இந்த விஜய் ரசிகர்களைத் தேடி வர்றவன் தானே?

சிறந்த கேள்விக்கான பரிசாக
விஜய்யின் 'மதுர' திரைப்படப் பாடல்
ஆடியோ காசட்டை
அ.ரேணுகா பெறுகிறார்.

# மயக்கும் மருத்துவம்!





• சந்திரசேகர்

அனஸ்தீஸியா நிபுணர் விழிப்போடு இருக்க வேண்டும்; பொறுப்பு அதிகம்" என்கிறார் சந்திரசேகர்.

பதினாறு வயதுப் பையனுக்கு மூக்கில் ட்யூமர். ஆபரேஷனுக்கு அழைத்துப் போனார்கள். எக்கச்சக்கமாக இரத்தம் போயிற்று. பிபிஐ குறைத்துவிட்டால் இரத்தப் போக்கும் குறையும். அதற்கான மருந்துகளைக் கொடுத்தார் அனஸ்தீஸியா நிபுணர். ஆனாலும் மறுபடி இரண்டாவது ஆபரேஷன் அப்போதே தேவைப்பட்டது. தேவையான இரத்தத்தைத் தயாராக வைத்திருந்து கொடுத்து, அறுவைச் சிகிச்சை முடிந்த பிறகு பிபியைச் சற்றே அதிகரித்து, பையனைக் காப்பாற்றினார்கள். மூன்று மாதங்களுக்குப் பிறகு பையன் பரிசோதனைக்கு வந்தபோது, நிலைமை சீராக இருந்தது. அனஸ்தீஸியா நிபுணர் கூடவே இருந்ததால் பையனை ஆபரேஷனின்போது சரியாகக் கவனித்து, காப்பாற்ற முடிந்தது!

"அறுவைச் சிகிச்சை ஆரம்பிக்கு முன் சரியான அளவில் அனஸ்தீஸியா கொடுத்தால், நோயாளி விரைவில் நினைவு திரும்பி எழுந்திருப்பார். இல்லாவிட்டால் நான்கு மணி நேரத்தில் விழித்து எழ வேண்டியவர், இருபது மணி நேரம் கழித்தே எழுந்திருப்பார்!" என்கிறார் அனஸ்தீஸியா நிபுணர், பேராசிரியர் ஆர். சந்திரசேகர்.

"அறுவைச் சிகிச்சைக்கு முன்னும், முடிந்த பிறகும், நோயாளியுடன் கூடவே அனஸ்தீஸியா நிபுணர் இருத்தல் நல்லது. இதயத்துடிப்பு சீராக இருக்கிறதா, ஆக்ஸிஜன் மாஸ்க் தேவையா என எல்லாவற்றையும் கவனிக்க முடியும். ஆக, ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணரைவிட,

இந்தியாவிலேயே அனஸ்தீஸியா துறை மருத்துவர்களுக்காக செய்தி மடல் தயாரித்து வெளிக் கொண்டு வரும் ஒரே அமைப்பு, சென்னை மருத்துவக் கல்லூரியின் அனஸ்தீஸியா துறைதான். "இதை எல்லா அனஸ்தீஸியா நிபுணர்களும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்! அனஸ்தீஸியா நிபுணர்களுக்கு உலகெங்கும் டிமாண்ட் இருக்கிறது. இந்த வருடம் இருபது பேர் தேர்ச்சி பெற்றால், பத்துப் பேர், மறுநாளே இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போய்விடுகிறார்கள்!" என்கிறார் பேராசிரியர் சந்திரசேகர்.

ஜூன் 13 அன்று சென்னையில் மிகப் பெரிய அனஸ்தீஸியா மாநாடு நடைபெறுவது குறித்து இத் துறையினர் பெருமிதம் கொண்டுள்ளனர். துறையின் சர்வதேச அளவிலான முன்னேற்றங்கள் மாநாட்டில் அலசப்படும்.

- சாருகேசி

என் குழந்தைகள் படிக்கிற ஸ்கூலில் பேரண்ட்ஸ் மீட்டிங் நடக்கும் போது, டீச்சர்களிடம் இங்கிலீஷில் பேச ஆசை.

குழந்தைகள் பாடத்தில் சந்தேகம் கேட்டால், 'உங்க அப்பாகிட்ட போய் கேளுங்க'ன்னு சொல்லாம நானே இங்கிலீஷில் அவங்க டவுட்டை கிளியர் பண்ணணும்னு ஆசை.



போன்ல யாராவது இங்கிலீஷ்ல பேசினால், நானும் கம்பீரமா இங்கிலீஷில் பதில் சொல்லணும்னு ஆசை.

என் கணவரோட பார்ட்டிக்குப் போனால், அங்க வர்றவங்களுக்கு சமமா இங்கிலீஷில் பேசி அசத்தணும்னு ஆசை.

எங்க லேடீஸ் கிளப் மெம்பர்கள் மத்தியில் இங்கிலீஷில் பேசி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தணும்னு ஆசை.

என் ஆசையெல்லாம் நிறைவேற சரளமா இங்கிலீஷ் பேசத் தெரியலையேன்னு நெனைச்சா வருத்தமாத்தான் இருக்கு. அதுக்கு என்ன பண்றது?

இது ஒரு பிரச்சனையே இல்லை.

ஒரு போஸ்ட் கார்டில், 'நான் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன்' என்று எழுதி, உங்கள் விலாசத்தை தெளிவாகக் குறிப்பிட்டு, விவேகானந்தா இன்ஸ்டிட்யூட், *P.B.No. R 4986*, 9 மேட்லி ரோடு, தி.நகர், சென்னை—*600 017* என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங்கள்.


இல்லேன்னா *(044) 24347034* என்ற நம்பருக்குப் போன் பண்ணுங்க. ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸை *VPP* மூலம் அனுப்பி வைக்கிறோம். ரூ.575/– செலுத்தி பாடங்களை வாங்கி தினமும் அரை மணி நேரம் சீரியல் பார்க்க காட்ற அதே ஆர்வத்துடன் பயிற்சியை ஆரம்பியுங்கள். உங்கள் ஆசை நிச்சயம் நிறைவேறும்.

அப்புறமென்ன... நீங்களும் அசத்தலாய் இங்கிலீஷ் பேசி ஜமாய்க்கலாம்! ●

# ஆசை நிறைவேறுமா?

ADVT

# கிருஷ்ணா... கிருஷ்ணா...



இந்திய உணர்வோட்டத்தில் கலந்து போயிருக்கும் சித்திரம் கிருஷ்ணாவதாரம்.

எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியின் பார்வையில் இந்த அவதாரம் அரியதொரு நவீன வடிவம் கொண்டிருக்கிறது. 'கிருஷ்ணா கிருஷ்ணா' நாவலின் தலைப்பு. மனவியல், அரசியல், சமூகவியல், மற்றும் தத்துவம் சார்ந்த கேள்விகளை எழுப்பியும் விடைகள் தேடியும் கிருஷ்ணனுக்கு ஒரு புதிய பரிமாணம் அளிக்க இந்திரா பார்த்தசாரதி முயன்றிருக்கிறார்.

கண்ணனை நவீனப்படுத்தும் இந்த முயற்சியை பௌராணிகர்களும் தீவிர பழைமைவாதிகளும் கூட ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் எதிர்க்க முடியும். ஏனெனில் கிருஷ்ணனின் அவதாரச் சிறப்பை இந்த நாவல் குறைத்து மதிப்பிடவில்லை; பக்திக்கும் நம்பிக்கைக்கும் சவால் விடவில்லை; சீண்டவில்லை, நையாண்டி செய்யவில்லை. இந்த அவதாரத்தின் இழைகளை நவீன சிந்தனையில் இ.பா. நெய்து முடிக்கிற போது, 'கிருஷ்ணா என்பது சட்டம், சாத்திரங்களுக்குள் அடங்காத வாழ்க்கை தர்மம்' என்கிற கருத்து மென்மையாக, மௌனமாக, உறுதியாகப் பதிவாகிறது. கிருஷ்ணன் கதை தோற்றுவிக்கும் வண்ணமயமான உணர்வுக் கலவைகள் மிக எளிமையாகவும் நேரடியாகவும் நமக்கு அனுபவிக்கக் கிடைக்கின்றன.

இத்தனைக்கும், கதை சொல்ல இ.பா. கையாண்டுள்ள யுக்தி சற்று சிக்கலானது. ஜரா என்கிற வேடனிடம் கிருஷ்ணன் தன் கதையைச் சொல்ல, அதை வேடன் நாரதரிடம் கூற, நாரதர் நம்மிடம் கூறுகிறார்! (பாகவதம் போல்தான்) தற்காலப் பார்வைக்கு ஏற்ப சில ஒப்பீடுகளை நாரதர் சுட்டிக்காட்டும் போது இந்த அவதாரத்தின் முற்றிலும் ஹ்யூமன் ஃபேஸ்ஐக் கண்டு மகிழ்கிறோம்.

'ராதா பாட்டி'யைப் பார்க்க விரும்பாமல் கிருஷ்ணன் திரும்பி விடுகிற சம்பவம் கூட அந்த மனித முகத்தின் அடையாளம்தான்!

விலகி நின்று 'கிருஷ்ணா'வைப் பார்த்தாலும் மகிழ்வோடு பார்த்திருக்கிறார் இந்திரா பார்த்தசாரதி.

தமிழில் இது ஒரு முக்கியமான நாவல். அட்டையும் உள்ளே சித்திரங்களும் ஆதிமூலம் வரைந்துள்ளார். இதில் காணப்படும் சராசரிக்கும் மிக அதிகமான அச்சுப் பிழைகள், அடுத்த பதிப்பில் கட்டாயம் நீக்கப்பட வேண்டும்.

- சீதா ரவி

வெளியீடு : மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்,
375/8-10, ஆற்காடு சாலை,
சென்னை - 600 024.
விலை ரூ. 95.



# சாடுகிறார் இராம. கோபாலன்!

இந்து முன்னணியின் தலைவர் இராம. கோபாலனுக்கு எழுபத்தி ஆறு வயதாகிறது. சுறுசுறுப்புக்குக் குறைவில்லை. மாதத்தில் பாதி நாட்களுக்கு மேல் பயணம், பிரசாரம் என்று பிஸி. எங்கே போனாலும் கூடவே ஏ.கே.47 ஏந்திய காவலர் பாதுகாப்பு. சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கும் இந்து முன்னணி அலுவலகத்தில் அவரைச் சந்தித்த போது...

*"முதல்வர் ஜெயலலிதா மதமாற்றத் தடை சட்டம் கொண்டு வந்தபோது அதை வரவேற்று, அவரை இந்து மதத்தின் காவலர் என்று பாராட்டினீர்கள். தேர்தலில் தோல்வி கண்டவுடன் அவர் சட்டத்தை வாபஸ் பெற்று விட்டார். ஆக, ஜெயலலிதா கட்டாய மதமாற்றத் தடை சட்டம் கொண்டு வந்தது, இந்து மத அபிமானத்தால் இல்லை. அவருக்கு வோட்டுதான் முக்கியம் என்பது நிரூபணமாகி விட்டதல்லவா?"*

"ஒரு சில விஷயங்களில் ஜெயலலிதா மிகவும் தைரியமாக முடிவு எடுப்பார். அதை திடமாய்ச் செயல்படுத்துவார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் தேர்தலில் தோல்வி அடைந்தவுடன் மத மாற்றத் தடை சட்டத்தை வாபஸ் பெற்று விட்டது மிகுந்த மனவருத்தத்தை அளிக்கிறது.

எனக்கு ஒரு ஜோக் ஞாபகம் வருகிறது. அரசியல்வாதி ஒருவரிடம், "பாண்டவர்கள் நல்லவர்களா? கௌரவர்கள் நல்லவர்களா?" என்று கேட்டார்கள். அந்த அரசியல்வாதி, "கௌரவர்கள்தான் நல்லவர்கள்" என்று சொன்னார். "காரணம் என்ன?" என்று கேட்டபோது, "அவர்களிடம் தானே நூறு வோட்டுக்கள் இருக்கின்றன என்றாராம் அந்த அரசியல்வாதி.

ஆக, அரசியல்வாதிகள் என்றால் வோட்டு தான் முக்கியம் என்றாகிவிட்டது.




*"குஜராத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதை திடீரென்று வாபஸ் வாங்க என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?"*

"உண்மையிலேயே எனக்குத் தெரியவில்லை; என்னால் யூகிக்கவும் முடியவில்லை. அவரைச் சந்தித்துப் பேச நேரம் கேட்டிருக்கிறேன். சந்திக்கிறபோது, இந்தச் சட்டத்தை எதற்காக வாபஸ் பெற்றீர்கள் என்று நிச்சயம் கேட்கத்தான் போகிறேன்."

*"அந்தச் சட்டம் ஆறு மாதகாலத்துக்கு மேல் அமலில் இருந்தது*



"உங்களை கட்சியில சேர்த்துக்கிட்டேன் இல்ல... இப்போ நீங்க எனக்கு ஹீரோ சான்ஸ் வாங்கித் தரணும்..."
_ எஸ். மோகன்

என்றாலும், அதன் அடிப்படையில் யார்மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அப்படி என்றால், சட்டம் கொண்டு வந்ததால் கட்டாய மதமாற்றம் தடைபெறவில்லையா? இல்லை அவசியமே இல்லாதபோது, சட்டம் கொண்டு வரப்பட்டதா?"

கட்டாய மதமாற்றம் தடை செய்யப்பட்டாலும், இல்லாவிட்டாலும், ஆங்காங்கே சிஸ்டமாடிக்காக மதமாற்ற வேலை நடந்து கொண்டுதான் இருக்கிறது.

"அதற்குக் காரணம்? வறுமையும், தீண்டாமையும்தானே?"

"வறுமை, மதமாற்றத்துக்குக் காரணம் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். வெள்ளிக்கிழமைகளில் பகலில் மசூதிகள் பக்கம் போய்ப் பாருங்கள். எத்தனை முஸ்லிம் ஆண்களும் பெண்களும் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, மதம் மாறினால் வறுமை போய்விடும் என்பது தவறு. ஆனால் தீண்டாமை ஒரு காரணம் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தீண்டாமையை ஒழிக்க, இந்து முன்னணி தொடர்ந்து முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறது.

"நடந்து முடிந்த தேர்தலில் பா.ஜ.க. தோல்வி அடைந்ததற்கு என்ன காரணம்?"

"பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். அதில் அயோத்திப் பிரச்னையும் ஒன்று. பா.ஜ.க. ஆட்சி செய்த ஐந்தாண்டு காலத்தில் அயோத்திப் பிரச்னைக்குத் தீர்வு காண்பார்கள் என எதிர்பார்த்து ஏமாந்தவர்களும் உண்டு. அது கூட ஒரு காரணம்.

"அயோத்தி பிரச்னையில் கோர்ட் தீர்ப்பை ஏற்போம். அதே சமயம் சம்மந்தப்பட்ட இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலமாக சுமுக தீர்வு கண்டாலும் சம்மதம் என்கிற காங்கிரஸ் அணுகுமுறை, பா.ஜ.கவின் அயோத்தி பிரச்னை குறித்த அணுகுமுறையிலிருந்து எப்படி மாறுபட்டது?"

"இதற்கு பா.ஜ.க.தான் பதில் சொல்ல முடியும். கோர்ட் தீர்ப்பு, பேச்சு வார்த்தை என்ற பா.ஜ.க. அணுகுமுறையை காங்கிரஸும் ஏற்றுக் கொள்ளுமானால், அது பாராட்ட வேண்டிய விஷயம்தானே?"

"கால்நடைகளை பலியிடத் தடை அதனைத் தொடர்ந்து சட்டம் வாபஸ் - இதில் எது சரி, எது தவறு என்று நினைக்கிறீர்கள்?"

"என்னைப் பொருத்தவரை இரண்டுமே சரி! சட்டம் கொண்டு வந்தது சரிதான். ஆனால் சட்டம் மக்கள் மத்தியில் வரவேற்கப்படவில்லை என்று தெரிந்தவுடன் அதை வாபஸ் பெறுவதும் சரிதானே? ஆனால் இதில் செய்யத் தவறிய விஷயம் ஒன்று உண்டு. 'உயிர்பலி கூடாது' என்று ஜீவ காருண்ய பிரசாரம் செய்து, அதை ஏற்கும் அளவுக்குப் பக்குவப்படுத்தி இருக்க வேண்டும். பீடாதிபதிகள் முதல் ஆதீன கர்த்தாக்கள் வரை எல்லோரும் இதைச் செய்திருக்கலாம்."

'நீங்கள் கடந்த தேர்தலின் போது, பா.ஜ.க - அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தீர்களே! பிரசாரத்தின் போது, மக்கள் மனமாற்றத்தை அடையாளம் காண முடிந்ததா?"

கருணாநிதி ஓர் இந்து விரோதி. இதற்கு, அவர் 'முரசொலி'யில் எழுதியவற்றையே ஆதாரம் காட்டி ஒரு புத்தகமே எழுதி இருக்கிறேன். அதைத்தான் தமிழ்நாடு முழுவதும் நாற்பது நாட்கள் பிரசாரம் செய்த போதும் திரும்பத் திரும்பச் சொன்னேன். ஆனால், மக்கள் ஏன் மனசு மாறி அ.தி.மு.க.-பா.ஜ.க.வுக்கு எதிராக வோட்டுப் போட்டார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

சந்திப்பு: எஸ். சந்திரமௌலி

படம்: யோகா

கடைசி வரை முதல்வர் யார் என்ற ஹிட்ச்காக் சினிமா சஸ்பென்ஸை மிஞ்சும் த்ரில்லர் பெங்களூரில் அரங்கேறியது. இவரா அவரா... என்று செம டென்



# பெங்களூர் பாபா!

ஷன். கடைசியில், ஏகபோகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் முதல்வர் தரம்சிங். செல்லப் பெயர் 'பாபா'!

ராஜபுத்திரரான தரம்சிங்குக்கு, கட்சியில், தொகுதியில் நல்ல பெயர். "பதவிக்குப் பின்னால் அவர் ஓடியதேயில்லை; பதவிதான் அவரைத் தேடி வரும்" என்று நற்சான்றிதழ் வாசிக்கிறார்கள்.

கர்நாடகாவின் இருபத்து நான்காவது முதல்வராகப் பதவியேற்ற தரம்சிங், எட்டுமுறை தொடர்ச்சியாகத் தேர்தலில் வெற்றி பெற்றவர். குல்பர்காவில் லிங்காயத் இனத்தை எதிர்த்து தரம்சிங் வெற்றி பெற்றார் என்றால், அது பெரிய விஷயம்தான்!

மிகச் சிறிய வயதிலேயே தாயை இழந்து விட்ட தரம்சிங், வாழ்க்கையில் பல மேடுபள்ளங்களைக் கடந்தே இந்நிலையை அடைந்திருக்கிறார். ஐந்து சகோதரர்களில் கடைக்குட்டி தரம்சிங். விவசாயக் கூட்டுக் குடும்பம். மிகக் கஷ்டமான ஜீவனம். ஹைதராபாத்தில் தரம்சிங் படித்த போது, அவருடைய கல்லூரித் தோழர் மத்திய அமைச்சர் சிவ்ராஜ் பாட்டில். உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்பை முடித்து விட்டு, குல்பர்காவில் வழக்கறிஞராகவும் இருந்திருக்கிறார். 50களில் மாணவர் யூனியன் சங்கத் தலைவர், 60களில் ஹிந்தி ஆசிரியர், 80களில் அமைச்சர்... தற்போது முதல்வர்!

தரம்சிங்கின் மனைவி பிரபாவதி, அதிகம் பேசாமல் கணவரின் நிழலாகத் தொடர்பவர். இந்திராகாந்தியின் பரம விசிறி என்பதால், மகளுக்குப் பிரியதர்ஷிணி என்று பெயர்சூட்டியிருக்கிறார் தரம்சிங். அஜய், விஜய் என இரண்டு மகன்கள்.

காங்கிரஸ் - ஜனதா தள கூட்டணி அரசு கர்நாடகாவில்! தரம்சிங் ஆட்சியில், தர்ம பரிபாலனமா அல்லது கரம் கரம் வாக்குவாதமா... 'பாபா'வுக்குதான் வெளிச்சம்!

- லதா சேகர்

# சந்தா கட்டுங்க: சந்தோஷம் அள்ளுங்க!



# கல்கி

வழங்கும்

## வாழ்க வளமுடன்

உங்கள் வீடு மகிழ ஒரு

# லைஃப் ஸ்டைல் மலர்

- 'கல்கி' பத்திரிகைக்கு ஆண்டுச் சந்தா ரூ.330/- மட்டும் செலுத்துங்கள், ரூ.40/- பெறுமானமுள்ள 'வாழ்க வளமுடன்' லைஃப் ஸ்டைல் மலர் **இலவசமாக** அனுப்பி வைக்கப்படும்.
- ஏற்கெனவே சந்தாதாரராக இருப்போரும் ரூ.330/- செலுத்தி தங்கள் சந்தாவை நீடித்துக் கொண்டு, 'வாழ்க வளமுடன்' சிறப்பு மலரை **இலவசமாகப்** பெறலாம்.
- முந்துங்கள்! இந்த அறிவிப்புக்குப் பிறகு வரும் முதல் 500 சந்தாதாரர்களுக்கு மட்டுமே இச்சலுகை!


உங்கள் முழு விலாசம் தெளிவாக எழுதி, தொகையை DD / MO / காசோலை மூலம் 'KALKI' என்ற பெயருக்கு அனுப்பவும். வெளியூர் காசோலைகளுக்கு ரூ.30/- சேர்த்து அனுப்பவும்.

கல்கி லைஃப் ஸ்டைல் மலர் தனிப்பிரதியாகவும் கிடைக்கும். விலை ரூ. 40. கூரியரில் பெற ரூ. 60 அனுப்புங்கள்.

*முகவரி:*

சர்குலேஷன் மானேஜர், கல்கி காரியாலயம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097




## பழைய மூட்டைகளை இறக்கி வையுங்கள்!

"அ.தி.மு.கவுடன் கூட்டணி முடிந்தது" என்று நேற்று கூறிய வெங்கையா நாயுடு, 'அக்கட்சியுடன் நடைமுறை உறவுகள் தொடரும்' என இன்று அவசரமாக மறு அறிவிப்புச் செய்கிறார்!

ஜெயலலிதாவோ, தமிழக தேர்தல் முடிவுகள் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசின் பேரிலான விமர்சனமே அன்றி, தமது ஆட்சி குறித்த விமர்சனம் அல்ல என்கிறார்!

நேர் மாறாக உள்ளது அத்வானியின் அறிக்கை. 'பா.ஜ.க தோற்றதற்குக் காரணம் மாநில கட்சிகளுடன் கொண்ட கூட்டணியும் அக்கட்சிகள் நடத்திய ஆட்சி குறித்து அந்தந்த மாநில மக்களின் அதிருப்தியும்தான்' என்று பொறுப்பைத் தட்டிக் கழித்திருக்கிறார் அவர்!

தோல்விக்குக் காரணம், நிச்சயமாக குஜராத் விவகாரங்கள் அல்ல, என்று மறுக்கும் வாஜ்பாய், 'நமது அசிரத்தையும் வெற்றி நிச்சயம் என்கிற குருட்டு நம்பிக்கையும் எதிராளியைத் துல்லியமாக எடை போடவிடாமல் செய்து விட்டன' என்கிறார்!

பா.ஜ.க கூட்டணியின் தோல்விக்கு முக்கியமான




**கல்கி**



2004 ஜூன் 13
தாரண வைகாசி 31
மலர் : 62
இதழ் : 46

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.





காரணம், மத அடிப்படைவாதமும் ஏழைகளுக்கு ஏமாற்றமளித்த பொருளாதாரக் கொள்கைகளும்தான். இதனைச் சம்பந்தப்பட்ட தலைவர்கள் உணர்ந்தும் உணராததுபோல் ஏதேதோ காரணங்களை அடுக்கி வருவது வருத்தத்துக்குரிய விஷயம்.

மோடி பாணி அரசியல் உதவாது என்று கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக்குரல் எழ ஆரம்பித்திருக்கிறது. சங் பரிவாரைச் சேர்ந்த சுதேசி ஜாக்ரன் மஞ்ச், என்.டி.ஏவின் தோல்விக்குத் தவறான பொருளாதாரக் கொள்கைகளே காரணம் என்று சுட்டிக்காட்டியதோடு அல்லாமல், புதிய ஆட்சியின் குறைந்தபட்ச செயல் திட்டத்தையும் வரவேற்றிருக்கிறது!

பா.ஜ.கவின் ஒரு பிரிவினரும் அக்கட்சியின் ஆதரவு அமைப்பினரும் சுட்டிக் காட்டியிருக்கிற தவறுகளைக் கூட கட்சித் தலைமை ஒப்புக் கொள்ளாமல், தோல்விக்குச் சாக்குபோக்கு தேடுவது உதவாது.

விவசாயிகள், வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாமல் தற்கொலை செய்து கொண்ட காலகட்டத்தில் 'இந்தியா ஒளிர்கிறது' விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அவை கிளப்பிய எதிர்ப்புணர்வு அமைதியாக வேலை செய்துள்ளது. அந்த விளம்பர யுக்தி தோற்றது என்று அத்வானி கூறுகிறார். உண்மையில், தோற்றது விளம்பர யுக்தி அல்ல... சமச்சீரற்ற பொருளாதாரக் கொள்கைதான்.

இந்தியாவின் எந்த மாநிலத்திலுமே ஹிந்து - முஸ்லிம்கள் விரோதமின்றி வாழத்தான் விரும்புவார்கள். பல விதமான பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை உடைய எண்ணற்றோர் இசைந்து வாழும் நாட்டில், விரோதம் வளர்க்கும் விதமாகக் கையாளப்பட்ட வஞ்சக நடவடிக்கைகளும் ஹிந்து அடிப்படைவாதப்




பிரகடனங்களும் மக்களால் நிராகரிக்கப்பட்டிருப்பது மிகத் தெளிவு.

எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கும் நேரத்தில், அத்வானி - வாஜ்பாய் போன்ற தலைவர்கள் இந்த நிலைமையை உணர்ந்து செயல்படுவது அவசியமாகிறது. பா.ஜ.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவர் பதவி தவிர, சேர்மன் பதவி என்று புதிதாக ஒன்றை உருவாக்கி, வாஜ்பாயை அதில் அமர்த்தியுள்ளது கட்சித் தலைமை. இரு தலைவர்களுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும் என்கிற தீவிரம் இருந்தால் போதாது. நாடாளுமன்ற நடவடிக்கைகளைச் செவ்வனே நடத்திச் செல்வதற்கும் தீவிரம் காட்ட வேண்டும்.

எதிர்க்கட்சியின் பணி எதிர்ப்பதுதான் என்று முடிவு செய்து, குருட்டாம் போக்கில் எதிர்ப்பது, அவை நடவடிக்கைகளைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்வது என காங்கிரஸ் எதிர்க்கட்சியாக விளங்கியபோது அடிக்கடி செய்த தவறுகளை பா.ஜ.கவும் செய்துவிடக் கூடாது. சபாநாயகர் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எடுத்த முடிவை அக்கட்சி கைவிட்டது நன்மைக்கே. துணைச் சபாநாயகர் பொறுப்பை ஏற்று, ஆரோக்கியமான விவாதங்கள் நடக்கவும் அர்த்தமுள்ள முடிவுகள் எடுக்கப்படவும் எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும். இதைச் சரிவர செய்ய வேண்டுமானால், கட்சியின் தனிப்பட்ட, தவறான கொள்கை மூட்டையை இறக்கி வைத்துவிட்டு, நாட்டு நலன் என்கிற பரந்த நோக்கை முதலில் வரிக்க வேண்டும். ஆளும் கூட்டணியின் குறைந்தபட்ச செயல் திட்டத்தினை ஏற்று, அது சரிவர நிறைவேற்றப்படுகிறதா என எதிர்க்கட்சி கண்காணித்து, நல்ல யோசனைகளைக் கூறி வந்தாலே போதும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆரோக்கியமான வளர்ச்சியும் மாற்றங்களும் நிகழும். ○

# “குண்டுன்னு சொன்னா பெண்டு எடுப்பேன்”

செய்தது தப்புதான். என்றாலும் லஞ்சம் போன்ற குற்றங்களில் 'கொடுத்தவர்' தண்டனை அடைவது என்பது அரிதாக நடக்கும் விஷயம். மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் அபிஜித் கலே இந்த ஆண்டு இறுதிவரை கிரிக்கெட் போட்டிகளில் பங்குபெறக் கூடாது என்று தடை விதித்திருக்கிறது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடு அமைப்பு. தேசிய தேர்வாளர்களை தம் பெற்றோர் மூலம் சரிக்கட்டி அணியில் சேர கலே முயற்சி செய்தார் என்பதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறதாம். நிபந்தனையற்ற மன்னிப்பை ஏற்கெனவே கோரிவிட்ட கலே இப்போது ஆசுவாசப் பெருமூச்சு விடுகிறார். அடுத்த ஜனவரியிலிருந்து ஆட முயற்சிக்கலாமே!

• அபிஜித் கலே

ஓட்டுபவரின் திறமையே வெற்றிக்குக் காரணமாக இருக்க வேண்டுமே தவிர ஓட்டும் கார்களின் சிறப்புகளினால் ஒருவர் வெற்றி பெறக் கூடாது. இப்படி ஓர் எண்ணம் ஃபார்முலா - 1 பந்தய ரசிகர்களிடம் ஆழமாகவே உண்டு. இதற்கு மதிப்பு கொடுக்கும் வகையில் முதல் கட்டமாக 2006ம் ஆண்டு பந்தயங்களிலிருந்து போட்டியில் பங்கேற்கும் எல்லா கார்களின் டயர்களும் ஒன்று போலவே இருக்க வேண்டும் என்ற விதியை அறிமுகப்படுத்தவிருக்கிறார்கள்.

அர்ஜெண்டைனா, கியூபா, பிரேசில் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து, சுவிட்ஜர்லாந்துக்குச் செல்ல இருக்கிறார் அந்தப் பிரபல விளையாட்டு வீரர். ஆனால் இது பெருமை தரக்கூடிய நிகழ்ச்சி நிரல் அல்ல. அதிகமாக போதை மருந்தை உட்கொண்டதால் பிரபல கால்பந்து வீரர் மாரடோனா அடுத்தடுத்து தொடர் சிகிச்சை பெறுவதற்காக அழைத்துச் செல்லப்படும் நாடுகள் இவை!



• ரொனால்டோ

ஆனால் இப்படி எந்தத் தப்பும் செய்யாத பிரேசில் கால்பந்து வீரர் ரொனால்டோவுக்கு ஒரே கோபம். “நான் குண்டாக இருப்பதால்தான் என்னால் சிறப்பாக ஆட முடியலைன்னு யாராவது சொன்னா... அவ்வளவுதான்” என்று விமர்சகர்களை எச்சரித்திருக்கிறார். தமது எடை மிகவும் நார்மலாக இருக்கிறது என்கிறார். எவ்வளவு எடை? 88 கிலோ!

- ஜி.எஸ்.எஸ்



கடந்த ஐ.ஏ.எஸ். தேர்வில் கலக்கிய நம் தமிழர்களைப் போல், உங்களுடைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., கனவுகளை நிறைவேற்ற காத்திருக்கும் தளம் www.iasipscoaching.com மனிதவள மேம்பாடு முதல் உலகப் பொருளாதாரம் வரை ஏராளமான கட்டுரைகள், ஐ.ஏ.எஸ். தேர்வு நடக்கும் முறை, ஆலோசனைகள், மாதிரிகள் என நிறைந்திருக்கும் தளத்தில், மெயின் தேர்வு எழுதுபவர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வினாத்தாள்கள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

('இங்கே கலெக்டர்கள் உருவாக்கப்படுகிறார்கள்' என விளம்பரம் கொடுக்கலாமே!)

# கலெக்டராக... இங்க வாங்க!

கோடை விடுமுறையில் எங்கேயும் போக முடியாமல் வீட்டு விட்டத்தையே பார்த்துக்கிட்டு இருந்தீங்களா... அப்படியென்றால் kodai.com, ooty.net, yercaud.com, thekkady.net மற்றும் mudumalai.com போன்ற தளங்களுக்குச் சென்று உங்க ஆசையை தணிச்சுக்கோங்க! இந்த சுற்றுலாத் தளங்களோட வரைபடத்திலிருந்து முக்கியமான இடங்களோட புகைப்படங்கள் வரை கண்ணுக்குக் குளிர்ச்சியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

('துட்டை' சேமிக்க, 'நெட்டு' மூலமா இப்படியும் ஒரு வழி!)



ஒருவழியாக, ஜூன் மூன்றாவது வாரத்தில் தொடங்கப் பட இருக்கும் தமிழ்த் திரை சேனல், முதல் கட்டமாக ஐம்பத்து இரண்டு படங்களைத் தயாரிக்க இருக்கிறதாம். தமிழ்த்திரை சேனலிலேயே ரிலீஸ் ஆகப் போகும் அந்தப் படங்களில், முதல் ஐந்து படங்களை இயக்க பி.வாசு, பாரதிராஜா, சேரன், ரேவதி மற்றும் எழில் ஒப்புக்கொண்டுள்ளனராம். 'மனாஸ் விஷன்' என்ற பெயரில் டைரக்டர் மனோபாலாதான் நிர்வாகத் தயாரிப்பாளர் என்கிறது tamil.galatta.com

(ஹலோ டைரக்டர்ஸ்... 'சேனல்'னு சொல்லிட்டு 'மெகா சீரியல்' எடுத்துடாதீங்க!)

- முகில்

# வட்ட மேஜை




## பிடியுங்க டாக்டர் பட்டம்!

✉ ஏக்நாத்தின் 'ருசி' சிறுகதை அருமை. நெல்லை வட்டார நடையில் படைத்திருந்த கதையை உணர்வுமுட்ட உண்டு மகிழ்ந்தேன்.
தேனி, அல்லிநகரம் தாமோதரன்.

✉ 'நீங்கள் கேட்டவை'யில் 'நடிகை ரோஜாவை பாராளுமன்றத்துக்குள் எப்படி அனுமதிப்பார்கள்!' என்றுள்ளது. ரோஜா போட்டியிட்டது சட்டமன்றத் தொகுதிக்குத்தான், பாராளுமன்றத்துக்கல்ல!
தூத்துக்குடி - 2, மோசஸ் கோ. நாராயணன்.

✉ மன்மோகன்சிங் பிரதமரான இந்த நேரத்தில், 1997ல் கல்கிக்கு அவர் அளித்த பேட்டியைப் பிரசுரித்திருப்பது பாராட்டுதலுக்குரியது.
கல்பூண்டி, பூ. சீனிவாசன்.

✉ வாழைப்பழத்துக்குள் ஊசி ஏற்றுவதுபோல், ராகுலையும், தயாநிதி மாறனையும் ஒப்பிட்ட செம்பியன் செய்திகளைத் திரிப்பதில் பி.ஹெச்.டி பட்டம் பெற்றுவிட்டதால் இனி அவரை 'டாக்டர் செம்பியன்' என்றே அழைக்கலாம்.
சென்னை - 33, ஆர். கோபாலன்.

✉ ஆறு ரூபாய்க்கு இவ்வளவு செய்திகளையும் படங்களையும் பார்த்து என் மனது நிறைஞ்சுருக்கு. 'கல்கி'யைப் பாராட்ட தமிழ் வார்த்தைகளைத் தேடிக் கொண்டு இருக்கிறேன்.
திருச்சி - 22, எஸ்.ஜி. மாதவன்.

✉ மினி கல்கியும் சந்தடி சாக்கில் 'மெனு' கல்கியாக மாறி எங்களை வியப்பில் ஆழ்த்தி விட்டது.
சென்னை - 39, சுகந்தி நாராயண்.

✉ எஸ். ஜானகியின் 'அக்மார்க் சிரிப்பு' பற்றிய 'ரிமோட்' செய்தி கண்டேன். 'அக்மார்க்' என்பது Agricultural Marketing Products களுக்குத் தரப்படும் தரச் சான்றாகும். நாளடைவில் பொதுத் தரத்திற்கான சொல்லாகியிருக்கிறது.
ஈரோடு-9, சி. நாச்சிமுத்து.

✉ கல்கியின் தலையங்கம், நாட்டின் - சோனியாகாந்தியின் உணர்வுகளைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது. சோனியா காந்தியின் நல்லுணர்வு பாராட்டத்தக்கது.
சென்னை - 106, செந்தாமரை.

✉ 'அரசியல் கிச்சன்' ஆவி பறக்கும் சூடான.. சுவையான சுண்டல் சாரி... சுவை பொங்கும் கிண்டல்! பிரியாணியும் பழரசமும் சூப்பர் ருசி!
போடிநாயக்கனூர்,
எஸ்.எம். பாலசுப்ரமணியன்.

✉ ராமபிரானுக்கு 29வது வயதில் வனவாசம் ஏற்பட்டிருந்தால் 14 வருட வனவாசத்திற்குப் பிறகு 43 வயதில்தானே பட்டாபிஷேகம் நடந்திருக்க வேண்டும். ஆனால் வே.ந. கதிர்வேல் இது நடந்தது 39வது வயதில் என்று எப்படிக் கூறுகிறார்? சரியான கணக்கு இதோ. ராமபிரானுக்குத் திருமணம் நடந்தது 13 வது வயதில். வனவாசம் 25வது வயதில். பட்டாபிஷேகம் 39வயது வயதில்.
சென்னை - 6, ராமனாதன்.

**LEADER IN FASHION JEWELLERY FOR THE PAST 10 YEARS**

Cut This advertisment GET 20% DISCOUNT

EXCLUSIVE SILVER ANKLETS BANGLES, STUDS, BRACELETS GIFT ARTICLES

- Pearls, Choker
- Exclusive 1 Gm, 2 Gm, Gold Jewellery
- Temple Jewellery
- Fashion Jewellery
- Gold Jewellery
- Kundan
- Polki
- Korean Jewellery
- Theva Sets
- Ruby
- Emerald
- Coral Malas




**NARMADA** PEARLS & GEMS

**PURASAWAKKAM**
24, Ground Floor, Walkiki Complex,
Doveton Signal, Purasawakkam,
Chennai - 7. Ph : 2532 8011, 2640 0414.

**ADYAR**
A17, Ground Floor, #2, GOKUL ARCADE,
Sardar Patel Road, Adyar, Chennai - 20.
Ph : 24400035

Open on Sunday 11.00 a.m. - 8.00 p.m.

# 01 -14, Tekkamal, No.2, Serangoon Road, Singapore - 218227. Ph: 62924049, Cell: 94277255
Open on Sunday 10.00 a.m. - 8.00 p.m.
AMPLY SPACE CAR PARKING AVAILABLE





# வாஸ்துகலை ஜோதிடம்

## ஜி. விஜய் கிருஷ்ணா ராவ்

(எண் கணித, வாஸ்துகலை நிபுணர்)



இடிக்க வேண்டாம். உடைக்க வேண்டாம். இருக்கும் இடத்தையே எளிய முறையில் வாஸ்து மாற்றம் செய்து வளமாக வாழலாம். வியாபாரத்தில் முன்னேற்றமின்மை, கலைத் துறையில் சிக்கல், திருமணம் தாமதம், தீரா வியாதி, குடும்பத்தில் குழப்பம் இவை அனைத்துக்கும் வாஸ்து குறைபாடே காரணம். ஜாதகம் யோகமாக இருந்தும் சாதகமான வாழ்வு அமையவில்லையா? சந்தியுங்கள்:

அணுக வேண்டிய முகவரி:

G.K. ASTRO
ஜி. விஜய் கிருஷ்ணா ராவ்,
(எண் கணித, வாஸ்து கலை நிபுணர்.)
புதிய எண். 24, பழைய எண். 31,
அக்பராபாத் இரண்டாவது தெரு,
(லிபர்ட்டி தியேட்டர் அருகில்)
கோடம்பாக்கம், சென்னை 600 024
போன்: 23725404 செல்: 9841164648
E.MAIL: gkastro@vsnl.net

**G.K. ASTRO**
(COMPUTERISED HOROSCOPE)
**Rs.50/- Only.**

ஆலோசனை நேரம்:
தினமும்
மாலை 3.00 மணி முதல்
6.30 மணி வரை

ஒரு ஜாதகத்திற்கு நேரில் ஆலோசனை பெற : ரூ. 100 மட்டும்
வாஸ்து கலைக்கு நேரில் ஆலோசனை பெற : ரூ. 500 மட்டும்

ஞாயிறு விடுமுறை

மயிலிறகு
நடையில் கவிதைத்
தொடர்

# ஒரு தேவதை கல்லானால்

நெருப்பை விட
நீர் வலிமையானது!
நீரை விட
காற்று வலிமையானது!


காற்றைவிட
கவிதை வலிமையானது!
கவிதையை விட
கண்ணீர் வலிமையானது!

மண்ணின் கறையோடு
வரலாறு சொல்லும் கல்வெட்டுகளின்
அஸ்திவாரங்களில் எல்லாம்
எத்தனையோ புன்னகைகள்
புதையுண்டு போயிருக்கின்றன...

சரித்திரத்தைப் புரட்டிய
சாசனங்களின் கையெழுத்துச்
சுவடிகளில்...
எத்தனையோ உயிரணுக்கள்
உறைந்து கிடக்கின்றன...

சீமான்கள் அழுதால் துடைக்க
ஒரு கோடி விரல் நீளும்!
சாதாரணமானவன் அழுதால்
கண்ணீரைச்
சிறுமை செய்யும்!

இதோ ஒரு நிஜம்!



**பா.விஜய்**

ஒரு பருவவயசுக்காரியின்
பால்நிலா கனவுகள்
பஸ்மம் ஆன உண்மைகள்!

சரித்திரத்தின் மண்ணுக்கடியில்
இன்னமும் ஈரத்தோடு துடிக்கும்
ஓர் இதயத்தின் கதை!...

ஐந்து நூற்றாண்டுகள் முன்...
எட்டையபுரம்!

மணலும்... மணல் சார்ந்த
தொழிலுமாய்
மகிழ்ந்தெழுந்த பட்டணம்!

வயல்களின் இடுப்பில்
நண்டுகள் கிச்சுக்கிச்சு மூட்ட
வரப்பு சிலிர்த்த பகுதி!

அதோ
ஒரு பட்டாம்பூச்சியைப் பிடித்து
தட்டாம்பூச்சியாய் வருகிறாளே
ஒரு தாவணிக் கவிதை...
அவள்தான் சிவகாமி!

ரெட்டை ஜடை இடையளக்க...
ஒரு ஒடையை புன்னகையால்
ஓடவிட்டுக் கொண்டு வந்தாள்!

மருதாணிக் காடும்
மஞ்சள் காடும் கலந்து பூத்த
கலவை நிறத்தில் வந்த
காற்றுப் படா கன்னிச் சுளை!

அந்த இளமை வழிந்த
தேவதைக்கு
இரண்டு சகோதரர்கள்!

பெரியவன் மாணிக்க பூபதி!
சின்னவன் இளம்பெரு வழுதி!


1

அண்ணன்கள் இருவரும்
அசகாய தின்னர்கள்!

அண்ணன்கள் இருவருக்கும்
எட்டையபுரத்துப் படையில்
கத்தியெடுத்து சுற்றுவதே
காலம் தந்த கனவு!

பெற்றோரும் - உற்றாரும்
பெரிய மூதாட்டிகளும்
ஒரு குழுவாய் உறவாடிய
நிறை குடும்பம்!

ஊர்முழுக்க தெருமுழுக்க
ஒச்சுவீடு நின்றிருக்க
ஒச்சு வீடு மத்தியில் ஒரு
மச்சு வீடு இவர்கள் வீடு!

பூமுளைத்த திண்ணை!
கைவழுக்கும் தூண்!
செடிபடர்ந்த முற்றம்!
மரம் வேய்ந்த படிகள்
விளக்கொளிரும் பலகணி!
என
கவிதைகள் கொட்டிய
கலைக்கூடம் அவர்கள்
இல்லம்!

புஷ்பவதியான தங்கை
பூமியை அளக்கச்
சொன்னால்
அண்ணன்கள் இருவரும்
ஆகாசத்தையும்
அளப்பார்கள்!

அவர்களின்
மாட்டுக் கொட்டகையில் ஒரு
மல்யுத்தம் நிகழ்ந்தது அன்று!
யாருக்கும்? யாருக்கும்?

கொம்பு ஒரு பூக்காம்பாய்
முளைத்த கன்றுக் குட்டிக்கும்!
புலிநகச் சங்கிலி போட்ட
இளைய அண்ணன் பெருவழுதிக்கும்...

அப்பனார் சிரித்துவிழ...
அம்மையார் நகைத்துஎழ...
பல்போன பெரியபாட்டி
வெற்றிலைச் சாறு கசிய
வெடிவேட்டாய்ச் சிரித்திருந்தாள்!

ஒருகுட்டி ராணியாய்
வைக்கோல் கட்டின் மேல்
கால்மேல் காலிட்டு அமர்ந்திருந்தாள்
சிவகாமி!

சின்ன அண்ணன் பெருவழுதி
வேட்டியைத் தொடை இடுக்கில் செருகி

கன்றுக்குட்டியைக் கைப்பற்றி
ஒரு பட்டுப் பாவாடையோடு
போராடிக் கொண்டிருந்தான்!

தான் சின்ன வயசில்
அணிந்திருந்த பட்டுப்பாவாடையை
பசு ஈன்ற பசுங்கன்றுக்கு
அணிவிக்க வேண்டுமென்பது
சிவகாமி போட்ட தண்டோரா!

தங்கையின் ஆசைக்காக
ஊசிக் காதுக்குள்ளேயே
ஊர்வலம் போய்வருவார்களே
அண்ணன் மார்கள்!..

குட்டி அகப்பட்டால்
பாவாடை
நுழையவில்லை!
பாவாடை நுழைந்து
விட்டால்
குட்டி திமிற ஓடுகிறது!



திமிறி ஓடிய
கன்றுக்குட்டியை
முட்டி மோதித்
தூக்கினான்!
பெரியவனும் இந்தப்
பாவாடைச் சண்டையில்
பங்கெடுக்க, பார்த்திருந்த
குடும்பத்தினர்
வயிறு வலிக்கச் சிரித்தனர்!

பாசம் இப்படித்தான்!
கல் மனிதர்களைக் கூட
கூழாகக் குழைத்து
கூஜாவில் ஊற்றி வைக்கும்!

நெருப்புப் பிடித்த நெஞ்சங்களையும்
தூசாக உடைத்தெடுத்து
தூளியிலே ஆட வைக்கும்!

ஒரு வழியாய், கன்றுக்குட்டி
பட்டுப்பாவாடை சகிதமாய்ப்
பொட்டிடப்பட்டு பூச்சூட்டப்பட்டு
பரிதாபமாய் நின்றது
சிரித்தாள் சிவகாமி!
அண்ணனார் இருவரும்
அந்தரத்தில் மிதந்தார்கள்!

(தேவதை வருவாள்)

சிக்கென்ற மேனிக்கு

ஸ்லிம் ஃபேர்




100% Natural

No Side Effect

வியாபார விசாரணைக்கு

**குளோபல் நெட்வொர்க்,**
9, கண்ணதாசன் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 24.
போன் (044)24804133,
Telefax.23722656

SITA 04/001



# 1000s
## of Successful Marriages



**log on, register for free and get**

# Married!

இலவசமாக ரிஜிஸ்டர்
செய்து தங்களுக்கினிய
வாழ்க்கை துணை
அமையப் பெற்று
மகிழ்வடையுங்கள்

**swayamwara.com**

571 A, Anna Salai, (Opp. to DMS)
Teynampet, Chennai - 600 018.
**Phone : 044 - 5529 5050, 5212 2800**
**24 Hours Help line : 044 - 3103 6222**
email : info@swayamwara.com
**www.swayamwara.com**

**Premier Matrimonial Services Portal**

www.swayamwara.com / tam / June 2004

# தோல்விகள் தொடாத மனிதர்!

"'தியாகபூமி' திரையரங்குக்கு வந்து ஒருவார காலம் ஆகியிருக்கும். வெள்ளை ஆட்சியாளர்களுக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கும் அந்தப் படத்தைப் பார்த்த பொதுமக்கள் மத்தியில், சுதந்திர எழுச்சி, தீ போல பற்றியெரிந்தது. அந்தப் படத்தை வெள்ளைக்கார அரசாங்கம் தடைசெய்யப் போகிறது என்று தகவல் ஓர் உயர் போலீஸ் அதிகாரியிடமிருந்து வந்தது. அவ்வளவுதான்! அப்பா துளிகூட பதற்றப்படவில்லை. "உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி தடையுத்தரவை எவ்வளவு தாமதப்படுத்த முடியுமோ, அவ்வளவு தாமதப்படுத்துங்கள்" என்றார். அடுத்த கணம், 'தியாக பூமி' எங்கெல்லாம் திரையிடப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் எல்லா காட்சிகளையும், பொதுமக்களுக்கு இலவசமாகக் காட்டுங்கள் என்று தகவல் அனுப்பினார்.


• கே. சுப்ரமண்யம்

"சென்னையில் கெயிட்டி தியேட்டரில் மட்டும் 'தியாக பூமி' பரபரப்பாக ஓடிக்கொண்டிருந்தது. சுறுசுறுப்பாக அங்கே கிளம்பினார் அப்பா. பத்து வயதுச் சிறுவனாக நானும் அவரோடு தொற்றிக்கொண்டேன். தடைசெய்யப்பட்ட படத்தின் இலவசக் காட்சி என்றதும், மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்துவிட்டார்கள். நானும் அப்பாவும் திரையரங்கின், பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். கூட்டம் கட்டுக்கடங்காமல் போய், திரையரங்கின் மதில் சுவர் இடிந்து விழுந்தது. அப்படியும் படம் நிறுத்தப்படவில்லை. முதல் ரீல் ஓடி முடிந்ததும், அதை ஓர் ஊழியரிடம் கொடுத்து திருவல்லிக்கேணி ஸ்டார் தியேட்டரில் திரையிடும்படி சொன்னார் அப்பா. பெருமிதமும், கம்பீரமும் கலவையான உணர்ச்சியாக அவரது முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பணத்தைவிட, தமது படைப்பின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதில் மட்டுமே குறியாக இருந்த லட்சிய புருஷர் அவர்" என்று தமது தந்தை இயக்குனர் கே. சுப்ரமண்யத்தை நினைவு கூர்கிறார் 'நிருத்யோதயா' வி.பாலகிருஷ்ணன்.

சினிமா சாதனத்தை, தேசிய பிரசாரத்துக்காகவும் சமுதாய மறுமலர்ச்சிக்காகவும் பயன்படுத்திய முதல் இயக்குனர், தமிழ் சினிமாவின் தந்தை டைரக்டர், கே.சுப்ரமண்யம். இவரது நூற்றாண்டு, கடந்த ஏப்ரல் முப்பதாம் தேதியன்று தொடங்கியிருக்கிறது.

"வக்கீல் தொழில் பார்த்துக் கொண்டிருந்த சுப்ரமண்யம், அதை உதறிவிட்டு, பிரபல திரைப்பட இயக்கு



இடமிருந்து வலம்: பாமாரமணன்(மருமகள்), ராம்ஜி (மகன்), பத்மாசுப்ரமண்யம்(மகள்) கிருஷ்ணஸ்வாமி(மகன்), மாஸ்டர் ரகுராம்(பேரன்), ராமச்சந்திரன் (பேரன்) பாலகிருஷ்ணன்(மகன்), எஸ்.வி.ரமணன் (மகன்)

னர் ராஜா சாண்டோவிடம் உதவி இயக்குனராகச் சேர்ந்திருக்கிறார். 1934ல் 'பவனக் கொடி' படத்தின் மூலம் திரைப் பட இயக்கத்தில் இறங்கினார். அதன் பிறகு அவரது ஒவ்வொரு படமும், அந்தந்த காலகட்டத்தின் சமுதாயப் பிரச்னைகளை, சீர்திருத்தப்பார்வையோடு அணுகும் படைப்பாகவே இருந்தது. சினிமா அவருக்குச் சீர்திருத்த ஆயுதம்'' என்று சொல்லும் எஸ். கிருஷ்ணஸ்வாமி, நூற்றாண்டு நாயகரின் புதல்வர்களில் ஒருவர், இந்திய சினிமா வரலாற்றைத் தொகுத்தவர்.

''சுதந்திரத்துக்கு முன்பு ஜாதிப்பாகுபாடுகளும், தீண்டாமைக் கொடுமையும் தலை விரித்து ஆடின. 1936ல் 'பாலயோகி' படத்தை எடுத்தார். அதில் பேபி சரோஜா (தமிழ் சினிமாவின் முதல் குழந்தை நட்சத்திரம்) ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வீட்டுப் பணியாளன் வீட்டில் சாப்பிட்டு விடுவார். இதை அறிந்த அவரது பெற்றோர், சிறுமியைக் கண்டிப்பார்கள். அப்போது பெற்றோரைப் பார்த்து, ''உயர்ந்த ஜாதியின் பசிக்கும், தாழ்ந்த ஜாதியின் பசிக்கும் வித்தியாசம் உண்டா?'' என்று கேட்பான். இப்படி சாட்டையால் அடிப்பது போல், காட்சிகள் இருக்கும். தமது படைப்பில் அவர் காட்டும் சீர்திருத்தங்களை அப்படியே நிஜ வாழ்விலும் கடைப்பிடிப்பார் அப்பா'' என்கிறார் கிருஷ்ணசாமி.

''கிராமத்தில் இருந்த எங்கள் வீட்டில், சிறுவர்களாக இருந்த எனக்கும், எனது சகோதரர் எஸ்.வி. ரமணனுக்கும் உபநயனம் முடிந்து விருந்துக்கு ஏற்பாடானது. எனது தந்தையார், தலித் பண்ணைத் தொழிலாளர்களை அழைத்து வந்து, எங்களோடு அமர வைத்து,

அவரும் அமர்ந்து சமபந்தியாகச் சாப்பிட்டார். ஆச்சாரம் கெட்டுவிட்டது என்று அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சண்டைக்கு வந்தார்கள். எனது தந்தையார் சிறிதும் சட்டை செய்யவே இல்லை. ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இன்னும் அந்த சம்பவம் அப்படியே நினைவில் இருக்கிறது'' என்று பெருமிதம் கொள்கிறார் கிருஷ்ணசாமி.

''ஒருமுறை குற்றாலத்துக்குப் போயிருந்தோம். அங்கே பன்னிரண்டு வயது ஏழைச் சிறுமி ஒருத்தி 'ஆதரவற்றவர்களுக்கெல்லாம் வான் அமுதம் அளிக்கும் தீனபந்து' என்ற பாடலை சோகமாக, அதே நேரம் அற்புதமாகப் பாடிக் கொண்டு வந்தாள். அப்பா இயக்கிய 'சேவாசதன்' படத்தில் எம்.எஸ்.அம்மா பாடிய பாடல் அது. இதைப் பார்த்து உருகிய அப்பா, சிறுமியை அருகே அழைத்து உச்சி முகந்து பாராட்டினார். பக்கத்திலிருந்த சிறுமியின் தந்தை அப்பாவை அடையாளம் கண்டு கொண்டு ஓடி வந்தார். அவர்களைச் சென்னை வரச் செய்து, அந்தச் சிறுமியை இசைக் கல்லூரியில் சேர்த்து, படிக்க வைத்தார். பின்னாளில் அதே இசைக் கல்லூரியின் பேராசிரியராகவும், புகழ்பெற்ற பாடகியாகவும் திகழ்ந்த டி.வி. ரத்னம்தான் அந்தச் சிறுமி'' என்றார் ஜெய்ஸ்ரீ பிக்சர்ஸ் எஸ்.வி. ரமணன்.



• 'தியாக பூமி' படத்தில்...

பத்மா சுப்ரமண்யம் சொன்னார்: ''கச்ச தேவயானி' படத்துக் கதாநாயகியாக எஸ்.பி.எல். விஜயலட்சுமியை (நடிகை ஜோதிலட்சுமியின் தாயார்) ஒப்பந்தம் செய்ய அவரது வீட்டுக்கு சென்றிருக்கிறார். அப்போது விஜயலட்சுமியின் தூரத்து உறவினர் பெண் ஒருவர் அப்பாவுக்குக் காபி கொடுத்து உபசரித்திருக்கிறார். ''அடுத்த மாதமே படப்பிடிப்பு ஆரம்பம். நடிக்கச் சம்மதமா?'' என்று விஜயலட்சுமியைப் பார்த்து அப்பா கேட்க, அவரோ, ''இப்போது நான் பிஸி. அடுத்த மாதமே படம் பிடிக்க வேண்டும் என்றால் இந்தப் பெண்ணைக் கதாநாயகியாகப் போட்டுத்தான் நீங்கள் எடுக்க வேண்டும்'' என்று நக்கலாகச் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். அதனாலென்ன என்று சொல்லி, எடுபிடி வேலை செய்து கொண்டிருந்த அந்தப் பெண்ணையே கதாநாயகியாக்கிவிட்டார். அந்தத் திடீர் கதாநாயகி வேறு யாருமல்ல. கனவுக் கன்னி என்று தமிழகமே கொண்டாடிய டி.ஆர்.ராஜகுமாரி.

''எனது தந்தை தோல்விகளைத் தொடாத மனிதர். அவரது வாரிசுகளான நாங்கள் ஒன்பது பேருமே மீடியா மற்றும் கலைத் துறையில் தனித்தன்மையோடு அவரது பெயரைக் காப்பாற்றி வருகிறோம். இதையே நூற்றாண்டு நினைவஞ்சலியாகச் செலுத்துகிறோம்'' என்று நெகிழ்ந்து போனார் பத்மா சுப்ரமண்யம்.

சந்திப்பு : ஜெய்

## ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜூவல்லரி

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் P.R. ஜூவல்லரிக்கு வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.


**P.R. JEWELLERY**
**GOLD, SILVER, DIAMOND**
**BIRTH STONES**

Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.

PH : 2434 4442 2432 7764 - TUESDAY HOLIDAY

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

**PROPRIETOR : P. RAVINDHIRAN**



| ராசி | | ராசிக்கல் |
|---|---|---|
| மேஷம், விருச்சிகம் | * | பவழம் |
| ரிஷபம், துலாம் | * | வைரம் |
| மிதுனம், கன்னி | * | மரகதபச்சை |
| கடகம் | * | முத்து |
| சிம்மம் | * | மாணிக்கம் |
| தனுசு, மீனம் | * | புஷ்பராகம் |
| மகரம், கும்பம் | * | நீலம் |

**திருஷ்டியைப் போக்கி, சகல செல்வங்களையும் தரும் வெள்ளெருக்கு வினாயகர் ரூ. 75/-க்குக் கிடைக்கும்.**

குரு பகவான் வரும் **19.8.2004** அன்று சிம்ம ராசியில் இருந்து கன்யா ராசியில் பிரவேசிக்கிறார். அதை முன்னிட்டு இந்தியாவிலேயே முதன் முறையாக ***வடபழனி B. குமார் சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் 108 சிவாச்சாரியர்களை வைத்து 27 நட்சத்திரங் களுக்கு 27 யாக குண்டங்கள் வைத்து, 12 ராசிக்கும் சேர்த்து ஒரு யாக குண்டம் அமைத்து, மாபெரும் யாகம் நடத்துகிறோம்.*** அனைவரும் கலந்து கொண்டு குருபகவான் அருள் பெற்று உய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குரு பார்க்க கோடி நன்மை என்பார்கள். **27** நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் குருபெயர்ச்சி யாகத்தில் பங்குபெறலாம். நட்சத்திரம் ஒன்றுக்கு ரூபாய் **150/-** பிரசாதம் பதிவுத் தபாலில் அனுப்ப ரூபாய் **30/-** சேர்த்து ரூபாய் **180/-**க்கு D. D. (or) M.O. அனுப்பவும். குருபகவான் உருவம் பதித்த வெள்ளி டாலருடன் பிரசாதம் அனுப்புகிறோம்.

மேலும் யாகத்திற்காக எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். தாங்கள் அனுப்பும் தொகை அனைத்தும் யாகத்திற்காக செலவு செய்யப்படும். தாங்கள் விரும்பும் தொகையை அனுப்பி யாகத்தில் கலந்து கொண்டு குருபகவான் அருளைப் பெற வேண்டுகிறோம். **D. D. (or) M.O.** அனுப்ப வேண்டிய முகவரி : **P.R.** ஜூவெல்லரி 102, உஸ்மான் ரோடு, சென்னை - 600 017.

யாகம் நடைபெறும் இடம் : **A.V.M.** திருமண மண்டப வளாகம்,
நாள் : **19.8.2004** வியாழக் கிழமை.
நேரம் பிற்பகல் **3** மணி முதல் இரவு **9** மணி வரை
நெ. 101, டாக்டர். ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

குறிப்பு : பணம் அனுப்புபவர்கள் நட்சத்திரம், ராசி அல்லது பிறந்த தேதி, பெயர் மற்றும் முகவரி தெளிவாக எழுதவும்.

குறிப்பு : ராஜ் டீ.வி.யில் தினசரி காலை 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியைப் பார்க்கவும்

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகதப் பச்சை

கடகராசி - முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசு ராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

**நா**ங்கள் குழந்தைகளாக இருந்தபோது, ஒரு பெண் திருமணமாகிச் செல்கையில், அவளுடைய அம்மா புத்திமதி சொல்லுவாள்: 'மாமனார் - மாமியாருடன் ஒத்துப் போக வேண்டும். மாமியார் எப்படிச் சமைக்கிறார், எப்படிச் சாப்பிடுகிறார்கள் என்று பார்த்துத் தெரிந்து கொள். எல்லோருடனும் சுமுகமாகப் பேசிப் பழகு' என்கிற ரீதியில் அது இருக்கும்.

என் தாயார் விமலா குல்கர்னி, எனக்குத் திருமணம் ஆனபோதும் இதே மாதிரி தான் சொன்னார். அவர் சொன்னவைதாம் பிற்காலத்தில் என் வாழ்க்கையில் மிகவும் உதவின. "நம் வாழ்வில், என்று நாம் பணத் தட்டுப்பாடு வந்து சிரமப்படுவோம் என்று தெரியாது. அதனால் உன் சம்பளத்திலிருந்தோ, உன் கணவரின் சம்பளத்திலிருந்தோ, சேமிப்பு என்று கொஞ்சமாவது வைத்திருக்க வேண்டும். உன் சம்பளம் ஆயிரம் ரூபாய் என்றால், அதில் ஐம்பது அல்லது நூறு ரூபாய் எடுத்து ஒதுக்கி வைத்துவிடு. இந்தப் பணத்தை எடுத்து ஆபரணமோ, துணிமணிகளோ வாங்கக் கூடாது. இளமையில், நிறையப் பொருள்களை வாங்கச் செலவழிப்பீர்கள். ஆனால் கஷ்டமான நிலைமையின்போது, உதவுவதற்கு யாருமே வர மாட்டார்கள்!"



# எப்போதும் நானிருப்பேன்

இதைக் கேட்டு நான் சிரித்தேன். பணத் தட்டுப்பாடு வரக்கூடிய அளவுக்கு, சிரமமான நாட்கள் வராது என்று திடமாக நம்பினேன். இளமையில் எல்லா நாட்களும் மகிழ்ச்சிகரமான நாட்களாகத் தோன்றுகின்றன. ஆனால் என்ன தோன்றியதோ என்னவோ, அம்மாவின் பேச்சைக் கேட்டு, சேமிக்கத் தொடங்கினேன். சமையலறையில் உள்ள பத்திரமான அலமாரியில் பணத்தைப் போட்டு வைத்தேன்.

**தி**ருமணமான பிறகு, மும்பையில் வாழ்க்கை சீராக ஓடியது. எங்களுக்கு ஒரு மகள் பிறந்தாள். எல்லா மத்திய தரக் குடும்பங்களையும் போல நாங்களும் மகிழ்ந்து போனோம். பாந்த்ரா பகுதியில் ஓர் அடுக்குமாடியில் வசித்தோம். நான் ஃபோர்ட் பகுதியிலுள்ள 'டெல்கோ'விலும், மூர்த்தி நரிமன் பாயின்ட்டில் உள்ள பிஸினஸ் நிறுவனத்திலும் பணியாற்றினோம்.

ஒரு நாள், அலுவலகத்திலிருந்து சோர்ந்து போய்த் திரும்பினார் மூர்த்தி. அதிகம் பேசக் கூடியவரல்ல என்றாலும், அன்றைக்கு அவர் வித்தியாசமாகவே

தெரிந்தார். நான் சமையல் அறையில் சப்பாத்தி செய்து கொண்டிருந்தேன்.

"ஏன் கவலையாக இருக்கிறீர்கள்?" என்று விசாரித்தேன்.

"மென்பொருள் எனப்படும் சாஃப்ட்வேர் துறை, இனி வரும் வருடங்களில் பெரிய துறையாக விளங்கப் போகிறது. நம் நாட்டில் இந்தத் துறையில் வல்லுனர்களுக்குப் பஞ்சம் இல்லை. கடின உழைப்பும், தெள்ளிய சிந்தையும் இருந்




தால் போதும். அதற்கு இந்தியாவில் நிறையப் பேர் கிடைப்பார்கள். அவர்களின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நினைக்கிறேன். ஒரு சாஃப்ட்வேர் நிறுவனம் தொடங்க விரும்புகிறேன்!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நாங்களே ஒரு நிறுவனத்தைத் தொடங்குவோம் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. எங்கள் இருவர் குடும்பத்திலுமே, தொழில் தொடங்கியவர்கள் யாருமே இல்லை. மூர்த்தி பிஸினஸ்-ஸிலும், நான் டெல்கோவிலும் தொடர்ந்து வேலை பார்ப்போம். திருப்தியுடன் அமைதியான வாழ்க்கை நடத்துவோம் என்றுதான் நினைத்திருந்தேன். உடனே நான் மறுப்புத் தெரிவித்தேன்.

மூர்த்தி அவருடைய திட்டங்களையும், எதிர்பார்ப்புக்களையும் விளக்கத் தொடங்கினார். "உனக்குத்தான் சரித்திரம் என்றால் பிடிக்குமே... நம் இந்தியர்கள் தொழிற் புரட்சியைக் கண்டதில்லை. உலகளாவ அது நிகழ்ந்தபோது, நம்மை அந்நியர் ஆண்டு வந்தனர். இப்போது அறிவுப் புரட்சி நடைபெறுகிறது. இதை நாம் முழுவதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதை நாம் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தத்தான் வேண்டும். இதைத் தவறவிட்டோம் என்றால், இன்னொரு வாய்ப்பு வாழ்க்கையில் கிடைக்காது. பணத்துக்காக மட்டுமே நான் இந்த முடிவை எடுக்கவில்லை. இதைக் கொஞ்ச நாளாகவே நினைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். இப்போது இதை நான் செய்துதான் ஆக வேண்டும். வேறு சரியான சமயம் வரவே வராது."

பிரச்னையைப் பற்றி மீண்டும் யோசிக்க ஆரம்பித்தேன். மூர்த்திக்குப் பெரிய குடும்பம் இருந்தது. அது அவரைத்தான் சார்ந்திருந்தது. திருமணம் ஆகாத சகோதரிகள் அவருக்கு இருந்தனர். இந்தச் சூழ்நிலையில் அவர் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தால், எங்கள் நிதி நிலைமை நிச்சயம் பாதிக்கப்படும். நான் பயந்தாலும், அவர் திறமை மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. நான் அவரை முழு மனத்தோடு ஆதரிக்க

■ சுதா மூர்த்தி ■



"சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசு படுத்தக்கூடாதுன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன், கமலா..."

"அது சரி, அதுக்காக நீங்க சின்ன வீடு வைக்கிறதை கை கட்டி பார்த்துக்கிட்டு இருக்க முடியுமா!"

- வி. ரேவதி

வில்லை என்றால், புதிய முயற்சியை மேற்கொள்வதில் அவர் திணறித்தான் போவார். வியாபாரம் என்றால் லாபம் - நஷ்டம் இரண்டும்தான் இருக்கும். அப்படி நஷ்டம் ஏற்பட்டால், இத்தனை வருட சேமிப்பும் வீணாகிவிடும். ஆனால் அடி மனத்தில், நாம் எப்படியாவது சமாளித்து விடுவோம் என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது.

"நீங்கள் தனி ஒருவராக இதை ஆரம்பிக்கப் போகிறீர்களா?" என்று கேட்டேன்.

மூர்த்தி சாதாரணமாகச் சிரிக்க மாட்டார். இப்போது அவர் மெல்லிய புன்னகை செய்தார்.

"நான் தனி அல்ல. என்னுடன் என் நண்பர்கள் ஆறு பேரும் சேருகிறார்கள். இது நியாயமாகவும், நேர்மையாகவும் பணம் சம்பாதிக்க ஏற்ற வழி. இந்தியா இந்தத் துறையில் முதன்மை பெற்று, புகழும், செல்வமும் பெற வேண்டும் என்ற கனவு எனக்கு உண்டு. நீ இப்போது எனக்கு உதவ வேண்டும். உன்னால் கொஞ்சம் பணம் கொடுக்க முடியுமா? நீ உதவவில்லை என்றால் என் கனவு மெய்ப்படாது!"

நான் இப்போது அவருக்குப் பணம் கொடுத்து உதவவில்லை என்றால், அவரால் புதிய நிறுவனம் ஒன்றைத் தொடங்க முடியாது. அப்போது என் அம்மாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன: 'சேமித்த பணத்தை, அத்தியாவசியமான சமயத்தில் எடுத்துச் செலவழி என்பதுதான் அது. அது போன்ற சந்தர்ப்பம்

இது... சிந்தித்த படியே இருந்து, ஒரு முடிவை எடுத்தேன். சமையலறைக்குப் போய் என் சேமிப்புப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். மாதா மாதம் நான் சேமித்த பணத்தைக் கையில் எடுத்தேன். பத்தாயிரம் ரூபாய் மொத்தமாக இருந்தது. அதை எடுத்துக் கொண்டு, கடவுள் முன் ஒரு சிறிய பிரார்த்தனை செய்து, மூர்த்தியிடம் கொடுத்தேன்.

"வெற்றி பெற வாழ்த்துகிறேன், மூர்த்தி. இதுதான் என்னிடம் இருக்கிறது. புதிய நிறுவனத்தின் பொறுப்பை முழு மகிழ்ச்சியுடன் ஏற்போம். சரி, நிறுவனத்துக்கு என்ன பெயர் யோசித்திருக்கிறீர்கள்?"

"இன்ஃபோஸிஸ். உன்னுடைய ஆதரவுக்கு நன்றி. இதுதான் மூலதனம். வருகிற வருடங்களில் கரடு முரடான பாதையில் செல்லவும் தயாராக இரு!"

எனக்கு ஒரு கன்னடக் கவிதை நினைவுக்கு வந்தது.

'கொட்டும் மழையோ
கொடும் குளிர் காற்றோ,
கொளுத்தும் வெயிலோ,
இலாபமோ, நஷ்டமோ,
எதுவானாலும் சிரித்த முகத்துடன்,
எப்போதும் நானிருப்பேன்
உன்னோடு.'

மூர்த்தி புன்னகை செய்துவிட்டு "மீண்டும் நன்றி, சுதா" என்றார். எங்கிருந்து எனக்குப் பணம் கிடைத்தது என்று அவர் கேட்கவில்லை.

இப்போது பழையதை நினைத்துப் பார்க்கையில், எம் அம்மா சொன்னது எத்தனை மதிப்பு மிக்க யோசனை என்று தோன்றுகிறது.


(தொடரும்)



"கள்ள வோட்டு போட வைக்க ஏகப்பட்ட பணம் தேவைப்பட்டிருக்குமே! எப்படிச் சமாளிச்சீங்க தலைவரே?"

"கள்ள நோட்டு அச்சடிச்சுத்தான்!"

- டி. வெங்கட்



"சே... வர வர நாடு எங்கே போய்க் கிட்டிருக்குன்னே புரியலை!"

"விவரமாச் சொல்லுப்பா!"

"திருட்டு விசிடி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு ஆட்கள் தேவைன்னு பேப்பர்ல விளம்பரம் வந்திருக்கு!"

# சுக்குபாய்!

"மன்னா! கலிங்க நாட்டு அரசரான தாங்கள், காம்போஜ இளவரசியை மணம் புரிய வேண்டாம் என்று அப்போதே சொன்னேன்..."

"அதற்கு இப்போது என்ன...?"

"இளவரசர், பாதி காம்போஜ நாட்டவராம்; அடுத்து அரியணை ஏற அருகதையற்றவராம்... பிரசாரம் நடக்கிறது, மன்னா!"

- வி. கிருஷ்ணகுமார்



"நாங்க சுக்கு வியாபாரம் பண்றோம்... வாஸ்தவந்தான்... அதுக்காக கிளாஸ் ரூம்ல எல்லோர் முன்னாடியும் நீங்க என்னை 'சுக்குபாய்'னு கூப்பிடறது கொஞ்சங்கூட நல்லாயில்லை சார்!"

- புளியரை கணேசன்



ஆர்.ஆர் பூபதி

# முதல் பாடம்!



"அப்பா! உங்களை மாதிரியே நானும் அரசியல்லே சேரணும், தலைவர் ஆகணும்னு ஆசைப்படறேன். எனக்கு அரசியல் பாடம் கத்துக் கொடுங்கப்பா..."

"சரி, அந்த ஏணியிலே ஏறி, பரண் மேலே இருக்கிற புத்தகங்களை எல்லாம் எடுத்து வா!"

"அப்பா! ஏணி ரொம்ப உயரமா இருக்கே. நீங்க ஜாக்கிரதையா பிடிச்சுக்குங்க. நான் ஏறிடறேன்."

"பயப்படாதே, நான் பார்த்துக்கிறேன்."

பையன் ஏணியிலே ஏறி உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்து விட, ஏணி சரிந்து பையன் விழுந்து விட்டான்.

"என்னப்பா இது! என்னை ஏற விட்டு கையை விட்டுட்டீங்களே! இடுப்புல அடிபட்டுருச்சு."

பையன் வேதனையில் முனகினான்.

"அவசரப்படாதப்பா! அரசியல்லே முதல் பாடம். பெத்த அப்பனா இருந்தாலும் நம்பாதே!"

போஸ்ட் கார்டு கதை

# "டீ.வி.சீரியல்களில் நடிக்க மாட்டேன்"

**–டெல்லி கணேஷ்**



"யாராவது டீ.வி. சீரியல்ல நடிக்கக் கூப்பிட்டா அய்யோ, ஆளை விடுங்கனு ஓடுகிறேன்!" என்கிறார் டெல்லிகணேஷ்.

"ஏன் சார் இந்த திடீர் முடிவு?'' என்று கேட்டால், ஒரு பிரசங்கமே செய்கிறார்.

"நான் இன்றைக்கும் சினிமாவில் பிஸி. சிம்ரன், விஜய், ஜோதிகா யாருக்கு அப்பா ரோல் என்றாலும், கூப்பிடு டெல்லி கணேஷை என்கிறார்கள்! நானும் நடிக்கிறேன். இவர் நன்றாக நடிச்சிருக்கார், சொதப்பியிருக்கார்னு விமர்சனம் பண்ணறாங்க. ஆனா, டீ.வி சீரியல்னா அப்படியில்லை. அதுவும் மெகா சீரியல்னா, ஜவ்வா இழுக்கறாங்க. கேரக்டரை சேஷனில் கவனம் செலுத்தறதில்லை.

"நான் டீ.வி சீரியல் நிறைய நடிச்சதால, நிறைய சினிமா வாய்ப்புகளை மிஸ் பண்ண வேண்டியதாப் போச்சு! சமீபத்துல ஒரு பிரபல டைரக்டரைப் பார்த்தப்போ, "உங்களை என் படத்துல போடணும்னு நினைச்சேன்! நீங்க டீ.வி. சீரியல்ல ரொம்ப பிஸியா இருக்கீங்கன்னு சொன்னாங்க. கால்ஷீட் ப்ராப்ள மாயிடப் போகுதுன்னு விட்டுட்டேன்'னு சொன்னாரு.

"டீ.வி. சீரியல்ல நடிக்க தினத்துக்கு இவ்வளவுன்னு ரேட் பேசி, எத்தனை நாள் ஒர்க் பண்ணறமோ, அதுக்கு ஏற்ப மொத்தமா பணம் கொடுக்கறதா பேசறாங்க. அதனால், கொடுக்கற காசுக்கு அதிகபட்சம் சீன் எடுத்துடணும்னு, ஷூட் பண்ணறாங்க. தொழில்ல தரம் இல்லை. 'அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம் சார்! டீ.வி. சீரியல்தானே'ன்னு அலட்சியமாப் பேசுறாங்க.

"சில மாசங்களுக்கு முன்னாலே, எனக்கு வேண்டிய உறவினர் ஒருத்தர் மதுரையில இறந்துட்டாரு. நான் கண்டிப்பா போயாகணும். இரவு ரயில்ல டிக்கெட் புக் பண்ணிட்டேன். ஆனா... இதோ... அதோன்னு ஷூட்டிங்கை இழுத்துக்கிட்டே போனதுல, ரயிலைப் பிடிக்க முடியலை. மறுநாள் ஃபிளைட்ல போய் வந்ததால இரட்டிப்புச் செலவு. ஆனா சினிமாவுல இதுபோல எல்லாம் கிடையாது. நல்ல அண்டர்ஸ்டாண்டிங், அட்ஜெஸ்ட்மெண்ட் எல்லாம் உண்டு.

"டீ.வி. சீரியல் எடுக்கிற பல கம்பெனிகள்ல பணம் ஒழுங்கா குடுக்கறதில்லை. பணம் கேட்காத வரைக்கும் கால்ஷீட் கேட்கறாங்க. பணம் குடுத்தாத்தான் ஆச்சுன்னு கண்டிப்பா

சொன்னா, கதையை மாத்தி, கேரக்டரை குளோஸ் பண்ணிடறாங்க! விடாம துரத்தி காசு வாங்கினா, 'மொத்தமா செட்டில் பண்ணிடறோம், ஐம்பது பர்செண்ட் டிஸ்கவுண்ட் குடுக்கறீங்களா?'ன்னு கேட்கறாங்க!"

"இந்திப் படத்தில் நடிக்கிறீங்களாமே!"

"ஆமாம்! வீரேந்திர சேவாக்கும் நானும் நடிச்ச ரிலையன்ஸ் விளம்பரம், என்னை அகில இந்திய அளவில் பிரபலமாக்கிடுச்சு. யார்கிட்டேயும் சான்ஸ் குடுங்கன்னு நான் கேட்டது கிடையாது. அப்படியிருக்கும் போது, என்னைத் தேடி அந்த விளம்பர வாய்ப்பு வந்தது. வீரேந்திர சேவாக்கோட நடிச்சதில், என்னைவிட என் பையன், பெண்ணுக்குத்தான் ரொம்ப த்ரில். ஒரே நாள் ஷூட்டிங். விதவிதமாய் ஷூட் பண்ணினார்கள். நான் எதிர்பார்க்காத அளவுக்கு விளம்பரம் பிரபலமாகிவிட்டது. அதைப் பார்த்துட்டு, அனுபவ் சின்ஹா என்கிற இந்தி டைரக்டர், தாம் எடுக்கும் இந்திப் படத்தில் நடிக்கக் கூப்பிட்டிருக்கிறார். அரசியல் சப்ஜெக்ட். எனக்கு ஹோம் மினிஸ்டர் கேரக்டர். அறுபது வயசில், இந்தியில் அறிமுகமாகிறேன்..."

"அட! உங்களுக்கு அறுபது வயசாயிடுச்சா?"


"ஆமாம்! இன்னும் கொஞ்ச நாளில் எனக்கு சஷ்டி அப்த பூர்த்தி. இருபத்தெட்டு வருஷமா நடிக்கிறேன். இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சு! பையன் இஞ்சினீயரிங் படிப்பு முடிச்சுட்டான். சம்பாதிச்சாச்சு! சினிமாவுல கூப்பிட்டா நடிக்க வேண்டியது. கூப்பிடாட்டா மீதிநாளை நிம்மதியா கழிக்க வேண்டியதுதான்."

"ஆனா, ஒரு டி.வி.சீரியல்ல நடிக்கிறீங்க போலிருக்கே!"

"சி.ஜே.பாஸ்கரோட 'மனைவி'ங்கற சீரியல். ஜஸ்ட் ஒரே ஒரு சீரியல் மட்டும். அதை முடிச்சுட்டா, டி.வி. சீரியல்களுக்கு குட்பை தான்!"

சந்திப்பு : எஸ். சந்திரமௌலி

## வணக்கம், வந்தனம், நமஸ்தே, நமோஸ்கார்!



சொந்தப் படங்கள் எடுத்து கையைச் சுட்டுக் கொண்ட அமிதாப்பச்சன், கடன்களை அடைக்க முடியாமல் திண்டாடினார். உடனே ஐந்து ரூபாய் சாக்லேட்டிலிருந்து, ஐந்து லட்ச ரூபாய் கார் வரை எல்லா விளம்பரப் படங்களையும் சகட்டுமேனிக்கு ஒப்புக் கொண்டு, மளமளவென்று பணம் குவித்தார். ஐந்தே ஆண்டுகளில் ஏ.பி.சி.எல் நிறுவனம் பெருமளவு கடன் சுமையிலிருந்து தப்பித்தது.

ஆனால் தூர்தர்ஷனுக்குத் தர வேண்டிய முப்பத்து இரண்டு கோடி ரூபாய் மட்டும் வட்டியுடன் வளர்ந்து கொண்டே போக, 'பிக்'மேன் செய்வதறியாமல் தவித்தார்.

திடீரென்று ஒரு ஐடியா தோன்றவே, தூர்தர்ஷனின் பிராண்ட் அம்பாஸிடராக பணி புரிந்து, கடன்களை அடைக்க சம்மதம் தெரிவித்தார் அமிதாப். தூர்தர்ஷனும் ஒப்புக் கொள்ளவே, வரும் ஆண்டுக்குள் பத்து பிரசார நிகழ்ச்சிகள் செய்ய உள்ளார் அமிதாப்.

சர்வதேச சேனலாக மாறும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தூர்தர்ஷன், வெள்ளோட்டமாக பிரிட்டனில் தூர்தர்ஷன் நியூஸ் சானல் ஆரம்பிக்க உள்ளது. அதற்கான வர்த்தக ப்ரோமோவுக்காக இந்திய ஆடைகளில், விதவிதமாக கும்பிடு போட்டு ஸ்டைலாக போஸ் கொடுத்து அசத்தியுள்ளாராம் அமிதாப்!

• ஐஸ்

**ESTD : 1959** **ஸ்ரீ குரு ராகவேந்த்ராய நமஹ** **Phone : 28444538**

**புனித யாத்திரை** **43 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்** **28442850**

ஸ்தாபகர் : **வி. சுப்பாராவ்** உரிமையாளர் : **எஸ்.பத்ரி. செல் : 9444019151**

**15.06.04** : 14 நாட்கள் கொண்ட பத்ரிநாத் & டெல்லி டூர். பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஷ் ஆகியவை - கட்டணம் ரூ.**5,500/-**

**01.07.04** : 4 நாட்கள் கொண்ட மந்திராலயம், மகாநந்தி, ஸ்ரீசைலம், நெல்லூர், அஹோபிலம் ஆகியன. கட்டணம். ரூ.**1,500/- 2x2** பஸ்

**03.07.04** : 6 நாட்கள் கொண்ட காசி, கயா, அலகாபாத். கட்டணம். ரூ.**4,000/-**

**10.07.04** : 7 நாட்கள் கொண்ட ஆடி அமாவாசை நவகிரஹ நவ திருப்பதி. பாண தீர்த்தம். இராமேஸ்வரம் மேலும் பல. கட்டணம். ரூ.**3,200/- 2x2** புஷ்பேக் பஸ்.

**06.08.04** : 14 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை. பம்பாய், நாசிக், பஞ்சவடி, குர்னேஸ்வரர், எல்லோரா, சனிசிங்கணாப்பூர், ஓம்காரம், உஜ்ஜெயினி, மகாகாலேஷ்வரர் ஆகியவை கட்டணம். ரூ.**6,500/-**

**02.09.04** : 14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகை டூர் - அகமதாபாத், டாக்கூர்துவாரகை, கோமதிதுவாரகை, பேட்டி துவாரகா, பூகேஸ்வரம், ஹரித்திமாதா, போர்பந்தர், சோம்நாத், பாலக், வீர்பூர், மாத்துருகயா, அம்பாஜி, மவுண்ட் அபு, புஷ்கர், அரிநாத்துவாரகா, காங்ரோலிதுவாரகா, ஏக்லிங் கட்டணம். ரூ.**6,500/-**

**05.09.04** : 12 & 22 நாட்கள் கொண்ட பூரி, புவனேஸ்வர், கோனாரக், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா. 12 நாட்கள் மட்டும் காசி வரை ரூ.**5,500/-** 22 நாட்கள் மட்டும் டெல்லி வரை ரூ.**8,100/-**

**15.09.04** : 14 நாட்கள் கொண்ட பத்ரி, டெல்லி யாத்திரை. ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா. ஆகியன கட்டணம் ரூ.**5,500/-**

**18.09.04** : அலகாபாத், சித்ரகூடம், கயா, காசி, அயோத்தியா, நைமிசாரண்யம், காட்மண்டு, போக்ரோ, முக்திநாத், நேபாள் யாத்திரை கட்டணம். ரூ.**7,500/-** ஹெலிகாப்டர் முக்திநாத் செல்ல கட்டணம் தனி ரூ.**12,500/**

60 நாட்கள் முன்பு ரயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்ய இருப்பதால் 2 மாதங்களுக்கு முன்பே பெயர், வயது, அட்வான்ஸ் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு : காலை காபி, டிபன், 2 வேளை சாப்பாடு அங்கு தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனியாருக்கு உட்பட்டது.**

மேலும் விவரங்களுக்கு : **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்**

New No.1/12, II Floor பார்த்தசாரதி அபார்ட்மெண்ட்ஸ், ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை -5. ✆ : 28444538, 28442850 Cell : 9444019151 Email : srivijayatravels@yahoo.com

---




## சிறுவர்கள் பயன்பெற சிறந்த சம்ஸ்கிருத ஸ்லோகங்கள்

ஒவ்வொரு பெற்றோரும் தனது குழந்தைகள் நல்ல மன நலத்துடனும், உடல் வளத்துடனும் வளர வேண்டும் என்று விரும்புவது இயற்கை. அதற்கு உதவி செய்வது போல், சிறுவர்களின் எண்ணம், செயல், பாவனை ஆகியவற்றில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி ஆன்மீகப் பாடல்களுக்கு உண்டு. அதுவும் சம்ஸ்கிருத சப்தங்கள், மூளையின் ஆற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்றன. இதன் சக்தியை நன்கு அறிந்த, நமது முன்னோர்கள், நிறைய ஸ்லோகங்களை நமக்காக இயற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து சிறுவர்களுக்கு தேவையான சில ஸ்லோகங்களை சூப்பர் ஆடியோ (சென்னை) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஒலித்தட்டாக வழங்குகிறது.

பேராசிரியர் ஆர். தியாகராஜன் குழுவினருடன் திருமதி. அனுராதா கிருஷ்ண மூர்த்தியும் இணைந்து இசைத்திருக்கும் ஒலித்தட்டில், "கணபதி, சிவபெருமான், தட்சிணாமூர்த்தி, ஸரஸ்வதி, ஹயக்ரீவர், ராமர், கிருஷ்ணர், மற்றும் சுப்ரமண்யர் ஆகியோரை துதிக்கும் ஸ்லோகங்கள் அடங்கியுள்ளன.

சிறுவர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒளிமயமான எதிர்காலத்தையும், வளமான வாழ்வினையும் பெற வாழ்த்துகிறோம்.

**ரூ. 200/- மட்டுமே!**

Geethanjali

**SUPERAUDIO (MADRAS) Pvt. LTD.,**
**# 713, Anna Salai, Carex Centre, II Floor,**
**Chennai - 600 006. INDIA. ☎ 52140068**
**www.musicandchants.com supertape@yahoo.com.**

**For Trade Enquiry Contact : 52140067**
**For Audio Caseettes contact : Varshene Associates 24662244**

# ரசனையைச் சுமந்து வரும் கூட்டம்!

அதிகார மையமான வாஷிங்டனின் அமைப்பும், கம்பீரமான கட்டடங்களும், திட்டமிட்ட பசுமையும் ஒரு தனிப்பட்ட மேட்டுக்குடியின் அடையாளமாகத் தோன்றின. அங்கிருந்து ஃப்ளாரிடாவில் இருக்கும் டாம்பா நகருக்குப் பயணித்தபோது, மிக வித்தியாசமான மாநிலத்துக்குச் செல்லப் போவதை நான் அறிந்திருக்கவில்லை.

வயதானவர்கள் வாழ செளகர்யமான, குளிர் வாட்டாத, நீர் வளம் நில வளம் கொண்ட கடற்கரைப் பிரதேசம் அது. அதனாலேயே பல பெரும் பணக்காரர்கள், ஓய்வு பெறும் காலத்தில் இங்கு வந்து வசிக்க முடிவு எடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஏகத் தமிழர்கள், ஓய்வு பெற்றவர்கள் இந்த சீதோஷ்ணத்துக்காகவே வேறு எங்கோ (அமெரிக்காவில்) வேலை பார்த்திருந்தாலும் இங்கு வந்து வீடு வாங்கிக் கொண்டு செட்டில் ஆகியிருப்பது, எனக்கு ஆச்சரியமான விஷயமாக இருந்தது. ஐரோப்பியர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். வயதான காலத்தில், சொந்த நாடு மிகக் குளிர் பிரதேசமாக இருந்தால், வெப்பம் மிகுந்த ஸ்பெயின் மாதிரியான நாடுகளுக்குக் குடி பெயர்கிறார்கள். அமெரிக்காவில் முப்பது ஆண்டுகளாக வாழும் பல தமிழர்கள் (அநேகமாகக் குளிர்ப் பிரதேசத்தில் வேலை பார்த்தவர்கள்) ஓய்வு பெற்றதும், ஃப்ளாரிடாவுக்குக் குடி பெயர்ந்து






• கணவருடன்...

வாழ்வதை அறிந்துகொண்டேன். இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் இருப்பவர்கள் மிகக் குறைவு.

நான் அங்கு தங்கிய இரண்டு நாட்களில் காதில் பட்ட தமிழ்ப் பேச்சும், சங்கீத விமர்சனங்


# அமெரிக்க டயரிக் குறிப்பு-14

களும், நாவுக்குக் கிடைத்த வத்தல் குழம்பும், அவரைக்காய் கூட்டும், இந்தியாவுக்குத் திரும்பி விட்டதான பிரமையை ஏற்படுத்தியது. ஆனால் வீட்





• ஸால்வடோர் டாலி மியூஸியம்



• டிஸ்னி உலகம் - எப்காட்

டுக்கு வெளியில் கால் வைத்ததும், கண்பட்ட இடமெல்லாம் நீர் நிரம்பிய ஏரிகளும், சித்திரம் வரைந்தது போன்ற அழகிய விசாலமான வீடுகளும் பிரமையைப் போக்கின.

### இந்திய உணர்வு இன்னும் எத்தனைத் தலைமுறைக்கு நீடிக்கும்?

டாம்பாவில் ஒரு பிரும்மாண்ட வெங்கடேச்வரர் ஆலயம் கட்டப்பட்டு வருகிறது. முத்தையா ஸ்தபதி அதற்குப் பொறுப்பேற்றிருக்கிறார். ''அமெரிக்காவின் மூலை முடுக்கிலெல்லாம் இந்துக் கோவில்கள் வந்துவிட்டன. ஐம்பது ஆண்டுகள் கழித்து இந்தக் கோவில்களுக்கு யார் வரப் போகிறார்கள்? இங்கு பிறந்து வளரும் அடுத்த தலைமுறைக்கு, இவற்றுடன் எப்படி உணர்வுபூர்வமான தொடர்பு இருக்கும்? அதே நிலை தான் கர்நாடக சங்கீதக் கச்சேரிகளுக்கும் ஏற்படப் போகிறது. இங்கு வளரும் குழந்தைகளுக்கு நிச்சயம் அதில் ஈடுபாடு இருக்காது'' என்றார் என் உறவுக்காரர் கோபு. இது யோசிக்க வேண்டிய விஷயம் என்று நினைத்தேன். இதை என் மகன் ஹரியிடம் பீனிக்ஸுக்குத் திரும்பியதும் சொன்னபோது, 'உணர்வுபூர்வமான விஷயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது' என்று சிரித்தான். ஒவ்வொரு ஆண்டும் இதே ரசனைகளைச் சுமந்தபடி ஒரு புதிய தமிழர் கூட்டம் அமெரிக்காவுக்கு வந்த வண்ணம் இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து வரும் மாணவர்கள், தப்பாமல் இந்துக் கோவில்களுக்குச் செல்கிறார்கள். படிப்பு முடிந்ததும் இங்கு வேலையில் அமர்வார்கள். திருமணம் குடும்பம் என்று கிளை பரப்புவார்கள். தங்கள் வாரிசுகள் இந்தியத்தனத்துடன் வளர வேண்டும்

▪ வாஸந்தி ▪



"டேய், ஜாக்கிரதைடா! உசத்தியான சாக்லேட்லகூட பூச்சி புழு வந்து குடையறதா நியூஸ் போட்டிருக்கான்!"

"பரவாயில்லேப்பா, கூடவே உசத்தியான குளிர்பானம் வாங்கிக் குடிச்சா ஆச்சு; அதுல பூச்சிக் கொல்லி மருந்து கலந்திருக்கிறதா செய்தி அமர்க்களப்படுதே!"

- எஸ். மோகன்

என்று ஆசைப் படுவார்கள். சரித்திரம் தொடரும்.

## ஸால்வடோர் டாலி

நீங்கள் எந்த நாட்டில் பிறந்தவராக இருந்தாலும், அசாதாரணமானவர் எனில், அமெரிக்க மண்ணில் சரித்திர புருஷனாக நீங்கள் மதிக்கப்படலாம். டாம்பாவுக்கு அருகில் இருக்கும் பீட்டர் ஸ்பர்கில் உள்ள புகழ் பெற்ற ஸ்பானிஷ் ஓவியர், ஸால்வடோர் டாலியின் ஓவிய அருங்காட்சியகமே சாட்சி. டாலி பிறந்த ஸ்பெய்ன் நாட்டுக்கு வெளியே உள்ள மிகப் பெரிய மியூசியம் இதுதான். ஒரு தனி நபரின் சொத்தாக இருந்த முந்நூறு ஓவியங்கள் இங்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்ச்சை மிகுந்த, மரபு சாரா வாழ்வு வாழ்ந்த, பித்தன் என்று பலர் நினைத்த புரட்சியாளர் டாலி. இவரது புகழ்மிக்க சர்ரியலிஸ ஓவியங்கள், வயதான காலத்தில் அவர் தீட்டிய மதம் சார்ந்த ஓவியங்கள், எல்லாம் தாக்கத்தை ஏற்படுத்துபவை. டாலியின் நூற்றாண்டு கொண்டாடப்படும் வருடம் இது. சாரிசாரியாக அமெரிக்க மக்கள் மியூசியத்தை ரசிக்க வருகிறார்கள். டாலியின் முகம் வரைந்த டீ-ஷர்ட் வாங்குகிறார்கள். ஓவியங்களின் பிரிண்ட்களை வாங்குகிறார்கள்.

## பயணத்தின் முடிவில்

பீனிக்ஸுக்குத் திரும்பியதும் எனக்கும் ஊர் நினைவு வந்துவிட்டது. ஊரை விட்டு வந்து கிட்டத்தட்ட மூன்றரை மாதங்கள் ஆகிவிட்டன. சொந்த மண்ணின் மணத்திற்கும், ஊர் அக்கப் போருக்கும் மனசு ஆலாய்ப் பறந்தது.

பீனிக்ஸிலிருந்து லாஸ் ஏஞ்சிலீஸ் வழியாக சென்னைக்குத் திரும்பும் போது, என் அருகில் அமர்ந்திருந்த ஒரு தமிழ் மூதாட்டி, "என்னவோ ஒண்ணுமே புரியல்லே" என்ற வண்ணம் இருந்தார். "விடியறதுக்கு முன்னாடி வேலைக்குக் கிளம்பிடறா இரண்டு பேரும். ராத்திரி எப்பவோ வந்து சூடு பண்ணிச் சாப்பிடறா. சனிக்கிழமை கடை கண்ணி போகணும். ஞாயித்துக்கிழமை ஒரு வாரத் துணி தோய்க்கணும்.. திங்கள் வந்தா ஆச்சு மறுபடி ஓட்டம். ஒண்ணுமே புரியல்லே!" என்னைப் போல் அவரும் மகன் வீட்டில் மூன்று மாதம் தங்கியிருந்தவர்.

விமானம் சென்னையைத் தொட்ட போது, உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் நம்ப முடியாததாக இருந்தன. அமெரிக்கா எந்தத் திசையில் இருக்கிறது என்று தெரியாத கோடானு கோடி இந்திய வாக்காளர்கள், ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருந்தார்கள். ஜனநாயகம் என்பதன் உண்மையான அர்த்தத்தை உலகுக்குக் காட்டியிருந்தார்கள். அது போதும் எனக்கு.

(முற்றும்)

# சர்க்கரை நோயாளிகளுக்கும்!
# சர்க்கரை நோய் வராமல் காப்பதற்கும்!

## டயாவின் பிஸ்கட்




வியாபார விசாரனைக்கு :- **குளோபல் நெட்வொர்க்,**

9, கண்ணதாசன் தெரு,ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,சென்னை - 24.

போன் : (044)24804133, Telefax.23722656

SITA 04/002


---




# S.V.முதியோர் இல்லம்



## Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

### முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

## S.V. HOME FOR AGED

### Charitable Trust (Reg)

# 50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700, 2475 7777, 2475 5799
e-mail:svhome@vsnl.net



திருச்சூர் மாநகரில் ஷாப்பிங் போவதென்றால் அப்படியொரு விருப்பம் மல்லிகாவுக்கு... ஆனால் இப்போது தப்பித்தவறி வெளியே தலை தெரிந்தாலே, ''ஏய், இது ஓட்டோகிராஃப் சித்திரத்தின்டே கமலா அல்லே'' என்று சூழ்ந்து கொள்கிறார்களாம்.

"இத்தனைக்கும் நான், அடூர் சாரின் 'நிழல் கூத்து' படத்தில் அறிமுகமானேன். அதில் எனக்குப் பிரதான பாத்திரம். அந்தப் பாத்திரத்தின் பெயர் மல்லிகா. அதே பெயரைத்

# மல்லி மனசைக் கிள்ளி...



• ஸ்வேதா

தான் சேரன் எனக்கு தமிழில் வைத் திருக்கிறார். 'ஆட்டோகிராஃப்' ஐம்பது நாட்களைத் தாண்டி, திருச்சூரில் ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால் திருச்சூர் டவுனில் நிழலாக நடமாட வேண்டி யிருக்கிறது. முன்பெல்லாம் சினிமா நட்சத்திரங்கள் என்றால், கேரளத்தில் திரும்பிக் கூட பார்க்க மாட்டார்கள். இப்போது நிலைமை மாறி விட்டது'' என்கிறார் சந்தோஷமாக.

**ப**த்தாம் வகுப்பில் அடியெடுத்து வைத் திருக்கிறார் மல்லிகா. படிப்பது, திருச்சூரின் ஹோலிஃபேமிலி பள்ளியில். இதே பள்ளியில் படித்த பாவனா, இப்போது கேரளப் பட உலகில் நம்பர் ஒன் நாயகி. அடுத்து அந்த இடத்தைப் பிடிக்க மல்லிகா முயற்சியைத் தொடங்கி விட்டாராம்.

மல்லிகாவுக்கு நடிப்பில் யார் ரோல் மாடல் என்றால், குழந்தை நட்சத்திரம் ஸ்வேதாதானாம்!


''சந்தோஷ் சிவன் இயக்கிய 'மல்லி' படத்தில் அந்தக் குழந்தையின் நடிப்பைப் பார்த்து அசந்து போய்விட்டேன். அப்புறம் ஸ்வேதா நடிச்ச 'குட்டி'யைப் பார்த்து, அவரோட ரசிகையாவே மாறிட்டேன். அந்தச் சின்னக் குட்டி, இந்த மல்லிகாவின் மனதைக் கிள்ளி விட்டாள்!'' என்று சொல்லும் மல்லிகா, இப்போது மலையாளத்தில் 'நேருக்கு நேர்' படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கிறார்.

— ஸ்ரீ

அட்டை, படங்கள்: ஆண்டனி



# "தாஸ்...தாஸ்... நீ இப்ப பாஸ்...பாஸ்...!"






சின்னத்திரை மற்றும் பெரியதிரை புகழ் லார்டு லபக்குதாஸ்.. ஸாரி... டாக்டர் மாத்ருபூதம், ஒரு புனிதமான காரியம் செய்திருக்கிறார்:

காஞ்சி சங்கராச்சாரியார்கள் மூவரைப் பற்றி தாமே பாட்டு எழுதி, மெட்டுப் போட்டு, இசையமைத்து கேஸட் மற்றும் சி.டி வெளியிட்டிருக்கிறார். அது மட்டுமில்லை. பாடல்களில் சிலவற்றைப் பாடி இருப்பதும் மாத்ருபூதம் தான். காஞ்சிப் பெரியவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் ஒலிநாடாவும், சி.டியும் வெளியிடப்பட்டன. தலைப்பு: குருவே சரணம். தமது அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடும் வேளையில் மாத்ருபூதம் இதனைச் செய்திருக்கிறார்.

இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு, டயாலிசிஸ் செய்துகொண்டு இருக்கும் நிலையிலும், மனுஷரின் பேச்சில் உற்சாகத்துக்கும், நகைச்சுவைக்கும் குறைவில்லை.

"என்ன சார்! திடீரென்று பாட்டெழுதி, இசையமைத்து, பாடியிருக்கிறீர்கள்?"

"ஏன் நான் பாடக் கூடாதா? உங்களுக்குத் தெரியாது சார்! நான் திருச்சியில் சிறு வயசிலேயே முறைப்படி கர்நாடக சங்கீதம் கத்துக் கிட்டேன். கர்நாடக இசையில் டிப்ளமா வாங்கியிருக்கேன். ஏதோ ஸ்டெதஸ்கோப் பிடிக்கப் போய் விடவே, மேடை ஏற முடியாமல் போய்விட்டது. அதையெல்லாம்விட, ராகங்கள் பற்றிய ஞானம் உள்ள நல்ல இசை ரசிகன் நான். இது போதாதா கேஸட் வெளியிட?

"எனக்கு சங்கராச்சாரியர்கள் மேல் மிகுந்த பக்தி. பரமாச்சார்யார் கட்டளையின் பேரில் கலவைக்குப் போய் முதியவர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறேன்" என்றார்.

கேஸட் கேட்ட நண்பர்கள் பலர் மனதாரப் பாராட்டியதால், "தாஸ்... தாஸ்... நீ இப்ப பாஸ் பாஸ்" என்று தமக்குத்தாமே சந்தோஷப்பட்டுக் கொண்டாராம் மாத்ருபூதம்.

- மௌலி

# சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது

– இரண்டு பாகங்கள்

ரூ. 500/–

## 'சோ'வின் பிற நூல்கள்

1. உண்மையே உன் விலை என்ன 37.00
2. கூவம் நதிக் கரையினிலே - பாகம் - 2 45.00
3. கூவம் நதிக் கரையினிலே பாகம் - 3 27.00
4. துக்ளக் படமெடுக்கிறார் 30.00
5. சம்பவாமி யுகே! யுகே! 30.00
6. சாதல் இல்லையேல் காதல் 41.00
7. வெறுக்கத்தக்கதா பிராமணீயம் 30.00
8. எங்கே பிராமணன்? 85.00
9. துக்ளக் கேள்வி - பதில் - I 24.00
10. துக்ளக் கேள்வி - பதில் - II 45.00
11. சாத்திரம் சொன்னதில்லை 30.00
12. அதிகப்பிரசங்கம் 32.00
13. துக்ளக் தலையங்கங்கள் 25.00
14. யாருக்கும் வெட்கமில்லை 28.00
15. இன்பக் கனா ஒன்று கண்டேன் 14.00
16. இந்தியா எங்கே போகிறது? 12.00
17. மனம் ஒரு குரங்கு 30.00
18. இந்து தர்மம் 50.00
19. காமராஜை சந்தித்தேன் 33.00

கவிஞர் **வாலி** இயற்றிய

## புலனடக்கத்தின் பொன்விழா

ஜயேந்திரரின் ஜன்ம சரிதம் - ஜனனம் முதல் ஜகத்குரு வரை

விசிஷ்டாத்வைதியின் பார்வையில்

## அத்வைத மகான்

(ஜெயகாந்தன் முன்னுரையுடன் மிக மிக உயர்தரமான தயாரிப்பு)

ரூ. 100/- மட்டும்

## உலக இலக்கிய வரிசை

தமிழில்: சிவன்

1. சித்தார்த்தன் - ஹெர்மன் ஹெஸ்ஸ 35.00
2. ஏழை படும் பாடு - விக்டர் ஹியூகோ 40.00
3. ராபின் ஹுட் - மேத்யூ ஹூக் 45.00
4. கரமசோவ் சகோதரர்கள் - தஸ்தயெவ்ஸ்கி 35.00
5. ராபின்சன் குடும்பம் - யோஹன் டேவிட் வைஸ் 32.00
6. இலியட் - ஹோமர் 45.00
7. ஒடிஸி - ஹோமர் 30.00
8. பிரபு மான்டி கிறிஸ்டோ - அலெக்ஸாண்டர் டூமாஸ் 37.00
9. டாம்சாயர் - மார்க் ட்வைன் 37.00
10. அதிசய உலகில் ஆலிஸ் - கரோல் லூயிஸ் 45.00
11. ராபின்சன் குருசோ - டேனியல் டிஃபோ 48.00
12. மோபிடிக் - ஹெர்மன் மெல்வில் 45.00
13. கலிவரின் பயணங்கள் - ஜோனாதன் ஸ்விப்ட் 40.00
14. அன்னாகரேனினா - லியோ டால்ஸ்டாய் 35.00
15. போரும் அமைதியும் - லியோ டால்ஸ்டாய் 32.00
16. புதையல் தீவு - ஆர்.எல். ஸ்டீவென்ஸன் 42.00
17. இழந்த உலகம் - ஆர்தர் கானன்டாயல் 32.00
18. பிராங்கென்ஸ்டைன் - மேரி ஷெல்லி 40.00
19. ஹெய்டி - ஜோஹன்னா ஸ்பைரி 30.00

## பி. ஸ்ரீ. ஆச்சார்யா எழுதிய

1. ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்) ரூ. 306.00
2. அறுபடை வீடுகள் (6 தொகுதிகள்) ரூ. 210.00
3. திவ்யப் பிரபந்த ஸாரம் ரூ. 60.00

மற்றும்

4. அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு ரூ. 30.00
5. கந்த புராணக் கதைகள் ரூ. 40.00
6. நாரதர் கதை ரூ. 25.00
7. நவராத்திரியின் கதைகள் ரூ. 23.00
8. ராஜரிஷி விசுவாமித்திரர் ரூ. 30.00
9. தசாவதாரக் கதைகள் ரூ. 32.00

1. மஹரிஷிகள் வரலாறு – A.V. சுகவனேசுவரன் - 65.00
2. வேதம் வணங்கும் தெய்வங்கள் - 62.00
3. இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும் – கிருஷ்ணசாமி - 50.00

அன்றாட வாழ்வில் பகவத் கீதையின் பயன்பாட்டை விளக்குவது

**கண்ணன் சொற்படி வாழ்வதெப்படி? ரூ. 50/–**

பேராசிரியர் 'பிலானி' வி. கிருஷ்ணமூர்த்தி

## அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்

சென்னை – 600 004. ✆: 24941314

**என்** மனைவி புலம்புவதைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

"ஊருக்குப் போய் ஒரு வாரத்துக்கும் மேலே ஆச்சு. இரண்டு வரி கடிதம் கூட போடலே பாருங்க உங்க புள்ளை. லெட்டர்தான் வேண்டாம், சரி, ஃபோனாவது பண்ணமாட்டானா துரை? அப்படி என்ன, வேலையோ? ப்ச"

எங்களின் ஒரே மகன் பாலாஜிக்கு சிஸ்டம் புரோகிராமராக வேலை கிடைத்து டெல்லிக்குச் சென்றுவிட்டான். நடுவில் கோடை விடுமுறைக்காக நாலு நாள் இங்கு வந்து, எங்களுடன் இருந்து விட்டுச் சென்றவன் தான். ஒரு கடிதமோ, ஃபோனோ இல்லை.



அப்பா, காலையிலே எட்டு மணிக்கு கம்பெனிக்குள்ளே போயாச்சன்னா, எப்ப வெளியே வருவேன்னே தெரியாது. காபி, டிபன், சாப்பாடெல்லாம் போட்டு அங்கேயே உட்கார வைச்சுடுவாங்க. இதிலே எங்கே கடிதம் எழுதவெல்லாம் நேரமிருக்கு?"

ஊருக்கு வந்த சமயத்தில் பெருமையுடன் அலுத்துக் கொண்டான் பாலாஜி.

"தங்க கிளிக் கூண்டுன்னு சொல்லு உன் வேலையை" என்றேன்.

"ஆனால், நான் விரும்பி ஏத்துக்கிட்ட கூண்டுப்பா இது. மாசம் இருபதாயிரம் சம்பளம் தராங்களே, சும்மாவா?" என்றான்.

"என்னங்க, நீங்களாவது கண்டிச்சுச் சொல்லியிருக்கக் கூடாதா?" என்று மீண்டும் தன் ஆலாபனையை ஆரம்பித்தாள் என் மனைவி.

"போன் பண்ணுவான் இன்னிக்கு. கவலைப்படாதே" என்றேன் ஆறுதலாய்.

"க்கும்! அப்பா மாதிரிதானே புள்ளை

யும் இருக்கும்'' என்று நொடித்தபடி உள்ளே போனாள்.

அவள் அப்படிச் சொன்னவுடன் எனக்குள் பழைய ஞாபகங்கள் எழுந்தன.

உள் அறைக்குப் போய் சின்ன இரும்புப் பெட்டியைத் திறந்தேன்.



உள்ளே இருந்த கடிதங்களை வருடிக் கொடுத்தேன்.

"அப்பா!" என்று என் வாய் முணுமுணுத்தது.

சிறுவயதிலேயே என் அம்மா இறந்து போய்விட, அப்பாவின் அரவணைப்பில் வளர்ந்தேன். எங்கள் கிராமத்திலிருந்து, சென்னைக்கு மேற்படிப்புப் படிக்க வந்த முதல் ஆள் நான்தான்.

இதெல்லாம் எழுபதுகளில் நடந்த கதை.

சென்னை வாழ்க்கையின் பரபரப்பில் நானும் கரைந்துவிட்டேன். இங்கேயே வேலையும் கிடைத்து செட்டிலாகி விட்டேன்.

வாரம் தவறாமல் அப்பா எனக்குக் கடிதம் எழுதுவார். ஒவ்வொரு கடிதத்திலும் கிராமத்தில் நடந்த விஷயங்களை எழுதி, முடிவில் 'கட்டாயம் பதில் கடிதம் எதிர்பார்க்கிறேன்'' என்று முடித்திருப்பார்.


பதில் கடிதம் எழுத முயன்று, சில சமயம் வெற்றிகரமாக எழுதி அனுப்பியிருக்கிறேன். ஆனால், பெரும்பாலும் பல கடிதங்களை 'அன்புள்ள அப்பா, நலமா?' என்பதோடு எழுதி, மேலே தொடர நேரமின்றி, அல்லது சோம்பல்பட்டு விட்டிருக்கிறேன்.

அப்படி 'அன்புள்ள அப்பா' என்ற அளவில் மட்டுமே எழுதியிருந்த கடிதங்கள் மட்டுமே, என்னிடம் நூறு இருந்தன பெட்டியில்.


பொறுமையின்றி அப்பா கோபிப்பார். ஒரு முறை ஊருக்குச் சென்ற சமயம், ஐம்பது தபால் கார்டுகளை அப்பா நீட்டினார்.

"இதோ பாரு, இதிலே நம்ம வீட்டு விலாசம், 'அன்புள்ள அப்பா'ன்ற உன் புகழ் பெற்ற வாக்கியம் எல்லாம்

■ கிருஷ்ணா ■



'திருமலை', 'கள்ளான்' பட இயக்குனர் ரமணாவுக்கு பிரமோஷன் கிடைத்துள்ளது. விஜயகாந்த் படத்தை இயக்குகிறார். பெயர்: பார்த்தசாரதி



தம்மை கதாநாயகனாக அறிமுகப்படுத்திய பஞ்சு அருணாசலத்துக்கு நன்றி காட்டும் வகையில் அடுத்ததாக அவருக்கு ஒரு படம் ஒப்புக் கொண்டிருக்கிறார் இயக்குனர் சேரன்.



கூட்சி, மச்சி சமாசாரத்தை எல்லாம் பரணில் தூக்கி வைத்துவிட்டு 'வீராசாமி' படத்துக்கான வேலைகளில் இறங்கிவிட்டார் டி. ராஜேந்தர்

எழுதியிருக்கேன். உன் கையெழுத்தை மட்டும் போட்டு, வாரம் ஒன்றாய் போஸ்ட் பண்ணிடு. உன் கையெழுத்தைப் பார்த்தே நான் சந்தோஷப்பட்டுக்கறேன்" என்றார்.

எனக்குள் சுரீர் என்றது. என் சோம்பேறித்தனத்தின் மேல் கோபம் வந்தது. கட்டாயம் கடிதம் எழுத வைராக்கியம் எழுந்தது.

ஆனால், சென்னைக்கு வந்தவுடன் பழையபடி ஆகிவிட்டது. ஆனால், அப்பா தமது வழக்கமான பணியைத் தொடரவே செய்தார்.

அப்பாவின் கடிதங்கள் ஒவ்வொன்றும் என்னைப் பொறுத்தவரை இலக்கியம்தான். அப்பாவின் கடிதங்களால்தான் எனக்கும், எங்கள் கிராமத்துக்கும், உறவுகளுக்கும் இடையே திரையோ, அந்நியத் தன்மையோ ஏற்படாமலிருந்தது.

எப்போது நான் கிராமத்துக்குப் போனாலும், எல்லோரையும் இயல்பாய் விளித்து, குசலம் விசாரித்துப் பழக முடிந்தது.

இதெல்லாம் எனக்கு அப்போது புரியவில்லை. அப்பா காலமாகி கொஞ்ச காலம் கழித்து என் கிராமத்துக்குப் போனபோதுதான் உண்மை பளீரென முகத்தில் அறைந்தது.

திடீரென கிராமமே அந்நியப்பட்டுப் போனதுபோல ஓர் உணர்வு. அப்பா என்ற மனிதர், எனக்கும் என் பிறந்த மண்ணுக்கும் இடையே, தம் கடிதங்களால் கண்ணுக்குத் தெரியாத இழையாய் நின்று இணைத்திருக்கிறார் என்று புரிய, ஓவெனக் கதறினேன்.

நான் என் அப்பாவை நினைத்து அழுவதாகச் சொந்தங்கள் நினைத்தன. அது மட்டுமே காரணமில்லை என் துக்கத்திற்கு, என்பது எனக்கு மட்டுமே புரிந்த உண்மை. நான் ஜனித்த இந்த பூமி, விழுந்து, புரண்டு, விளையாடி வளர்ந்த இந்த ஊர், இப்படி அந்நியப்பட்டுப் போனதே என்ற என் வருத்தத்தைச் சொன்னால் இவர்களுக்குப் புரியாது.

அப்பாவின் கடிதங்களை அவ்வப்போது எடுத்துப் படிக்கும்போது, மறுபடியும் நான் எனது பிறந்த ஊரில் பயணிப்பது போலிருக்கும். சுகமான பயணம்!

ஒரு கடிதத்தில் அப்பா இப்படி எழுதியிருப்பார்.

*இன்று நம் வீட்டு லக்ஷ்மி (பசுமாடு) மிகவும் அரற்றியது. பிரசவ வலியில் துடித்தது. இரவெல்லாம் கொல்லையில் நானும், மிருக வைத்தியரும்,*

நம் தோட்டத்து ஆளும் காவலிருந்தோம். லக்ஷ்மி வலியில் துடித்துக் குரல் எழுப்பும்போது, என்னுள்ளும் வலி கண்டது. ஆம்பிளையான நான் பிரசவ வலியை உணர்ந்து, துடித்து, கண்ணீர் விட்டேன். லக்ஷ்மி கன்றை ஈன்றபோது, ஏதோ எனக்குள்ளிருந்து கழன்று விழுந்த வேதனை. தான் ஈன்ற கன்றை லக்ஷ்மி நாக்கால் நக்கிக் கொடுத்தபோது, எனக்குள்ளும் சிலீரென்றது. ஏனோ, உன் நினைப்புதான் வந்தது அந்த சமயம் எனக்கு.

அப்பாவின் அந்தக் கடிதம் உலக இலக்கியமாய் எனக்கு பிரமிப்பளிக்கும். எனக்குள்ளும் தாய்மையுணர்வைத் தூண்டும். இந்தக் கடிதத்தை எப்போது படித்தாலும், கண் ஓரங்களில் நீர் கசியும்.

ஹாலில் டெலிபோன் மணி அடிக்க, என் நினைவு கலைந்தது. தொலைபேசியை எடுக்க நான் விரைந்தேன். அதற்குள் என் மனைவி எடுத்து விட்டாள்.

அவள் முகமெல்லாம் மத்தாப்பு.

"நம்ம புள்ளேதான். சொல்லுடா கண்ணு..."

நானும், அவளும் மாற்றி மாற்றிப் பேசியதில் அரைமணி நேரம் ஓடி விட்டது. ஃபோனை வைத்தபிறகு சொன்னாள்.

"ப்ச, பேசின இருப்தியே இல்லை. நிறைய விஷயங்கள் விட்டுப் போச்சு" என்றாள்.

எனக்குள் பொறி தட்டியது. நேரே உன் அறைக்குப் போய் பேப்பர், பேனாவுடன் திரும்பினேன்.

"என்ன செய்யப் போறீங்க?"

"நம்ம மகனுக்குக் கடிதம் எழுதப் போறேன். அவன் எழுதலேன்னா என்ன? நாம வாராவாரம் எழுதுவோமே" என்றேன்.

"எதுக்காம்?"

"எங்கப்பா எனக்குத் தந்த சந்தோஷத்தை, நாம அவனுக்குத் தர வேண்டாமா? நீயும் எழுது" என்றேன். ●



## "உட்லேன் ஐயா"

ஒரு கோலி சோடா வாங்கி
பெத்தவங்க குடிச்சி
மிச்சத்தைக் குழந்தைக்குக்
கொடுக்க...
கொஞ்சம் கீழே வழிந்தாலும்
பளீரென முதுகு விரியும்

அடிவாங்கிய குழந்தையின்
அழுகையில்
பேருந்து நிலைய சோபிதம்
கெட்டதாய்
'பேண்ட்' போட்டவன்
முறைத்துப் பார்க்க...

அழுகையைச் சமாதானப்படுத்த
ஈக்களை விலக்கிவிட்டு
கமர்க்கட் வாங்கும்
உலக சத்துணவுக் கூட உழவனின்
புள்ளைக்குப்
பாக்டீரியா பற்றி
பாடம் நடக்கும்
அவன் போகாத பள்ளியில்..!

- ந.வே. அருள்

# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2004



**படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டிக்கான கடைசித் தேதி நெருங்குகிறது...**

**முதல் பரிசு - ரூ. 10,000  இரண்டாம் பரிசு - ரூ. 7,500**

**மூன்றாம் பரிசு - ரூ. 5,000**

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும்.

எழுதுபவர்கள் முப்பத்தைந்து வயதுக் குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக் குட்பட்டவரானால் ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. ஜெராக்ஸ் போன்ற) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலை பேசி விசாரிப்புகளோ கூடாது.

**'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2004'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர், கல்கி,**
**கல்கி பில்டிங்ஸ்,**
**47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,**
**ஈக்காடுதாங்கல்,**
**சென்னை - 600 097.**

கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : **ஜூன் 15**

போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 ஆண்டு மலரில் வெளி யாகும்.

***படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.***

**– ஆசிரியர்**

சிரித்து வாழ வேண்டும் - 44

# எதிரில் வந்து நின்ற யானை!

■ நாகேஷ் ■



• 'வீட்டுக்கு வீடு' படத்தில்...
நன்றி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்



நான் கவரில் தெரிகிற என் நிழலின் கையில் இருக்கும், மது பாட்டில் மீது 'சியர்ஸ்' என்று சொல்லி மோதி உடைக்கிற காட்சிக்காக காத்துக் கொண்டு இருந்தேன். நான், பிடிவாதம் பிடித்து, டைரக்டர் பாலசந்தர் படத்தில் சேர்த்த காட்சியாயிற்றே அது! அதை வைத்து, நான் பந்தயம் வேறு கட்டியிருக்கிறேனே!

திரையில் அந்தக் குறிப்பிட்ட காட்சி வந்தது. படம் பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்கள் பலமாய்க் கைதட்டி ரசிக்கப் போகிறார்கள் என்று நான் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாக, ரசிகர்கள் மத்தியில் ரியாக்ஷன் ஏதும் இல்லை. எனக்குப் பெரும் ஏமாற்றம்! பாலசந்தர் என்னை அர்த்தத்துடன் ஒரு பார்வை பார்த்தார்.

சிறிது நேரத்தில் இடைவேளை. நானும், பாலுவும் தியேட்டரின் கேன்டீன் பக்கம் போனோம். அங்கே கண்ட காட்சி எங்களை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கியது. படம் பார்க்க வந்த ரசிகர்கள், கேன்டீனில் காபி, டீ, வாங்கிக் குடித்து விட்டு, காலி கப்களை 'சியர்ஸ்' என்று சொல்லி மோதி உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

'அட! அந்தக் காட்சிக்கு இப்படி ஒரு எஃபெக்டா?' என்று, இப்போது நான் அர்த்தத்துடன் பாலுவைப் பார்த்தேன்.

"ராவுஜி! நீ ஜெயிச்சுட்டே!" என்றார் பாலு.

"இல்லை! படத்தின் டைரக்டர் நீ! எனவே ஜெயித்தது நீதான்!" என்றேன் நான்.

தபால் இலாகாவில், கோபால கிருஷ்ணன் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு நாடகம் போடுவதில் பெரும் ஆர்வம் உண்டு. அவர் தம்முடைய நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு தம் மகளின் பெயரில் 'ராகினி ரிக்ரியேஷன்ஸ்' என்ற நாடகக் குழுவை நடத்தி வந்தார். ராகினி ரிக்ரியேஷன்ஸ் சார்பில் கே. பாலசந்தர் எழுதிய நாடகங்கள் மேடையேறியபோது, ரசிகர்கள் மத்தியில் அமோகமான வரவேற்பைப் பெற்றன.

நான் எல்லா நாடகக் குழுக்களிலும் நடித்துக் கொண்டிருந்த காலம் அது. "நீ

ஏறாத மேடை, தூக்கு மேடை ஒண்ணு தான்!" என்று எனது நண்பர்கள் எல்லாம் கேலி செய்ததும் உண்டு. நான் பால சந்தரின் நாடகத்தைப் பார்த்துவிட்டு, "நாமும் நாடகங்களில் நடித்து, பேரும் புகழும் பெற்று விட்டோம். ஆனால், இனி நடித்தால், பாலசந்தர் எழுதுகிற நாடகங்களில் தான் நடிக் கணும்!'' என்று ஆசைப் பட்டேன்.



நாங்கள் அதுபற்றி வெளிப்படையாகவே பேசி னோம். நாடகம் இருக்கிற நாட்களில், சினிமா ஷூட்டிங் இருந்தாலும் கூட, என் சம்பந்தப்பட்ட வேலைகளை முடித்து விட்டு, சரியான நேரத் துக்கு நாடக அரங்கத்துக்கு வந்து விடுவேன்.

அப்போது எனக்காகவே பாலசந்தர் எழுதின நாடகங்கள் பல உண்டு. அவற்றில் முதலாவது 'சர்வர் சுந்தரம்'. பாலசந்தருக்கு மட்டுமின்றி, பிரதான பாத்திரத்தில் நடித்த எனக்கும் சிறப்பான தொரு பெயரைப் பெற்றுத் தந்தது அந்த நாடகம். இருபத்து ஐந்து தடவைக்கு மேல் 'சர்வர் சுந்தரம்' மேடை ஏறியது.

அந்த நாளில், ஒரு நாடகம் இருபத்து ஐந்து தடவை நடக்கிறது என்றால் அது மிகவும் அசாதாரணமான விஷயம். காரணம், அந்தக் காலகட்டத்தில் நிறைய சபாக்கள் கிடையாது. அது தவிர, அப்போது நாடகம் போட்டுக் கொண்டி ருந்தவர்களில் சிவாஜி, மனோகர், எம்.ஆர்.ராதா, சகஸ்ரநாமம் போன்ற தொழில் முறை நாடகக் குழுக்களே அதிகம். இதற்கு மத்தியில் பாலுவின் நாட கங்கள் பெரும் வெற்றி பெற்றன என்றால், அதற்கு பாலுவின் புதுமையான கதை, காட்சி அமைப்புகள், நறுக்கான வசனங்கள்தான் காரணம்.

**ரா**கினி ரிக்ரியேஷன்ஸ் நாடகங் களில் நடித்துக் கொண்டிருந்தபோது, எனக்கு மிகவும் நெருக்கமாகிப் போனார் மேஜர் சுந்தரராஜன். மேஜரின் நடிப் பைப் பற்றி நான் சொல்லி உங்களுக் கெல்லாம் தெரியவேண்டும் என் பதில்லை.

நாடகம் முடிந்தவுடன், "என்ன சுந்தர ராஜா!'' என்று நான் சொன்னால் போதும். "ம்..சரி..சரி.. கிளம்பு.. வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லி என்னைத் தம்முடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் விடுவார்.

வீட்டுக்குப் போன வுடன், தட்டைப் போட்டு, "ம்...சாப்பிடு... வயிறாறச் சாப்பிடு! வத்தல் குழம்பு, சுட்ட அப்பளாம் காம்பி னேஷன் தான் ருசி!'' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறபோதே, சட் டென்று ஒரு நிமிஷம் தன் பேச்சை நிறுத்திவிட்டு, இலேசாக மூக்கை உறிஞ் சிப் பார்த்து, "அடுப்புல ஏதோ இலேசாத் தீயுது போல இருக்கே! என்னன்னு கவனி'' என்று கிச்சனுக்கு இன்ஸ்டிரக்ஷன் கொடுப்பார். உபசாரம் என்றால் அப்படி ஓர் உபசாரம். சுந்தரராஜன் வீட்டில் போய்ச் சாப்பிட்டால் வயிறு நிரம்புவது ஒருபக்கம். மனசுக்குத் திருப்தி இன் னொரு பக்கம்.

பல நாட்கள், அவரே, ''என்ன நாகேஷ்! வீட்டுக்கு வந்து ரொம்ப நாளாயிடுச்சு போல இருக்கே!" என்று சொல்லி அழைப்பார். சில நாட்கள், நானே, ''உன் வீட்டுச் சாப்பாடு வேணும்னு என் வயிறு நச்சரிக்குது'' என்று சொல்லிவிட்டுப் போவேன்.

நான் சும்மாவாவது, "நாளைக்கே சினிமா சான்ஸ் கிடைக்கலைன்னாலும், நீ கரண்டி பிடிச்சு, உன் வயித்துப் பிழைப்பை கவனிச்சுப்பே! எனக்குச் சாப்பிடத் தெரியுமேயொழிய, கரண்டி பிடிக்கத் தெரியாதே! டேய்! அது மாதிரி எனக்கு ஒரு நிலைமை வந்துட்டா, என்னைக் கைவிட்டுடாதே!" என்பேன்.

''கவலையே படாதே! எத்தனை நாளைக்கு வேணும்னாலும், உன்னை உட்கார வைச்சு சாப்பாடு போடத் தயார்!" என்பார்.

**ந**கைச்சுவை நடிகர்கள் என்றால், திரையைக் கலகலப்பாக்குவார்கள்.

ஆனால், தான் இருக்கும் இடத்தில் எப்போதும் கலகலப்பு இருக்கும்படி பண்ணிவிடுகிற நகைச்சுவை நடிகர், வி.கே. ராமசாமி.



எல்லோரும் செட்டில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறபோது, வி.கே.ராமசாமி அங்கே வருவார்.

"வாங்க வி.கே.ஆர்! உட்காருங்க!"

"பரவாயில்லை! வேணாங்க."

"என்னங்க ரொம்ப பிகு பண்ணிக்கறீங்க? சும்மா உட்காருங்க" என்றால் சட்டென்று. "உட்கார்ந்தா என்னால சும்மா இருக்க முடியாதுங்க" என்பார்.

சினிமா உலகைச் சேர்ந்தவர்கள் பலரும், வருஷா வருஷம் மாலை போட்டுக் கொண்டு நம்பியார் குருசாமி தலைமையில் சபரிமலைக்குப் போவது வழக்கம். அந்தக் குழுவில் இடம் பெற்று, நானும் போவது உண்டு. அப்போது வி.கே.ஆரும் வருவார்.

சரண கோஷம் எழுப்பியபடி, மலை ஏறுகிற சமயம். எல்லோரும் மிதமான வேகத்தில் நடப்பார்கள். ஆனால் வி.கே.ஆர். படு நிதானம். இது போதாது என்று, வழிநெடுக உள்ள கடைக்காரர்கள், இவரை அடையாளம் தெரிந்து கொண்டு சரணம் சொல்லிவிட்டு "வாங்க சாமி!' என்று சொல்லிவிட்டால் போதும். "அன்பா கூப்பிடுறான்! வாங்க, ஒரு காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம்!" என்று கடைக்குள் நுழைந்து விடுவார்.

இவர் நிதானமாக நடந்து வருகிற போது, மற்ற ஐயப்ப பக்தர்கள், "சாமியே ஐயப்பா!" என்று கோஷமிட்டபடி இவரைக் கடந்து போவார்கள். அப்போது, இவர் அந்த பக்தர்களைப் பார்த்து, 'சாமியே! ஐயா... போ' என்று கையசைத்து முன்னாலே போகச் சொல்லுவார். பக்தர்கள் யாராவது அவசரம் அவசரமாக மலை ஏறினால், "சாமி! ஏன் இப்படி ஓடுறீங்க! ஐயப்பன் எங்கேயும் போயிட மாட்டார்! நிதானமா போனாலும் தரிசனம் பண்ணலாம்" என்று சொல்லி தமாஷ் பண்ணுவார்.

ஒரு தடவை மலைப் பாதையில் போய்க் கொண்டிருந்தபோது, பெரிய யானை ஒன்று எதிரில் வந்து விட்டது. திடீரென்று யானையைப் பார்த்தவுடன், எங்கள் அனைவருக்கும் பயம் பிடித்துக் கொண்டது. எல்லோரும் நம்பியார் குருசாமியைப் பார்க்க, அவர் "சரணம், சொல்லுங்கள்!" என்று சொல்லி விட்டு, 'சாமியே....ய்!' என்று உரக்கக் குரல் கொடுக்க மற்ற அனைவரும் "சரணம் ஐயப்பா!" என்று சொன்னோம். மலை ஏறுகிற சமயம், காட்டுப் பாதையில் மிருகங்களைக் காண நேரிட்டால், ஐயப்பனைப் பிரார்த்தனை செய்து கொண்டு, சரணகோஷம் எழுப்பினால், எதிர்வரும் விலங்கு, துன்பம் ஏதும் செய்யாமல், போய்விடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அந்த சந்தர்ப்பத்திலும் நாங்கள் அதையேதான் செய்தோம். தொடர்ந்து உரத்த குரலில் எல்லாருமாய்ச் சேர்ந்து சரணம் சொல்லியும் யானை நகருவதாகக் காணோம். இதை கவனித்துக் கொண்டே இருந்த வி.கே.ராமசாமி, மெதுவாக நடந்து நம்பியார் குருசாமியிடம் சென்றார். யானையையும், குருசாமியையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, அவர் சொன்ன வார்த்தைகள்...

(சிரிப்பு தொடரும்)

"எதுக்கு சர்வர்கிட்ட ரிஷப ராசின்னு சொல்றீங்க?"

"அப்பதான் பேப்பர் ரோஸ்ட்ல ரிஷப ராசிக்கு இன்னைக்கு என்ன பலன்னு போடுவாங்க!"

- வே. ஆறுமுகம்

மழை நிற்கும் திசை - 1

கப்பல் மூழ்கிப் போனது இல்லை - நின்று போனது.

அர்விந்த் கவலையில் மூழ்கினான்.

"ஏகாம்பரம், கப்பல் மறுபடி எப்பப்பா செய்ல் ஆகும்...?" ஷிப்பிங் ஏஜண்டை ஃபோனில் கேட்டான்.

"புயல் கரையைக் கடந்த பிறகுதான் போகும். போகணும். ஒரு நிமிஷம். கேட்டு கரெக்டாவே சொல்லிடறேன்...!" ஹோல்ட் செய்து, அடுத்த லைனில் விசாரித்தது இவனுக்கும் கேட்டது.

"அஷ்ரப்.... 'டைகர் விங்ஸ்' எப்போ செய்ல் ஆகும் கேளு...?"

"மூணு நாளாகுமாம்...!" என் றான் ஏகாம்பரம். "எல்.சி. டைம் இருக்கில்ல சார்...?"



# தொலைந்த திசை!

"இல்லியே... அதான் பிரச்னை...!" அர்விந்த் வியர்த்தான். "மழை. தோல் காய லைங்கற காரணம் சொல்லி ஏற்கெனவே பதினைஞ்சு நாள் எக்ஸ்ட்ரா டைம் வாங்கிட்டேன். இனி முடியுமா...?" தலையில் கை வைத்துக் கொண்டான். "ஃபாரின் பையர் ஆறு லட்சம் வரைக்கும் காம்பன்சேஷன் கேப்பான்...!"

"ஆறு லட்சமா...?"

"இந்த வருஷத்துல இது மூணாவது தடவை. இன்னிக்குக் கப்பல் போகலேன்னா நான் மூழ்கிடுவேன்யா" என்று எரிந்து விழுந்தான்.

"ஹாங்காங் ஆண்டனிக்கு இம்மீடியட்டா மெய்ல் அனுப்பு ஹரி. சென்னைல புயல்... எனக்கு ஹார்ட் அட்டாக்...ஆஃபீஸ் கட்டடம் இடிஞ்சு போச்சு... எதாச்சும்... எதாச்சும் காரணம் சொல். எனக்கு எல்.சி. இன்னும் ஒரு வாரம் எக்ஸ்டென்ட் ஆகணும். ஹரி, ஹரி அப்...!" முழு கிளாஸ் தண்ணீரை அப்படியே தொண்டையில் சரித்துக் கொண்டான்.

'லெஜண்ட் லெதர் எக்ஸ்போர்ட்ஸ்' மேஜையிலிருந்த பெயர்ப் பலகையில் ஒரு துளி நீர் பட்டுத் தெறித்தது.

"என்ன பொழைப்புடா இது...!"

கண்ணாடிச் சுவரின் மழைத் தாரைகள் வழியே, சூரியன் எழுந்திருக்க வேண்டிய திசையை ஏக்கமாய்ப் பார்த்தபடி, பெருமூச்சுடன் நாற்காலியில் சரிந்தான் அர்விந்த். இன்னமும் புரட்டாத செய்தித் தாளின் ஓரத்தில் பேனாவால் கப்பல் வரைந்து



குறுக்கும் நெடுக்குமாய் அடித்தான்.

### ஞாபக மழை தினங்கள்

**ம**ழையும் கப்பல்களும் அர்விந்துக்கு மிகப் பிடித்திருந்த நாட்கள் அவை.

ரொம்ப நாட்கள் வரை அவன் மிக ரசித்த விளையாட்டு அது.

காகிதக் கப்பல்களால் மழை நீரை அலங்கரிப்பதில் தெருவில் அவனுக்கு நிகர் இல்லை.

கப்பலின் ஒரு பகுதியில் மூவர்ண தேசியக் கொடி, இன்னொரு பகுதியில் தன் பெயர் என்று வரைந்து வைத்துக் கொள்வான். என்ன அவசரத்தில் கப்பல் செய்தாலும், கொடியும் பெயரும் கப்பலின் இரு பக்கங்களிலும் மிகச் சரியாய் அமையும்படி செய்யும் லாகவம் அவனுக்கே உரியது.

தெருவின் இரு பக்கங்களிலும் திரண்டு ஓடும் மழை நதியில் எல்லா சின்னப் பையன்களையும் முந்திக் கொண்டு அவனது கப்பல்தான் முதலில் புறப்படும்.

கத்திக் கப்பல், சாதா கப்பல், இறகுக் கப்பல்... அர்விந்த் செய்யும் கப்பல்கள் அத்தனை சீக்கிரம் மூழ்காதவை.

**ஏ**ழாவது படிக்கும்போது, புதிதாக வந்த நடராஜன் சார், "எதிர்காலத்தில் யார் என்ன

■ இந்திய ராஜா ■

வாக விரும்புகிறீர்களோ, அதை இந்த வருடம் உங்கள் பெயரின் பின்னால் போட்டுக் கொள்ளலாம்'' என்றார்.

தினேஷ் டாக்டரானான். வித்யா விஞ்ஞானியானாள். கன்னியப்பன், 'எஸ்கன்னியப்பன் - ரஜினிகாந்த்' என்று எழுதி உதை வாங்கினான்.



## குஷ்சிங்!

சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற டின்னர் ஒன்றில் கலந்து கொண்ட குஷ்வந்த்சிங், காங்கிரஸ் பிரமுகர் ஒருவருக்கு தாம் நன்கொடை கொடுத்த விஷயம் பற்றிச் சொல்ல, மறு நாள் நாளிதழ்களில் அந்தச் செய்தி தான் டாப் ஃபிளாஷ்!

''1999ம் ஆண்டு; தேர்தல் சமயம். அந்த அரசியல்வாதியின் மாப்பிள்ளை என்னை அணுகினார். தம்முடைய

அர்விந்த் வீட்டு வாசலில் அப்பாவின் பெயர் பலகைக்குக் கீழே சாக்பீஸில் எழுதி வைத்தான். 'ஆர்.அர்விந்த் - மாலுமி'

ப்ளஸ் ஒன் சேரும்போது மரைன் இன்ஜினியரிங் சேர, எந்த குரூப் எடுக்க வேண்டும் என்று தடுமாறியபோது அப்பா அழைத்தார்.

''அதெல்லாம் வேணாம். லெதர் டெக்னாலஜி படி. லோன் வாங்கி தனியா தொழில் தொடங்கலாம். இருபது பர்செண்ட் நெட் ப்ராஃபிட்...'' என்றார்.

''அப்பா இல்லப்பா... நான்...''

''ஒண்ணும் பேசாத. எங்க கம்பெனில கண்கூடா பாக்கற நிஜம் இது. சொந்தமா கம்பெனி தொடங்கி, லட்ச லட்சமா சம்பாதிக்கணுங்கறது என்னோட கனவு. நீ... நீதான் நிஜமாக்கணும்...''

கப்பல் திசை மாறியது.

### மழை நிற்கும் திசை - 2

''சார்... ஹாங்காங்லேர்ந்து ரிட்டர்ன் மெயில் வந்தாச்சு. ஆண்டனி எல்.சி. எக்ஸ்டென்ட் பண்றாராம். ஆனா அவங்க புரொடெக்ஷன் நிக்காம இருக்க, ரெண்டு நாளைக்குள்ள பதினைஞ்சாயிரம் ஸ்கொயர் ஃபீட் மட்டும் ஃப்ளைட்ல அனுப்பச் சொல்றார்...'' ஹரி தகவல் சொன்னான்.

''ஏழரை போயி இப்ப இரண்டரைச் சனியா...?'' டெலிபோனை அவன் பக்கம் நகர்த்தி, ''ஏகாம்பரத்தைப் பிடி உடனே...'' என்றான் அர்விந்த்.

பிடித்தான்.

''ஹலோ ஏகாம்பரம்... பிரச்னை இப்ப கொஞ்சம் சின்னதாயிருக்கு...''

''சொல்லுங்க ஸார்...''

''இந்த ஷிப்மெண்ட்ல ஒரு பதினஞ்சாயிரம் அடி மட்டும் தனியா பிரிச்சு ஏர்ல அனுப்பணும். முடியுமா...?''

''.......''

''என்ன மேன்...?''

''கொஞ்சம் சிக்கல்தான். ஆனா பண்ணலாம். இந்த ஷிப்மெண்ட்டை 'ஷட் அவுட்' பண்ணி, இன்வாய்ஸ், பேக்கிங் லிஸ்ட், ஷிப்பிங் பில் கேன்சல் பண்ணி, ட்ராபேக் அப்ளிகேஷன் வித்ட்ரா பண்ணி... ஏர் ஷிப்மெண்டுக்காக மறுபடி எல்லா டாக்குமெண்ட்டையும் புதுசா தயாரிச்சு... அங்கங்க 'தனியா' கவனிச்சு... தாலியறுந்துடும்...''

''அதுக்குப் பதிலா டைகர் விங்ஸோட நங்கூரத்தை அறுத்து விடு மேன். மூழ்கித் தொலைச்சா இன்ஷூரன்ஸாவது கிளெய்ம் பண்ணலாம்...''

### இன்று பெய்த மழையில்...

திடீரென அடித்துப் பெய்தது கோடை மழை.

வராண்டாவில், வழக்கமாக அப்பா அமரும் ஈஸி சேரில் சாய்ந்து கண் மூடியிருந்தான். மழைச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

''டாடி...'' திமிர்ந்தான்.

மானார் தேர்தலில் நிற்கப் போவதாகவும், ஏன்
கொடை தந்து உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.
நான் உடனே ஒன்றரை லட்ச ரூபாய்க்கு செக் எழுதிக் கொடுத்தேன். தேர்தல் முடிந்
தது. பி.ஜே.பி வேட்பாளரான வி.கே. மல்ஹோத்ராவிடம் தோற்றுப் போனார் அந்த
வி.ஐ.பி. கொஞ்ச நாள் கழித்து, என்னைச் சந்திக்க வந்த காங்கிரஸ் நண்பர், "தமக்காகப்
பிரசாரம் செய்ததற்காக நன்றி சொல்லி விட்டுக் கிளம்பும்போது, மறக்காமல் ஒன்றரை
லட்ச ரூபாயைத் திருப்பித் தந்தார். "மிக்க நன்றி. உங்கள் பணத்தை நாங்கள்
செலவழிக்கவில்லை. அதனால் திருப்பித் தந்து விட்டேன்" என்றார். அரசியல்வாதியின்
கைக்குப் போன பணம், திரும்பி வந்ததைப் பார்த்து, மூச்சடைத்துப் போனேன்" என்று
பாராட்டியுள்ளார் குஷ்வந்த்சிங். யாரந்த நேர்மையான நண்பர்? யூகிக்க முடிகிறதா...?

- ஏ.எஸ்

பிரதமர் மன்மோகன் சிங்!

அபினேஷ். தலையில் ஹெட் பாண்டோடு கூடிய ஜப்பானிய சின்னக் குடை. கையில் காகிதங்கள்.

"என்ன கண்ணா...?"

"டாடி... கப்பல் செஞ்சுத் தாங்க டாடி..."

அர்விந்துக்கு தன் பால்ய தினங்கள் ஞாபகம் வந்தன. டைகர் விங்ஸின் நங்கூரத்தை வெட்டி விடச் சொல்லிக் கத்தியதும் நினைவுக்கு வந்தது.

மௌனமாய்க் காகிதத்தை வாங்கி மடித்தவன் முகம் மாறினான்.

"அபி... உனக்குக் கப்பல் வேணாம். எத்தனை கார், பைக், ஹெலிகாப்டர் வாங்கித் தந்திருக்கேன்? அதை வெச்சி விளையாடு போ..."

"டாடி... ப்ளீஸ் டாடி..." பிள்ளை ஏறக் குறைய இறைஞ்சினான். "அட்லீஸ்ட்... ஒண்ணே ஒண்ணாச்சும் செஞ்சுத் தாங்க டாடி..."

"வேணாம்... சொல்றதைக் கேள்..." குரல் சற்று கடுமையானது.

"அப்பா... ப்ளீஸ்ப்பா... நா இது வரைக்கும் மழைல கப்பல் விட்டதே இல்லைப்பா..." தந்தையின் கால்களைக் கட்டிக் கொண்டு கெஞ்சினான்.

அர்விந்த் கோபமானான். தன் சிறகைத் தானே பிய்த்தெறியும் பறவை போல, குழந்தையை உதறித் தள்ளினான். திமிறியவனின் கன்னங்களில் பளார் பளாரென அறைந்தான்.

"வேணாங்கறேன்ல? சொல்றதைக் கேளுடா ராஸ்கல்..."

"டேய்... டேய்... என்ன பண்ற குழந்தையை...? விடு. விடுடா..." உள்ளேயிருந்து அம்மா ஓடி வந்து விடுவித்து அணைத்துக் கொண்டாள்.

குழந்தையின் குடை பறந்து தனியே மழையில் கிடந்தது.

மழை நின்ற இரவு. மேகங்களுக்கிடையில் தயக்கமாய் நிலா.

அறைக்குள் நுழைந்த மனைவியிடம், "அபினேஷ் தூங்கிட்டானா...?" அர்விந்த் கேட்டான்.

"ம்..."

"இன்னும் ஜுரம் இருக்கா...?"

"இலேசா. சரி, ஏங்க இவ்வளோ முரடா நடந்துக்கிட்டீங்க...? என்னாச்சு உங்களுக்கு?"

"ஸாரிம்மா. வெரி ஸாரி. எனக்கே என் மேல வந்த கோபம் அது. கட்டுப்படுத்த முடியாம அவனைப் போய்... ச்சே..."

தலையைப் பிடித்துக் கொண்டான்.

"நான் அவனை அடிச்சதுக்குப் பதிலா என்னைத்தான் அடிச்சுக்கிட்டிருக்கணும்..."

"ஏன்...? ஏம்ப்பா...?" தோள் சாய்ந்து மென்குரலில் கேட்டாள்.

இடுங்கிப் பளபளக்கும் கண்களோடு அர்விந்த் அவளைப் பார்த்தான். சொன்னான்.

"ஏன்னா... எனக்கு... எனக்கு... கப்பல் செய்யறது எப்படிங்கறதே மறந்து போச்சு வித்யா..." ○

# ஜெயித்த கதை




**எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாளவிகா எடுத்த மார்க் விவரம் :**

**சமூகவியல் 97**
**கணிதம் 100**
**அறிவியல் 100**
**இந்தி 97**
**ஆங்கிலம் 89**
**டோட்டல்: 483/500!**

**பரீட்சை விடைகளை இவர் சொல்லச் சொல்ல வேறொருவர் எழுத வேண்டிய நிர்ப்பந்தம். மாளவிகாவுக்கு இது எப்படி நேர்ந்தது? அவர் தன்னம்பிக்கையுடன் போராடி, ஜெயித்த கதை மெய் சிலிர்க்க வைக்கும்.**

“என் அப்பா கிருஷ்ணன், ராஜஸ்தான் மாநில குடிநீர் வாரியத்தில் தலைமை இஞ்சினியராக பிக்கானீர் என்ற ஊரில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். எங்கள் வீடு, ஒரு ராணுவ ஆயுதக் கிடங்குக்கு வெகு அருகில் இருந்தது. 2001ல் அந்த ஆயுதக் கிடங்கு தீ விபத்துக்குள்ளானது. அப்போது, கிடங்கிலிருந்து ஏதோ ஒன்று எங்கள் வீட்டுத் தோட்டத்தில் வந்து விழுந்தது.

நான், அது ஒரு வெடித்து விட்ட காலி குண்டு என்று நினைத்து விட்டேன். அதை எடுத்துக் கொண்டு வந்து, ஷோகேஸில் வைத்து விட்டேன். வீட்டுக்கு வருகிற யாராவது, “அது என்ன?” என்று கேட்டால், “லைவ் வெடிகுண்டு ஜாக்கிரதை” என்று கலாட்டா பண்ணுவேன்.

சுமார் ஒரு வருட காலம், அந்த வெடிகுண்டு சமர்த்தாக என் கஸ்டடியில் இருந்தது.

2002-ம் வருடம் மே 22ம் தேதி பகல் ஒரு மணி இருக்கும். என் ஜீன்ஸ் பாண்ட்டில் கொஞ்சம் ஒட்டு வேலை செய்து கொண்டிருந்தேன். தட்டுவதற்குக் கொஞ்சம் கனமாக ஏதாவது கிடைக்குமா என்று நினைத்தபோது, ஷோகேஸில் வைத்திருந்த வெடிகுண்டு நினைவுக்கு வந்தது. அதை எடுத்துக் கொண்டு வந்தேன். தரையில் கால்களை ஊன்றி உட்கார்ந்து கொண்டு, ஜீன்ஸின் மீது ஒரு அடி அடித்தேன். இரண்டாவது அடி அடித்ததும், பயங்கரமான சப்தத்துடன் குண்டு வெடித்தது.

சப்தம் கேட்டு என் அப்பாவும், அவருடன் பேசிக் கொண்டிருந்த அவரது நண்பரும் ஓடி வந்தார்கள். அறைக்

தள்ளே நான் எங்கே இருக்கிறேன் என்று சட்டென்று கண்டுபிடிக்க முடியாமல் புகையில் தடுமாறினார்கள். கொஞ்சம் புகை விலகியதும் பார்த்தால், என் இரண்டு முழங்கைகளையும் காணோம். இரண்டு கால்களிலும் முட்டிக்குக் கீழே பலத்த அடி. சதை தொங்கிக் கொண்டிருக்க, தரையெங்கும் ஒரே ரத்தம். அறையெங்கும் சிதறிய சதைப் பகுதிகள்.

உடனே ஜீப்பில் போட்டு, ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். டாக்டர்களுக்கு என்னைப் பார்த்தவுடன் ஒரே அதிர்ச்சி. ஜெய்ப்பூரில் அளிக்கப்பட்ட ஒரு மாத சிகிச்சையில் இலேசாகப் பலன் தெரிந்தது.

தொடைப் பகுதியிலிருந்து, சருமத்தை எடுத்து, பாதிக்கப்பட்ட பகுதியில் பொருத்தியபோது, அதிர்ஷ்டவசமாக, ஏற்றுக் கொண்டது. கால்களுக்கு, எலும்பு முறிவு சிகிச்சைக்காக மாவு கட்டு, மூன்று மாதத்துக்கு ஒரு தடவை என்று நான்கு தடவை போட்டும் பலன் கிடைக்கவில்லை.




• அம்மாவுடன்...

சென்னைக்கு வந்தோம். அண்ணா நகரில் உள்ள போன் அண்டு ஜாயிண்ட் கிளினிக்கில் என்னைப் பரிசோதித்தார்கள். இங்கே ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட் சிவமுருகனும், பிளாஸ்டிக் சர்ஜன் சதீஷும் சிகிச்சை ஆரம்பித்தனர். எலும்பே இல்லாத கால் பகுதியில் எலும்பின் இன்னொரு பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பைப் பொருத்தி ஸ்குரூ போட்டு முடுக்கப்பட்டது. இன்னொரு காலில், சேராத எலும்பை சேர்த்து வைத்து பிளேட் பொருத்தினார்கள். வீட்டுக்குள்ளேயே நாலைந்து அடி வைத்து நடக்கப் பழகினேன். அப்புறம் பத்துப் பதினைந்து அடி வரை நடந்தேன். எனக்கு செயற்கைக் கரங்கள் பொருத்தப்பட்டன. கைகள் இருந்த வரை, அதன் அருமை தெரியவில்லை. கொசு கடித்தால்கூட யாராவது விரட்ட வேண்டும். தலை வார வேண்டும். தாகம் எடுத்தால் யாராவது வந்து புகட்டும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால் என் அம்மாகூடவே இருந்தார்கள். ஒரு நிமிஷம் அகலாமல், வேண்டியதை செய்து ஒரு கைக் குழந்தை போல பார்த்துக் கொண்டார்கள். இன்று... செயற்கைக் கைகளால் என் பாடங்களை நானே எழுதுகிறேன். அம்மாவின் முகத்தில் நிம்மதி.

சௌகார்பேட்டையில் ஒரு பள்ளிக்கூடம்தான் எனக்கு தேர்வு மையம். எனக்காக பரீட்சை எழுதுவதற்கு ஓர் ஆசிரியை அனுப்பப்பட்டிருந்தார். ''முதல் நாள் பரீட்சை முடிந்ததும், "ரொம்ப நல்லா படிச்சுட்டு வந்திருக்கே! வெல்டன்!" என்றார். கடைசி பரீட்சையின் போது, என் கதையைத் தெரிந்து கொண்டு என்னை மிகவும் பாராட்டினார்.

விபத்துக்குள்ளான சில நாட்களில், நான் என் அம்மாவிடம் கண்டிப்பாகச் சொன்னேன். "யார் அழுதாலும் பரவாயில்லை! நீ அழுதால் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் உடைந்து போகிறேன். எனவே, அம்மா இனிமேல் நான் எப்போதும் உன் கண்ணில் கண்ணீரைப் பார்க்கக் கூடாது. அதன்பின் அம்மா கண்ணில் நான் கண்ணீரையே பார்க்கவில்லை. இப்போது அம்மா கண்ணில் கண்ணீர். ஆனால் இது என்னுடைய சாதனையால் வடியும் சந்தோஷக் கண்ணீர்!

சந்திப்பு, படங்கள் :
எஸ். சந்திரமௌலி



அமரர் கல்கி

# மழையும்

தங்களை 'நாஸ்திகர்கள்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறவர்களும், 'வேத புராணங்களில் நம்பிக்கையில்லை' என்று சொல்லிக் கொள்கிறவர்களும், மழைக்காகப் பிரார்த்தனை செய்யும் கொள்கையைக் கேலி செய்வதில் வியப்பு ஒன்றுமில்லை. அது அவர்களிடம் நாம் எதிர்பார்க்கக் கூடியதுதான்.

ஆனால் வேத சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆஸ்திக சிரோ ரத்தின சூடாமணிகளும் அதே தோரணையில் பேசுவதும் எழுதுவதும் விந்தையிலும் விந்தையான விஷயம் அல்லவா?

பேராசிரியர் நாகராஜ சர்மா என்பவர் அத்தகைய ஆஸ்திக சிரோ ரத்தின சூடாமணிகளில் ஒருவர். ராஜாஜி மழைக்காகப் பிரார்த்தனை செய்யும்படி கூறியதைக் கேலி செய்தும் கண்டித்தும் மேற்படி பேராசிரியர் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். "கடவுள் அப்படியெல்லாம் பிரார்த்தனைக்கு மசிந்து விடுவாரா? தண்ணீருக்காகக் கிணறு தோண்ட வேண்டும். அதை விட்டு மழைக்குப் பிரார்த்தனை செய்யச் சொல்கிறாரே இந்த முதன் மந்திரி?" என்று அந்தப் பேராசிரியர் எழுதியிருந்தார்.

தண்ணீருக்குக் கிணறு தோண்ட வேண்டும் என்பது பேராசிரியர்களுக்குத்தான் தெரியும் என்பதில்லை. எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கூடத் தெரியும். சென்னை இராஜ்யத்தில் கிணறுகள் தோண்டப்பட்டுத்தான் வருகின்றன.

ஆனால் எவ்வளவு கிணறுகள் தோண்டினால் என்ன? ஆழமாக்கினால்தான் என்ன? நெடுங்காலம் மழை பெய்யாமலிருந்தால், கிணற்றைத் தோண்டத் தோண்டத் தண்ணீர் பாதாளத்தில் போய்க் கொண்டு தானிருக்கும். அத்தகைய பாதாளக் கிணறுகள் மூலம் குடிக்கத் தண்ணீர் கிடைத்தால் பெரிய காரியம். பஞ்சமும் பட்டினியும் தீருமா!

முயற்சியினாலும் அறிவினாலும் மற்ற எந்தக் காரியத்தையும் மனிதன் சாதிக்கலாம். ஆனால் மழை பெய்யச் செய்யும் முறையை இன்னும் மனிதன் கண்டு பிடிக்கவில்லை. "மனிதனுக்கும் அவனுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் மேற்பட்ட தெய்வ சக்தி ஒன்று உண்டு' என்பதை மழையும் மழையின்மையும்தான் நமக்கு நினைவூட்டி வருகின்றன.

வேதரிஷிகள் முதல் மகாத்மா காந்தி வரையில் பிரார்த்தனையின் சக்தியை நமக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

"பிரார்த்தனையினால் மழை வராது" என்று ஆசிரியர் நாகராஜ சர்மா சொல்வது உண்மையானால் வேதங்களில் வருணனைப் பிரார்த்திக்கும் மந்திரங்களெல்லாம் பொருளற்றவையா?

'வீழ்க தண்புனல்!" என்றும்



# பிரார்த்தனையும்

*"மாமழை போற்றுதும்!"*

என்றும் பிரார்த்தனை செய்த தமிழ் நாட்டு முனிவர்கள் வெற்றுரை யாளர்களா?

உண்மை உள்ளத்துடனும் முழு நம்பிக்கையுடனும் பெருந்திரளான மக்கள் பிரார்த்தனை செய்தால், அதற்கு நிச்சயம் பலன் கிட்டியே தீரும். மழை பெய்யும்; நாடும் செழிக்கும்!

***- 25.5.1952 கல்கி***

## நாம் பிரார்த்தனை செய்யவில்லை!

சென்ற இதழில் நாம் தலையங்கம் எழுதத் தொடங்கியபோது சென்னையில மழை பெய்ய ஆரம்பித்திருந்தது. பிறகு, கொட்டு என்று கொட்டி விட்டது. பஞ்சப் பிரதேசங்களாகிய ராயல சீமையிலும், செங்கற்பட்டு, வடாற்காடு ஜில்லாக்களிலும் கூட நல்ல மழை பெய்து பூமி குளிர்ந்து, மக்களின் உள்ளங்களும் குளிர்ந்திருக்கின்றன.

கடவுள் பெயரைச் சொல்லவும் பிரார்த்தனையைப் பற்றிப் பேசவும் வெட்கப்பட்டுக் கொண்டிருந்த காலம் போய், ''மழைக்காக நாங்கள் கடவுளைப் பிரார்த்தித்தோம்'' ''நாங்களும் பிரார்த்தனை செலுத்தினோம்'' என்று பல சமயத்தினரும் பற்பல ஸ்தாபனங்களும் தனி மனிதர்கள் பலரும் சொல்லிக் கொள்ள முன் வருகிறார்கள்.

மழையினால் நேர்ந்த மற்ற நன்மைகளோடு இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உண்மை உள்ளத்துடன் பலரும் பிராத்தனை செய்ததினாலேயே இவ்விதம் கடுங் கோடைக் காலத்தில் பெரு மழை பெய்து தண்ணீர்ப் பஞ்சம் நிவர்த்தியாயிற்று என்று சொல்வது மிகை யாகாது.

"பிரார்த்தனையைப் பற்றி இவ்வளவு எழுதியிருக்கிறீரே? நீர் மழைக்காகப் பிரார்த்தனை செய்தீரா?" என்று ஒரு நேயர் கேட்டிருக்கிறார்.

நாம் பிரார்த்தனை செய்யவில்லை என்பதை ஒப்புக் கொண்டு விடுகிறோம்.

நம்முடைய பிரார்த்தனை இல்லாமலே கட்டாயம் மழை பொழியும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு இருந்து வந்ததுதான் காரணம்.

பிரார்த்தனையின் சக்தியில் நமக்கு உள்ள நம்பிக்கையைக் காட்டிலும் மகான்களுடைய தபோ பலத்தில் நமக்கு நம்பிக்கை அதிகம்.

***- 1.6.1952 கல்கி***

**■ சத்தியப்ரியன் ■**

# 6

# வலம்புரி

"ரிசர்வ் பாங்குகாரவுக கொண்டு வரும் சட்ட திட்டங்களைப் பார்த்தா நகரத்தார் எல்லாருமே வட்டித் தொழிலை இழுத்து மூடிப்புட்டு நடுத்தெருவுல நிக்க வேண்டியதுதான் போலிருக்கு. வட்டிக்கு விட்டு வட்டி வாங்கி, வாங்கின பணத்தை முறையா முதலீடு செஞ்சு, லாபம் பார்த்து, டிவிடென்ட் கொடுத்து வாழ்ந்த வாழ்க்கை ஒண்ணுமில்லாமப் போயிரும் போல இருக்கே. சனங்களையும் சொல்லணும். அரை பர்சன்ட் வட்டி கூட கொடுத்தாக் கூட போதும். ஃபைனான்ஸ் கம்பெனி ஒழுங்கா நடக்குதா என்னன்னு பார்க்காம கொட்ட வேண்டியது..."

"தம்பி இப்படிப் பொளந்து கட்டுது" என்றபடி அண்ணாமலையை ஒதுங்கி உட்காரச் சொல்லிவிட்டு தெய்வானை ஆச்சியும் ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

"அட, போ ஆத்தா! ராங்கியம் மெய்யப்ப செட்டியார் சென்னையில் பெரிய அளவில் நடத்தும் சீட்டு கம்பெனியை மூடப் போறாகன்னு பொதுசனப் பேச்சா இருக்கு."

அழகப்பன் தேக்கு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். சரசுவதி பட்டகசாலையில், தரையில் முல்லைப்பூ அரும்புகளைக் கொட்டி பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள். தனித்தனி உலை என்பதால் லட்சுமி அவள் வீட்டுக்குள் சோறு பொங்கிக் கொண்டிருந்தாள். சிறுசுகள் எல்லாரும் ஆளுக்கொன்றாகப் படித்துக் கொண்டோ, விளையாடிக் கொண்டோ இருந்தன. எல்லாருடைய காதுகள் மட்டும் இரண்டாம் கட்டில் இருந்தன.

"நீ ஷேர் போட்டு வெச்சிருக்கியா அவுக கம்பெனியில, இல்லை டெபாசிட்டுப் போட்டு வெச்சிருக்கியா?"

"டிபெஞ்சர்தான் இருக்கும். இருபதாயிரத்துக்கு..."

"ப்பூ, இவ்வளவுதானே!"

"அதுக்கு இல்லை ஆத்தா! இன்னைக்கு இருக்கற நெலமையில் பொருளா



தாரம் ரொம்ப மோசமா இருக்கு."

"அந்தக் காலத்தில் இல்லியா? பர்மாவில் பிழைக்கப் போன நம்ம செட்டியாருங்க, கவர்மெண்ட் மாறின உடனே அலறிட்டு வரலியா? எல்லாம் தனியார் மயமா இந்தியா இருந்த காலம் மாறி எல்லாம் பொதுத்துறையா மாறிச்சு. அப்பவும் கூச்சல்தான் போட்டோம். இப்பவும் போடத்தான் செய்யறோம், எல்லாத்தையும் தனியார்மயமாக்குறாங்கனேன்னுட்டு..." என்றாள் தெய்வானை ஆச்சி.

"இந்தப் போடு போடுறியளே!" என்றான் அண்ணாமலை.

"நான் அந்தக் கால ஈ.எஸ்.எஸ்.எல்.ஸி" என்றார் தெய்வானை ஆச்சி.

'பழைய பித்தலை விடாது ஆச்சி' என்று சரசுவதி மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள்.

சரசுவதி குவித்து வைத்திருந்த முல்லைப் பூக்களின் மணம், ஜன்னல் இடுக்குகளைத் தள்ளி உதறிவிட்டு, பீறிக்கொண்டு வந்த மாலை சூரியக் கதிர்கள் அழகப்பனின் மேலே பட்டு பொன்னிறமாக வழிந்தது எல்லாமே கதிரேசன் மனத்திற்கு இதமாக இருந்தது. கிளி கொத்தி நழுவி விழுந்த கொடுக்காப்புளி பழத்தைப் போல, தூங்குவதும், புழங்குவதும் மட்டும்தான் அவனுக்குப் புறப்பகுதி. உள்ளே தனி அறை ஒழித்துக் கொடுக்கவில்லை. அவனும் கேட்கவில்லை.

தெய்வானை ஆச்சிக்காக உயிரைக் கூட விட்டுவிடலாம்



தான். என்ன ஒரு வாஞ்சை. ஆயிரம் ஆகட்டுமே; தெய்வானை ஆச்சி தமது அறையில், வயிற்றில் பிறந்த மகனான நாகப்பனைக் கூட படுக்க அனுமதிப்பதில்லை. பெற்ற மகன்தான். ஆனால் இரவில் எந்த நேரத்திற்கு வருவான் என்று தெரியாது. நினைத்துக் கொண்டால் சென்னைக்குக் கிளம்பிவிடுவான். அதையும் மீறி தெய்வானை ஆச்சிக்கு நாகப்பனிடம் தனிப்பாசம் உண்டு. கடைக்குட்டி என்பது ஒரு காரணம். சிதம்பர செட்டியார் சாடையில் மகன் இருப்பது மற்றொரு காரணம். அவன் மேல் அவள் காட்டிய பிரியம், நெற்றியில் திருநீறு இடும்பொழுதோ, சிகையைக் கோதிவிடும்பொழுதோ, அவன் மோட்டார் சைக்கிள் வாசலில் நுழைந்ததும் தன்னிச்சையாக கண்கள் வாசல் பக்கம் திரும்பும்பொழுதோ வெளிப்பட்டு விடும். ஆனால் நாகப்பன் அதைப் புரிந்துகொள்ளவே இல்லை.

ஆனால் கதிரேசனுக்குத் தெய்வானை ஆச்சியின் ஒவ்வொரு அசைவும் அத்துபடி. காலையில் ஆச்சி எழுந்ததும் வணங்கும் சிதம்பரம் செட்டியாரின் படம்; பித்தளை லோட்டா முழுவதும் நிறைத்துக் குடிக்கும் காப்பித் தண்ணி; வெயில், கூதல் என்பது பாராமல் குளிக்கும் குளிர்ந்த நீர்; மனப்பாடமாய்ச் சொல்லும் மாணிக்கவாசகரின் சிவ புராணம்; சமையல் கூடத்தில் நின்றபடி சரஸ்வதியையும், லட்சுமியையும் ஏவியபடி வாங்கும் வேலை; முதல்நாள் கணக்கு, வழக்குகளை மூக்குக்கண்ணாடியைத் தூக்கிவிட்டபடி பார்க்கும் அக்கறை, எல்லாம் அத்துபடி. ஞாயிற்றுக்கிழமைகளில் ஆச்சியுடன் சந்தைக்குப் போய் கறிகாய் வாங்கி வருவது; வெள்ளி செவ்வாய் கொப்புடையம்மன் கோவில்; பிரதோஷத்தன்று சிவன் கோவில் எல்லாவற்றுக்கும் கதிரேசன் தான் துணைக்குப் போக வேண்டும். வருடம் ஒருமுறை தீபாவளியை ஒட்டி மதுரைக்குப் போய் வீட்டில் உள்ள எல்லாருக்கும் புதுத்துணி எடுக்க, அவன் மட்டும்தான் போக வேண்டும். சின்ன பிள்ளைகளின் துணி அளவிலிருந்து யார் யாருக்கு என்ன நிறம் பிடிக்கும், என்ன நிறம் யாருக்குச் சரியாக இருக்கும் எனப் பார்த்துப் பார்த்து வாங்க ஆச்சியால் மட்டும்தான் முடியும். ஆச்சியின் மூச்சுக்காற்றின் ஏற்ற இறக்கத்தைக் கூடப் புரிந்து வைத்திருப்பதால்தான் இரவில் ஒரு துணையாக, ஒரு மருத்துவச் செவிலி போல கதிரேசன், ஆச்சியின் அறையிலேயே படுத்துக் கொள்கிறான். ஒரு சின்ன இருமல் வந்தால்கூட சட்டென்று விழித்துக் கொண்டு ஆச்சியின் நலம் விசாரிக்கும் தன்மை, தாய் மகன் உறவுக்கும் மேலானது.


நாகப்பனின் அசூயையை அதிகப்படுத்தும் விஷயங்களில் இதுவும் ஒன்று.

"ஏன் இப்படி ஆயிருச்சுன்னு யோசிச்சிருக்கீகளா ஆத்தா?" என்றான் அருணாசலம்.

"எது?"

"பொருளாதார ஏற்ற தாழ்வுகள்."

பிள்ளை, அம்மாவை ஆழம் பார்க்கிறானா அம்மா புரிய வைக்கப் போகிறானா என்பதைத் தெரிந்து கொள்ள மற்ற நால்வரும் தெய்வானை ஆச்சியின் பதிலுக்குக் காத்திருந்தார்கள். நாகப்பன் தனி அறையில் இருந்தான். கதிரேசனும், ஆச்சியும் ஒரே அறையில் பேசிக் கொண்டிருந்தால் அவனால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.



"இந்தக் காலத்துல பசங்ககிட்டே கேள்வி கேட்கவே பயமாயிருக்கு!"

"ஏன்?"

"திருக்குறளை இயற்றியவர் யார்னு கேட்டேன்... 'இதுகூட தெரியாம எப்படி சார் வாத்தியார் வேலைக்கு வந்தீங்க'ன்னு திருப்பிக் கேட்கிறான்!"

- ச.ஆ. கேசவன்

கடு சொல்லாகவோ, சிடுசிடுப்பாகவோ அதை வெளிப்படுத்த அவன் தயங்கியதே இல்லை. நாகப்பன் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தானே அன்றி கவனம் முழுவதும் அவர்கள் பேச்சிலேயே இருந்தது.

ஆச்சி, சிரித்தபடி அழகப்பனை ஆமோதித்து விட்டு தொடர்ந்தாள். "ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு தொழில்னு ஆதியிலே இருந்தது..."

"ஆமாம்."

"ஆனா இப்போ யாருமே அவுக, அவுக தொழிலைச் செய்யுறதில்லே... எல்லாரிடமும் ஒரே நோக்கம்; ஒரே குறிக்கோள். எந்த வழியிலாவது பணம் சம்பாரிக்கனும். பணம் மட்டுமே பிரதானமாயிடுச்சு. விளம்பர உலகம் இந்தப் போடு போடுதுன்னா என்ன காரணம்? விஷயம் தெரிஞ்சவன், விஷயம் தெரியாதவன், அனுபவம் உள்ளவன், இல்லாதவன்னு எல்லா பயலுகளும் வியாபாரம் பண்ணி காசு சம்பாதிக்கனும்னு வந்துட்டாங்க. வியாபார விருத்தியை மனசில் கொண்டே அரசாங்கமும் சட்ட திட்டங்களை மாத்துது. கல்வித் திட்டங்கள் வியாபார அடிப்படையில் மாறிக்கிட்டு வருது. தொழில் அல்லது வியாபாரம்! எல்லாருமே பணம் பண்ணும் வியாபாரிகளா மாறிட்டு வாரப்ப தனிப்பட்ட முறையில் வைசியர்ன்ற அடையாளம் எதற்கு? நகரத்தார்னு ஓர் இனம் எதுக்கு?" என்றாள் ஆச்சி.

ஆச்சியின் கேள்வியில் தொக்கி நின்ற துயரத்தை அனைவராலும் புரிந்து கொள்ள முடிந்தது.

"இவ்வளவு யோசிக்கிறீக இல்ல... அப்புறம் ஏன் ஒரு தோசிப் பயலை வீட்டோடு வெச்சுக்கிட்டு அவதிப்படுறீக?" என சீற்றமாக நாகப்பன் அறைக்குள்ளிருந்து வெளியே வந்து கேட்டான்.

அழகப்பன் ஆச்சரியத்துடன் நாகப்பனைப் பார்த்தார். அவனுடைய நினைப்பு முழுவதுமே கதிரேசன் மீதான வெறுப்பு மட்டுமே மேலோங்கி இருக்குமா? ஏன் இவன் இப்படி வளர்கிறான்?



"நம்ம கட்சியில ஏகப்பட்ட கிரிக்கெட் வீரர்களைச் சேர்த்தது நல்லதாப் போச்சு!"

"எப்படிச் சொல்றீங்க?"

"மேடையிலே தலைவர் மேல வந்து விழற கல்லுங்களை எப்படி 'காட்ச்' பிடிக்கிறாங்க, பாருங்க!"

- டி. வெங்கட்

சம வயதைச் சேர்ந்தவன் என்பதாலா? வளவுக்குள் வேறு எவராவது அவன் மனத்தைக் கலைக்கிறார்களா? அப்படிக் கலைத்தாலும் இவனுக்குப் புத்தி எங்கே போயிற்று? சிறுவயதில் ஆயாவின் பராமரிப்பில் வளர்ந்தது காரணமா? பொறாமை என்பது பெருநெருப்பல்லவா?

"நாகப்பா! இவ்வளவு வன்மத்தைக் கொட்டுற அளவுக்குக் கதிரேசன் என்ன பாவமய்யா பண்ணினான்?" என முதன் முறையாக, அழகப்பன் அனைவர் முன்னிலையிலும் அவனை எதிர்க்கேள்வி கேட்டார்.

நாகப்பனின் அறியாமைக் கோபம் உச்சந்தலைக்கு ஏறியது.

"வேலியில போற ஓணானை வீட்டுக்குள்ளாற விட்டுக்கிட்டு ஏன் அவிப்படறீக? அடிச்சுத் தொரத்தாம?"

"நாம இப்ப இதைப் பத்திப் பேசலியே நாகப்பா" என்றார் அழகப்பன்.

தெய்வானை ஆச்சிக்கும் நாகப்பனின் வேகம் அச்சமூட்டுவதாக இருந்தது. கூடியிருந்த பெண்களுக்கும் ஒரு கலக்கல் ஏற்பட்டது. தன்னால் மேலும் அசம்பாவிதம் நிகழ வேண்டாம் என கதிரேசன் எழ முயற்சி செய்தான். அருணாசலம் கண் சாடை காட்டி கையால் பிடித்து அமர்த்தினான். மாலைக் கதிரவனின் ஒரு தனிக் கற்றை அருணாசலத்தின் சிகையின் மீது சாய்வாக இறங்கியது. அந்த ஒரு கணத்தில் அவன் ஒரு பகுதி



அடுத்த மினி கல்கி

# சர்க்கரையில் அக்கறை!

சிகையை வெளுப்பாய் மாற்றியது கதிரேசனுக்கு அற்புதமாய் இருந்தது.

"அதைப்பத்தித்தான் பேசுறோம்" என்றான் நாகப்பன்.

"எப்படி?" என்றாள் ஆச்சி.

"இனம் காண்கோணும், இனம் காக்கோணும்னு சொல்றீக. ஆனா அப்பச்சி ஏதோ ஓர் ஊரில் சேர்த்துக்கிட்ட பொம்பளைக்குப் பொறந்த பயலை வீட்டோட வெச்சிருக்கதுக்கு என்ன அர்த்தம்? துளசிக்கும், பார்த்தீனியத்துக்கும் வித்யாசம் தெரியாமலா போயிடுச்சு?"

"அப்பச்சியப் பத்தி தப்பா பேசாதய்யா" என்றார் அழகப்பன்.

"அப்பச்சின்னு இல்ல. எல்லா ஆம்பளையாளுங்களையும் பொதுவாத்தான் சொல்றேன். வியாபாரம்னு போற இடங்களில் ஆம்பளையாளுங்களுக்கு அப்படி, இப்படின்னு தொடர்பு ஏற்படத்தான் செய்யும். பணம் கொடுத்து பைசல் பண்ணிடுவாக. இது என்ன ஊரில் இல்லாத வழக்கமா வீட்டோட வளக்குறது?" என்றான்.

மற்ற புள்ளிகளால் கிளப்பப்பட்ட முரண்பாடு மீண்டும் மகனால் கேட்கப்படுகிறது. நயந்து சொன்னவர்கள், பயந்து சொன்னவர்கள், மிரட்டியவர்கள், தூற்றியவர்கள் என அனைவர் வாயையும் அடைத்து இருபத்தியிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அழகப்பனுக்கும், அருணாசலத்துக்கும் இப்படி ஓர் இழிவான எண்ணம் இருந்ததில்லை.

"நீ சொல்லுறாப்பல அப்பச்சி ஒண்ணும் ஊருக்கு ஒண்ணா பொம்பளைங்களைச் சேர்த்துக்கிட்டவரு இல்ல. இவுங்க அம்மாவும் எந்த ஆம்பளைய மடக்கிப் போடலாம்னு திரிஞ்ச பொம்பள இல்ல. அவங்க அவங்களுக்கு ஒரு நெறி, நேர்மை இருந்தது. இந்தப் பிள்ளையும் அப்படி ஒரு வார்ப்புதான். ஒன் சொத்துக்குன்னு இவன் வந்து நிக்க மாட்டான். ஏற்கெனவே இவங்கப்பச்சி இவனுக்குச் சொத்து எழுதி வெச்சிப் புட்டாரு."

"என்ன ஆத்தா சொல்றீக? வப்பாட்டி மகனுக்குக் குடும்பச் சொத்தில் எந்த உரிமையும் இல்லைன்னு கோர்ட்டு வழக்கில் தீர்ப்பே ஆகியிருக்கு."

"குடும்பச் சொத்துலதானே? உங்கப்பச்சி சுயமா சம்பாரிச்ச ரப்பர் எஸ்டேட்டிலயும், வள்ளி மெடிக்கல்ஸிலயும் ஒரு பாகம் இவனுக்குண்டுன்னு உயில் எழுதி வெச்சுட்டுத்தான் போயிருக்காக!"

பல நாட்கள் மனத்தில் பூட்டி வைத்திருந்த சங்கதியை ஆச்சி சபையில் போட்டு உடைத்தாள்.

நாகப்பனிடம் இரண்டு நிமிடங்கள் பேச்சே இல்லை. ஆச்சி என்ன சொல்கிறார்? மெய்யாகவா? இது வரை அவனைக் கடுஞ்சொற்களால் அடித்துத் துரத்தி விடலாம் என நம்பியிருந்தவனுக்கு ஆச்சியின் வார்த்தைகள் பேரிடி விழுந்தது போலானது. அவ்வளவு எளிதில் இவனை வீழ்த்த முடியாது என்பது புரிந்தது.

"அதான் நாயி விடாம வீட்டைச் சுத்தி வருதா?" என நாகப்பன் உறுமினான்.

அவனுடைய பொறாமையின் வேகம் அனைவருக்கும் அச்சமூட்டுவதாகவே இருந்தது.

(தொடரும்)

# நாயகன்!



இந்தியாவிலிருந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்குப் படிக்க வந்திருந்த அந்த இளைஞனைப் பார்த்து பேராசிரியர் ஜென்னிங்ஸ், "என்ன படிக்க விரும்புகிறாய்?" என்று கேட்டார். அந்த இளைஞர் இலேசான பதற்றத்துடன் "பொருளாதாரம் படிக்க விரும்புகிறேன்" என்றார்.

"வாழ்க்கை லட்சியம் தான் என்ன?" பேராசிரியரின் அடுத்த கேள்விக்கு, கொஞ்சம் கூடத் தடுமாறாமல், "வழக்கறிஞராக விரும்புகிறேன்'' என்றார் இளைஞர். அப்படியானால் துவக்கத்திலிருந்தே சட்டம் படி; அதுதான் சரியாக வரும்'' என்று சொன்னார் பேராசிரியர்.

மிடில் டெம்பின் கல்லூரியில் சேர்ந்து பார் - அட் - லா படிப்பை முடித்தார் சோம்நாத். இங்கிலாந்தில் சிறிது காலம் வழக்கறிஞர் தொழில் செய்து இந்தியாவுக்கு வந்து அதைத் தொடர்ந்தார். வருடத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வருமானவரி கட்டும் அளவுக்கு வழக்கறிஞர் தொழிலில் சம்பாதித்தார். ஓர் அரசு நிறுவனத்துக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்க வாய்ப்பு வந்த போதுதான் "வழக்கறிஞர் தொழிலையும் சேர்த்துப் பார்ப்பது தர்மமாக இருக்காது" என்று அதை விட்டு விட்டார். சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி.

75 வயதாகும் சோம்நாத் சாட்டர்ஜியின் மனைவி ரேணு தேவி. ஒரு மகன் இரண்டு மகள்கள். கால்பந்து, இசை இரண்டிலும் ஆர்வம்.

மேற்கு வங்கத்தில் உள்ள பர்த்வான் தொகுதியில் 1971ம் வருடம் முதன் முதலாக தேர்தலில் நின்று வெற்றி பெற்றார் சாட்டர்ஜி. இதுவரை பத்து முறை பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மூத்த உறுப்பினர். இடையில் 1984ல் ஒருமுறை மம்தா பானர்ஜியிடம் தோற்றுப் போனார். அடுத்த வருடமே போல்பூர் தொகுதியில் நின்று காங்கிரஸ் ஜாம்பவான் சித்தார்த்த சங்கர் ரேயைத் தோற்கடித்து பாராளுமன்றத்துக்குள் நுழைந்து விட்டார். அதன் பிறகு இடைவெளியில்லாமல் தொடர்கிறார்.

மார்க்ஸிஸ்ட் பொலிட் பீரோ சாட்டர்ஜியை சபாநாயகராக அனுப்புவதென முடிவு செய்த அன்று இரவு, அவரிடம் பிரதமர் மன்மோகன் சிங் பேசினார். "சாட்டர்ஜி, இன்றிரவு நான் நிம்மதியாகத் தூங்குவேன்'' என்றாராம். உடனே சாட்டர்ஜி, "நீங்கள் பிரதமர் நாற்காலியில் இருப்பதால் இன்றிரவு எனக்கும் அமைதியான தூக்கம்தான்'' என்று சிரித்தாராம்.

\- ப்ரியன்

# (வெளிவராத) 'நூல் விமர்சனம்'

## டுபாக்கூ கவிதைகள்

(ஆசிரியர்: தார்ரோடு டுமீலப்பன்
பக்: 111, விலை: ரூ. 3780
கவிக்கிறுக்கன் பதிப்பகம், எதுகைபுரம்,
மோனையூர் - 15)

கவிஞர் - புது வகை கவிதை யொன்றை (2½ வரிகள் - இறுதி வார்த்தை ஆங்கிலம்) அறி முகப்படுத்தி புரட்சி செய்துள் ளார்.

*நீ தான்*
*அவன் இவன்*
*டாஸ்மாக்!*




## எளுத்து பிலையின்றி எளுதுவது எப்டி?

(ஆசிரியர்: சொல்வேந்தன்
பக்: 90 விலை : அட்சர லச்சம்
தமிளலகு பதிப்பகம், இலக்கிய வீதி
மதுரை - 5)

எழுத்துப் பிழைகளை எப்படி நீக்கலாம் என்பது பற்றி வார்த்தைக்கு வார்த்தை அச்சுப்பிழைகளுடன் வெளி வந்துள்ள புத்தகம்.

(பிழையின்றி இருப்பது ஒரே ஒரு வெற்றுப்பக்கம்)

## வாஸ்து - நம் தோஸ்து

(ஆசிரியர்: வாஸ்து நிபுணர் திசைச்சாமி,
பக்: வாஸ்துப்படி 88.
விலை: ரூ.100
பொய் சொல்லான் பதிப்பகம், 13 பக்கவாத ரோடு, கோவை)

நீள் செவ்வக வடிவ செங்கல்களை, கிழக்கு மேற்கு உட்பட 8 திசைகளில் வைத்துக் கட்டுதல் வீட்டுக்கு ஆகாது - போன்ற பல விஷயங்கள் உள்ளன!

## மீட்சிகளின் புதைவிடுக்கில்?

(ஆசிரியர்: பிரபஞ்சப்பித்தன், பக்: 432
விலை: ரூ. 432,






கருப்புமை பதிப்பகம்,
7, நிழலில்லா சாலை, சென்னை)

அட்டை டு அட்டை யாருமே புரிந்து கொள்ள இயலாத தமிழில் - நாவலுமில்லாத புதினமுமில்லாத ஏதோ ஒன்று.

### தயிர்சாதம் செய்வதெப்படி?

(ஆசிரியர்: பசி பட்டாபிராமன்,
பக்: எண்ண முடியவில்லை.
விலை: 500 காசுகள். பருக்கை பதிப்பகம், 80, நீர்மோர்தெரு, காசுப்பட்டி)

'உறை ஊற்றுவது எப்படி?' என்பது முதல் எல்லாம் செய்முறை விளக்கப் படங்களுடன்!

### கோடாங்கிப்பட்டி - 2020

(ஆசிரியர்: கோடாங்கிப்பட்டி கோணவாயன்,
பக்: 176,
விலை: போடவில்லை,
பட்டிக்காட்டு பதிப்பகம்,
ஒத்தயடிப்பாதை,
ஒட்டன்சத்திரம்)

2020ல் கோடாங்கிப்பட்டி எப்படி இருக்குமென்று, அந்த ஊரின் ஒரே படித்த இளைஞர் (3ம் வகுப்பு) கனவு கண்டுள்ளார். 2020க்குள் தன் ஊருக்கு 'கரண்ட்' வந்துவிடும் என நம்புகிறார்.

### கொசுக்களிடமிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?

(ஆசிரியர்: பல்விராஜன்,
பக்: போடவில்லை.
விலை: ஒரு கொசு வர்த்திச் சுருளின் விலை.
வெட்டி புத்தகாலயம்,
சென்னை - 21)

'கையை, காலை அசைக்காம உட்கார்ந்து கொசு அடிக்கணும், மாட்டுனா ரத்தம்... இல்லாட்டி வெறும் சத்தம்..!' போன்ற பல அரிய யோசனைகள்.

### வாடா மச்சி... வயசுக்கு வந்துட்ட!

(ஆசிரியர்: டாக்டர் மன்மதபூதம்,
பக்: 100, விலை: 50$,
புள்ளிராஜா பதிப்பகம்; மும்பை)

ஆசிரியர் தாமே கேள்வியும் கேட்டு, பதிலும் அளித்துள்ள பாலியல் விழிப்புணர்ச்சி நூல்.

- முகில்



# நீங்கள் கேட்டவை -தராசு

● கார்த்திக் அமர்த்யா,
மயிலாடுதுறை

? 'விவசாயிகளுக்கு இலவச மின் சாரம்' என்பதை, கொள்கை ரீதியாக ஏற்க மாட்டோம் என்று மன்மோகன் சிங் வெளிப்படையாகச் சொல்லியிருப்பதைப் பாராட்டலாம் அல்லவா...?

! தியரி அடிப்படையில் இது சரியான அணுகுமுறை; ஆனால் நடைமுறையில் இயலாத காரியம். வழங்கப்பட்ட சலுகைகளை வாபஸ் பெறுவது ரொம்ப கஷ்டம். (ஜெயலலிதாவின் தோல்வியைப் பாருங்கள்) எனவே, சலுகைகளை வழங்கும் முன்னரே பலமுறை யோசிக்க வேண்டும். எதிர்காலத்தையும் சிந்திக்க வேண்டும்; வாக்குசீட்டுகளை மட்டும் அல்ல!

● ப. ராமகிருஷ்ணன்,
ஆவணத்தங்கோட்டை

? இன்றைய இளம் நடிகர்களுள் யாருக்கு அதிகம் மார்க் போடலாம்?

! சூர்யாஜி! ஒவ்வொரு படத்திலும் வளர்ச்சி தெரிகிறதே.

● எஸ். இராமலிங்கம், ஆத்தூர்

? தமிழ் செம்மொழி ஆவது தேனினும் இனிய செய்தி தானே...?

! செம்மொழி என்பதால் அதன் வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருக்குமா..? செம்மொழி என்று அறிவிக்கப்பட்ட பிறகாவது அதை நன்றாகப் பயின்று, சரியாக உச்சரிப்பார்களா...? கொச்சையாகப் பேசுவதும் மிகையாக ஆங்கிலம் கலந்து பேசுவதும் எழுதுவதும் குறையுமா...? பெருமூச்சுதான்!

● உமரி பொ. கணேசன்,
மும்பை - 37

? கிராமப்புற சுய உதவி குழுக்களை, ஆளுங்கட்சி தனது தேவைக்குப் பயன்படுத்தி வருகிறதே...?

! தேர்தல் சமயம் இந்தக் குற்றச்சாட்டு மிக அதிகமாக எழுந்தது. ஆனால், சுய உதவிக் குழுக்களை மட்டும்தான் ஆளுங்கட்சி பயன்படுத்திக் கொள்ளு என்று கிடையாது... அர யந்திரம் முழுமையையுமே பயன்படுத்திக் கொள்ள இயலும். மக்களிடம் விழிப்புணர்வு தேர்தல் கமி ஷனின் கண்டிப்பு, ஆளுங்கட்சியில் சுயக்கட்டுப்பாடு ஆகியவைதான் இந்த வியாதிக்கு மருந்து.



● வளர்ச்சி ப்ளஸ் வளர்ச்சி...!



● பி. ஜெயப்பிரகாஷ்,
சர்க்கார்பதி

? 'கோரம்' இல்லாமலே சென்னை மாநகராட்சி நாற்பத்திரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது என்று படித்தேன்... கோரம் என்றால் என்ன சார்...?

! கோரம் என்றால் கூட்டத்தை நடத்துவதற்கு அவ

சியமான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை. இந்த எண்ணிக்கை அவைக் கூட்டத்தில் இல்லை... ஆனால், கார்பரேஷன் தலைமைக் கட்டட வெராண்டாவில் உறுப்பினர்கள் அரட்டையடித்தபடியிருந்தனர் என்ற செய்தி இரட்டிப்பு வேதனை தந்தது.

● உமா சுப்பிரமணியன், சென்னை - 101



? நூலகங்களில், கட

# முதல்வரின் பின்வாங்கல் எதைக் காட்டுகிறது?

வுன் எதிர்ப்பு, பிராமண எதிர்ப்பு பத்திரிகைகளைப் போடலாமா...?

! தவிர்க்கலாம். ஆனால், தடுக்க முடியாது, ஒதுக்கலாம்!

● எல்லார், புதூர்

? ஐந்தாயிரம், ஐம்பதாயிரம் என டொனேஷன் கொடுத்துப் படிக்கும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் தேவைதானா...?

! டொனேஷன் கொடுத்தவர்கள் கடன் வாங்கியும் கொடுத்திருக்கலாமே..! நிஜமான பணக்கார வீட்டுப் பிள்ளைகள் பஸ் ஏறுவார்களா சந்தேகம். டூ வீலர் அல்லது கார் இருக்கலாம். ஒரு சில பணக்கார மாணவர்கள் பயனடைந்தாலும் பாதகமில்லை; ஏழைகளுக்கு இந்த பஸ் கட்டணம் கட்டி வராததால் அவர்களுடைய கல்வி பாதிப்படையக் கூடாது.

● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30



? அ.தி.மு.கவுடனான கூட்டு, லோக் சபா தேர்தலுடன் 'குளோஸ்' என்கிறாரே வெங்கையா நாயுடு...?

! கூடு கட்டத்தான் கஷ்டப் படணும். கட்டியதைக் கலைப்பது சில கண நேர வேலைதான். கலைத்த வேகத்தில் ரிப்பேர் செய்வதென்பது ரிஸ்க்.

● டி.எஸ். சேகர், தென்கடப்பந்தாங்கல்

? பெண்கள் சம்பாதித்து தங்கள் காலில் நிற்காதவரை ஆணாதிக்கம் ஒழியாது என்று கூறுவது சரிதானா...?

! ஆதிக்கம் என்பது உணர்வு ரீதியானது. பெண்களின் சுயச்சார்பு, பல சமயங்களில் ஆண்களை அச்சுறுத்தி தாழ்வு மனப்பான்மையையும் வளர்க்கிறது. மனம் விசாலப்பட்டால்தான் உணர்வுகள் சமன்படும்; பரஸ்பர புரிதல், மதிப்பு விளையும். எனவே, பண வளத்தைக் காட்டிலும் மனவளம் முக்கியம்.


● க. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்



* பா.ஜ.க மைனஸ் அ.தி.மு.க

? 'இந்தியா ஒளிர்கிறது' பிரசாரம் மக்களிடையே எடுபடவில்லை என்று அத்வானியே ஒப்புக் கொண்டிருக்கிறாரே...?

! அதுதான் தெரிந்த விஷயமாயிற்றே! அதை அரசு



• நிர்பந்தப் பிரகடனம்

செலவில் செய்தது தவறு என்பதையும் ஒப்புக் கொண்டிருந்தால் பாராட்டலாம்.

• மதுரை முருகேசன்,
திருச்சி -18

? பா.ஜ.க தனித்துப் போட்டியிட வேண்டும் என்று திருநாவுக்கரசரால் எப்படிப் பேச முடிகிறது...?

! தி.மு.க அணியில் சேர இனி வாய்ப்பில்லை. அ.தி.மு.க அணியில் சேர்ந்தால் தோல்வி நிச்சயம். தனித்துப் போட்டியிட்டால் நாலைந்து சட்டமன்ற சீட்டாவது கிடைக்கலாம் என்ற காலம் கடந்த ஞானோதயம்தான்.

• சியாமளா ஈஸ்வரன்,
தேவூர் மேட்டுக்கடை

? நமது முதல்வரின் சமீபத்திய பின்வாங்கல் எதைக் காட்டுகிறது...?

! முதல் மூன்றாண்டுகளின் தவறுகளை அடுத்த இரு ஆண்டுகளில் சரி செய்து விடலாம் என்று அவர் எண்ணுவதைக் காட்டுகிறது; தேர்தலுக்குத் தயார்ப்படுத்திக் கொள்ள விரும்புவதைக் காட்டுகிறது. ஆனால், கொள்கை மாற்றங்களுடன் நிர்வாகத் திறனும் இணைந்தால்தான் இது சாத்தியமாகும். இந்த அரசில் நிர்வாகத் திறனும் மிகக் குறைவு என்பது அடுத்தடுத்து பல சம்பவங்கள் மூலம் நிரூபணமாகி இருக்கிறது. லேட்டஸ்டாக, மீண்டும் ரேஷன் அட்டை வழங்குவதில் குளறுபடிகள்.



• கொள்கை Vs நடைமுறை!

• ஸ்ரீ வித்யா காளிதாஸ்,
சிதம்பரம் - 2

? குஜராத் முதல்வர் மோடியை மாற்றும் திட்டமில்லை என்கிறாரே வெங்கையா நாயுடு?

! பா.ஜ.க தோல்விக்கு மோடியைக் காரணம் காட்டி, அவரை பலிகடா ஆக்க அக்கட்சிக்குள் எதிர்க் கோஷ்டியினர் முயன்று வருகின்றனர். அவர் கழற்றி விடப்பட வேண்டியவர்தான்; சந்தேகமில்லை. ஆனால் ஏற்கெனவே மோடியின் கரத்தைப் பலப்படுத்தி உயர்த்திப் பிடித்த பா.ஜ.க தலைமை தன் தவறை ஒப்புக் கொள்ளத் தயங்கித் தடுமாறுகிறது.

• அ. ராஜா ரஹ்மான், கம்பம்

? அன்புமணி எம்.பியாக இல்லாத போதும்கூட அமைச்சராக்கப்பட்டுள்ளாரே...?

! ராஜ்ய சபா உறுப்பினர் பதவி வாங்கி விடலாம் என்ற நம்பிக்கை. ஆனாலும் இந்த முறையில் நாடாளுமன்றம் சென்று அமைச்சராவோர், பெரும் அனுபவஸ்தர்களாக இருப்பது மரபு... நல்ல மரபுகளைத்தான் பறக்க விட்டாயிற்றே!

• என். சுகுமாறன், காரைக்கால்

? 'இந்தியா ஒவ்வொரு இந்தியருக்காகவும் ஒளிரும்' என்று ப. சிதம்பரம் கூறியுள்ளாரே...?

! விவசாய கமிஷன் தலைவராக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அமர்த்தப்பட்டிருப்பதைப் பார்க்க, இது குறித்து நம்பிக்கை ஒளிர்கிறது.

❐ ரூ. 100 பரிசு பெறுபவர்:
எல்லார்,
தெற்குத் தெரு, புதூர் (அஞ்சல்)
612 205 தஞ்சை மா.வ

• ரூ. 50 பரிசு
பெறுபவர்:
உமா சுப்பிரமணியன்,
59, அண்ணா நகர்
மேற்கு விரிவு,
சென்னை 600 101

# கவர்னர் ஆகிறார் அன்பழகன்?

காங்கிரஸ் கூட்டணி மத்தியில் செட்டில் ஆனவுடன் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் விஷயம், மாநில ஆளுநர்களின் டிரான்ஸ்ஃபர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பா.ஜ.க கூட்டணி ஆட்சியில் இருந்தபோது, பழைய ஆர்.எஸ்.எஸ் பிரமுகர்களையெல்லாம் பல்வேறு மாநிலங்களுக்கும் கவர்னர்களாக அனுப்பி வைத்தது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதிலும், கவர்னர்களை, தாமாக ராஜினாமா செய்ய வேண்டாம் என்று பா.ஜ.க மேலிடம் சொல்லிவிட, காவிப் படை கவர்னர்கள் யாரும் ராஜினாமா செய்யப் போவது இல்லை என்று ஆகிவிட்டது.

ஜம்மு காஷ்மீர் கவர்னராக இருக்கும் ஜெனரல் எஸ்.கே. சின்ஹா, ஹரியானா கவர்னர் பாபு பரமானந்த், கோவா கவர்னர் கேதார்நாத் ஸஹானி, குஜராத் கவர்னர் கைலாசபதி மிஸ்ரா, எல்லோருமே தீவிர ஆர்.எஸ்.எஸ்காரர்கள். இவர்களில் சிலர் தேர்தல் நேரத்தில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகக் குற்றச்சாட்டும் உண்டு.

ஆந்திராவைச் சேர்ந்தவரான ராம் மோகன்ராவ், இரண்டு நாயுடுகளின் (சந்திரபாபு நாயுடு, வெங்கையா நாயுடு) சிபாரிசின் பேரில் தமிழக கவர்னராக நியமிக்கப்பட்டவர். தமிழகத்தில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க, கூட்டணிக் கட்சியான தி.மு.க என இரு தரப்பிலிருந்தும் ஒப்புதல் பெற்ற பிறகே, ராம் மோகன் ராவ் கவர்னராக நியமிக்கப் பட்டார். ஆனாலும், டிரான்ஸ்ஃபர் லிஸ்டில் இவர் பெயரும் உண்டு.

கர்நாடக மாநில கவர்னராக இருப்பவர் டி.என். சதுர்வேதி. இவர் முன்னாள் தேர்தல் கமிஷனர். ரிடையர் ஆனபின், பா.ஜ.க.வில் சேர்ந்து, ஆக்டிவ்வாக இருந்தவர். அதற்குப் பரிசு தான் கர்நாடக கவர்னர் பதவி. விரைவில் இவரும் மாற்றப்பட்டு விடுவது உறுதி.

இதையெல்லாம்விட சூப்பர் நியூஸ் உண்டு. மாநில கவர்னர்கள் நியமனத்தில் தி.மு.க.வுக்கும் வாய்ப்பளிக்க நினைக்கிறது காங்கிரஸ். தி.மு.க.வின் பொதுச் செயலாளரான அன்பழகனை, கர்நாடக கவர்னர் ஆக்க வேண்டும் என்று தி.மு.க முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் வலம் வருகின்றன.

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்று கமெண்ட் அடிக்கின்றனர் தொண்டர்கள். பொதுச்செயலாளர் பதவி காலியானதும், அதில் இளவல் அமர்த்தப்படுவார் என்கின்றனர்!

\- நிருபர்





காட்டினா நிலைமை மாறிடும்."

"ஏதாவது நடக்கிற காரியமா பேசு இல்லாட்டி போட்டுக் கொடுக்கிறேன், வா இக்கோ!" என்று கையை உயர்த்தினார் த கம்.

முதுகு பழுக்குமுன் வெய்ட்டிங்கில் இருந்த ஆட்டோவில் ஏறி, டபுள் சார் தந்து, மீனம்பாக்கம் போய், டில்லிக்குப் பற தேன்.

# செய்திகள், திரிப்ப

"டிங், டாங்!" - வீட்டினுள்ளே காலிங் பெல் ஒலிப்பது வெளியே தெளிவாகக் கேட்டது.

"யாரது?" என்று சொல்லியபடியே கதவைத் திறந்தார் தங்கம் - ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர்.

"நான்தான் செம்பியன்; உங்க அபார யோசனையைப் பாராட்ட வந்திருக்கேன்..."

தங்கத்தின் முகம் சொர்ணமாக ஒளிர்ந்தது. "ஆட்டோக்களுக்கான கட்டணத்தை உயர்த்தணும்னு தமிழக அரசுக்கு நான் கொடுத்த யோசனையைத்தானே சொல்றே...!"

"ஆமா ஸார்! ரொம்பத் தமாஷா இருந்துச்சு; சிரிச்சு மாளல..."

"என்னப்பா கிண்டலா?"

"இல்லே ஸார், நிஜமாவே சூப்பர் ஜோக் அது! எந்த ஒரு ஆட்டோ ஓட்டியாவது மீட்டர் போடறது கிடையாது. சகட்டு மேனிக்கு ரேட் பேசறானுங்க... இந்த லட்சணத்துல ஆட்டோ கட்டணம் என்னவா நிர்ணயிச்சா யாருக்கு என்ன...?"

"அதாம்பா, விஷயமே! ஆட்டோ கட்டணத்தை கட்டுப்படியாகிற மாதிரி நிர்ணயிச்சா, எல்லாரும் மீட்டர் போடுவானுங்க. 'சூடு' போடவும் மாட்டானுங்க."

"அப்படின்னா, இதைவிடக் குறைவா ஆட்டோ கட்டணம் உள்ள மாநிலங்கள்ல ஆட்டோமீட்டரை ஒழுங்கா வைச்சு, போடவும் செய்யறாங்களே, அது ஏன்?"

"என்ன காரணம்னு நீ நினைக்கிறே?"

"போலீஸ் அதிகாரிகள் பினாமி பேர்ல கூட ஆட்டோ வாங்கி ஓடவிட்டு, ஸைட் பிஸினஸ் பண்ணக் கூடாதுன்னு கண்டிப்பு

அத்வானி ஜி "உஷ்! அப்பா! என்ன வெயில்!" என்று வழுக்கையைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டிருந்தார்.

"வெயிலைப் பொருட்படுத்தாம நடந்து போய் குடியரசுத் தலைவரிடம் 'மெமோ' கொடுத்துட்டு வந்துட்டீங்க..."

"ஆமாமாம்! லாலு தொடங்கி, மத்திய அமைச்சரவையில் எத்தனை பேர் மீது கிரிமினல் வழக்கு இருக்கு, பார்த்தியா?"

"உங்க ஆட்சியிலும் அப்படித்தானே இருந்துச்சு... உங்க பேரிலே, ஃபெர்னாண்டஸ் பேரிலேயெல்லாம் வழக்குகள் இருக்கத்தானே செய்தது...? சமீப நாடாளுமன்றத் தேர்தல்லகூட தேஜகூல 78 பேர் - வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளவங்க வேட்பாளர்களா தேர்ந்தெடுக்கப்பட்டாங்க அவங்கள்ல ரொம்பப் பேர் ஜெயிச்சும் வ திருக்காங்க. கர்நாடக மாநிலத்தை எடுத்துக்குங்க... சட்டசபையில் மொத்தம் 21 பேர்ல, கால்பங்குக்கு மேல் - 54 பேர் - கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவங்க. அந்த 54ல் 24 பேர் பி.ஜே.பி கட்சியைச் சேர்ந்தவங்க..."

"நிறுத்து- நிறுத்து- புள்ளிவிவரமெல்லாம் கிடக்கட்டும்... அரசியலைத் தூய்மைப்படுத்தணுமா வேண்டாமா?"

"ஏங்க, துடைப்பைக் கட்டையை எடுத்து நம்ம வீட்டைக் கூட்டாம, பக்கத்து வீட்டுல போயா பெருக்குவோம்?"

"கொஞ்சம் இங்கயே இரு; உன் கட்டுக்குப் போய் கொண்டு வரேன்" என்று அத்வானி திரும்பினாரோ இல்லையோ எடுத்தேன், ஓட்டம்.

**சி**தம்பரம் வீட்டுக்கு வந்துதான் நின் றான். "பட்ஜெட் விஷயமா ரொம்ப பிஸியா இருப்பீங்க..."

"சரி சரி, வந்த விஷயத்தைச் சொல்லு..."

"ஹி...ஹி... எனக்கு பொருளாதார ரீதில பசத் தெரியாது... ஆனா ஒண்ணு.... இது வரை எல்லா நிதி அமைச்சர்களும் செல வுக்கு ஏற்ப வரவை சரிக்கட்டப் பார்த் தாங்க... பற்றாக்குறைக்கு நோட்டு அச்சடிச்

# சம்பியன்!



தாங்க... நீங்களாவது வரவுக்கு ஏற்ற செல வுன்னு முயற்சி எடுத்தா... அதுக்கு ஒரு பிள்ளையார் சுழியாவது போட்டா..."

"அது எனக்குத் தெரியாதா என்ன? ஆனா அது அவ்வளவு சுலப சாத்திய மில்லை. உதாரணமா ராணுவச் செலவைக் குறைக்கலாம். ஆனா நட்வர்சிங் நல்ல எண் ணத்தோடு சீனா, பாக்குடன் பேச்சு வார்த்தை; அதுக்கு புதிய திட்டம்னு ஆரம் பிச்ச உடனேயே ஜஸ்வந்த்சிங் குதியோ குதின்னு குதிக்கிறாரு..."

"அப்புறம் பங்கு மார்க்கெட் பலப்படும்; சமிப்புக்கு ஊக்கம்னு பேசியிருக்கீங்க... மீப காலமா வட்டி விகிதம் குறைஞ்சு போனதுல, ரொம்ப கஷ்டப்படறவங்க ஓய்வு பெற்ற முதியவர்கள்தான். சம்பளமும் கிடை யாது; அவங்களோட சேமிப்புக்குக் கிடைக் கும் வருவாயும் குறைஞ்சு போச்சு; தவிக் கிறாங்க. அவர்களுக்கும், தர்மஸ்தாபனங் களாக இயங்கும் அறக்கட்டளைகளுக்கும், ஒரு பத்து பர்ஸெண்ட்டாவது வட்டி கிடைக்கிற மாதிரி ஒரு புதிய அரசுப் பத்திரம் வழங்கினா..."

"ஆகட்டும், பார்ப்போம்... 'அது சரி, உனக்கு என்ன வயசு...?"

"அப்படி ஒண்ணும் அதிகமில்லை; உங்க மந்திரிசபையிலேயே என்னைவிட வயசானவங்க 27 பேர் இருக்காங்க" என்று கூறிவிட்டு, மிடுக்காக நடந்து வெளியேறி னேன்.

**கோ**பாலபுரத்தில், பிறந்த நாள் கொண்டாடி முடித்து, ரொம்பக் களைப் பாக இருந்தார் கருணாநிதி.

"ஒரு சந்தேகம்... ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையைத் திறப்பதா வேண் டாமான்னு அதிகாரிகள் அம்மாவைக் கேட்கணுமா, உங்களைக் கலந்தாலோசிக் கணுமா?"

"யாரையும் கேட்க அவசியமின்றி, அதிகாரிகள் தாங்களே செயல்படுமளவில் மேட்டூரில் நீர்மட்டம் உயரணும்; அதுக்கு பிரதமரும் சோனியாவும் உதவணும். இதைத்தானே சொல்லியிருக்கேன்..."

"அவங்க உதவத் தயாராயிருந்தாலும் கர்நாடக அரசு உதவணுமே... இப்ப, முன் னைவிடவும் சிக்கலாயிடுச்சே! மந்திரி சபையே அங்கே இழுபறியில் இருக்கே!"

"இழுபறி கூடாதுன்னுதான் எழுதி வாங்கிக்கிறது... கல்கிகூட என்னைக் குறை சொல்லிச்சு... இப்ப தேவேகௌடா விஷ யம் பாரு... எழுதி வாங்கியிருந்தா இந்த இழுபறி நீடிக்குமா...?"

"இழுபறி இல்லாமல் போகலாம்; ஆனா இதயத்துல ஓர் இறுக்கம் விழாமப் போகுமா...? உருவகமா ஒரு விஷயம் பாருங்க... உங்க பிறந்தநாளுக்கு நாடாளு மன்ற வடிவத்தில் கேக் செய்தாங்க..."

"ஆமா, நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை அப்படிக் கொண்டாடினாங்க. அதுல என்ன தப்பு? 'கேக் வாக்'தானே!"

"தப்பு ஒண்ணுமில்லீங்க; அந்த நாடாளுமன்ற வடிவ கேக்கை, கத்திஎடுத்து வெட்டி துண்டம் போட்டீங்க பாருங்க... அப்படி ஏதும் நிஜத்தில் நடக்காம, ஐந்து வருஷம் ஆண்டவன்தான் காப்பாத் தணும்!"

"ஆண்டவனுக்கு அப்படியெல்லாம் வேலை வைக்க மாட்டோம்... இந்தா..."

பாக்கி இருந்த கடைசித் துண்டு கேக்கை கலைஞர் எனக்குத் தர, வாயில் போட்டு ருசித்தபடியே வெளியேறினேன். ●

# நடக்குமென்பார்; நடக்கும்

## மேஷம்

சின்ன பிரேக் அடிச்சு, நினைச்ச பதவிகளையே தி.மு.க. அள்ளிய மாதிரி, சின்ன சின்னப் பிரச்னைகள் உங்களை டென்ஷன் பண்ணினாலும், இறுதியில் வெற்றி பெறுவீங்க. எதிர்பார்த்திட்டிருந்த நல்ல செய்தி ஓடி வரும். புதிய வேலை முயற்சிகளுக்குப் பலன் இருக்கு. குருபலம் நிறைந்து இருக்கறதால மங்களகரமான காரியங்கள் நிறைவேறும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருக்கு.

## ரிஷபம்

ராஜ்யசபா உறுப்பினராகவும் இல்லாம, மக்களவை உறுப்பினராகவும் இல்லாம நேரா மந்திரி பதவிக்கு வந்த அன்புமணி மாதிரி, தடைகள், குறுக்கீடுகள் பிரச்னைகள் எல்லாத்தையும் தாண்டி முன்னேறுவீங்க. பொருளாதார நெருக்கடி மாயமாகும். எதிர்பார்த்த உதவி ஓடி வந்து கை குலுக்கும். வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான திருப்பம் வரும். அரசியல்வாதிகள் அவசரப்பட வேண்டாம்.

## மிதுனம்

நீங்க கேட்டது கிடைக்கிற நேரம் இது. எக்ஸ்ட்ரா தகவல் : இது உங்களுக்கு அதிர்ஷ்ட வாரம்! குடும்பத்துல சின்னச் சின்ன வாய்ச்சண்டைகள் வரும். பொறுத்தார் பூமியாள்வார்ங்கற மாதிரி மௌனம் காப்பது நல்லது. சினிமா, ஓவியம், சிற்பம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்க செல்வாக்கு ஓஹோன்னு உயரப் போகுது. பணம் தாராளமா கிடைக்கும். சுய தொழில் பண்றவங்க முன்னேற்றம் அடைவாங்க. கடன் தொல்லைகள் படிப்படியா குறையும்.

## கடகம்

'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்'னு நீங்க தாராளமா பாடலாம். பின்னே தொட்டதெல்லாம் துலங்கப் போகுதே! புதியவங்க சந்திப்பு, அனுகூல பயணம், பெரியவங்க ஆதரவு எல்லாம் உண்டு. கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். அலுவலகத்தில் இதுவரை இருந்த பிக்கல் புடுங்கல் இப்போ மறையும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடாதீங்க. இது நல்ல நேரம்.

## சிம்மம்

இது உங்களுக்குச் சாதகமான வாரம். புதுப் பொறுப்பு, பதவி உயர்வு தேடி வரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. குடும்பத்துல ஒற்றுமை நிலவும். பெண்கள் தாங்கள் நினைத்ததைச் சாதிப்பாங்க. உறவினர்கள் வருகை, உல்லாசம், உபசாரம், விருந்துன்னு வீடு கலகலன்னு இருக்கப் போகுது. உத்தியோகத்தில் எல்லா வகையிலும் அதிர்ஷ்டமான திருப்பம் உண்டு. கடன் தொல்லை காணாமல் போகும்.

## கன்னி

எந்தப் பிரச்னையானாலும் தலைகீழா நின்னாவது முடிச்சுடுவீங்க. இரண்டில் கேதுவும், எட்டில் ராகுவும் இருக்கறதால பேச்சில் கடுமை வேண்டாம். நிதானம் ரொம்ப ரொம்ப அவசியம். வெளிநாட்டிலிருந்து மகன், மகள், சொந்தங்கள் வர வாய்ப்பிருக்கு. இதனால் குடும்பத்தில் சந்தோஷம் உருண்டோடும். உணவு பொருள், ஹோட்டல், டிராவல்ஸ் துறைகாரங்களுக்கு முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லை குறையும். வேலை விஷயமாக வெளியூர் செல்லும் வாய்ப்பிருக்கு.

**அக்னிசர்மா பக்கம்**

**ஜூன் 9 முதல் 15 வரை**

## துலாம்

போட்ட சட்டத்தையெல்லாம் அம்மா திடீர் திடீர்னு ரத்து பண்ற மாதிரி, உங்களுக்கு வந்த பிரச்னை, தடைகள் எல்லாம் பாதியிலேயே மாயமாகிடும். வர வேண்டிய பணம் வசூலாகும். எடுத்த காரியங்களில் வெற்றி உண்டு. முக்கியமானவங்க சந்திப்பு நிகழும். இதனால பயன் உண்டு. எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் விலகி ஓடுவாங்க. சிலர் புது வீடு, மனை வாங்கலாம். வழக்கு விவகாரங்கள்ல நன்மை உண்டு.

## விருச்சிகம்

குடும்பஸ்தானத்தை குரு ஸ்ட்ராங்கா பார்க்கறதால நல்ல காரியங்கள் நடக்கலாம். இதுவரை இருந்து வந்த பண நெருக்கடி மறைந்து சுமுகமானச் சூழ்நிலை ஏற்படும். புத்தகம், பத்திரிகை, படிப்பு, கல்வி சம்பந்தமான துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயர்வாங்க. அரசியல்வாதிகள் அவசரப்பட்டு அறிக்கை வெளியிட வேண்டாம். நிதானம் அவசியம். வார முன் பகுதியில் குழப்பமான மனநிலை இருந்தாலும் பின் பகுதியில எல்லாம் நன்மையாகும். சிலருக்குப் புதிய பொறுப்புகள் தேடி வரலாம். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடறது நல்லது.

## தனுசு

பல வழிகள்ல இருந்து பணம் வரப் போகுது. இதனால பாக்கெட்டும், மனசும் நிறையும். இருந்து வந்த சிக்கல்கள் மறையும். எடுத்த காரியங்களில் வெற்றி உண்டு. புதிய முயற்சிகள்ல நன்மை விளையும். கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். எதிர்பார்க்கிற உதவி தேடி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலர் புது வீடு, மனை, வாகனம் வாங்க யோகமிருக்கு. மாணவர்கள் மேல்படிப்புக்கு வெளிநாடு செல்ல வாய்ப்பிருக்கு.

## மகரம்

துணிவு, தன்னம்பிக்கை, தெய்வீக ஈடுபாடு, தெய்வபலம் அதிகரிக்கும். முக்கியமானவங்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். இந்தச் சந்திப்பினால் பலன் உண்டு. பிரச்னைகள், குழப்பங்கள் எல்லாம் மாயமாகும். இதனால மனசுல சந்தோஷம் நிலைக்கும். சுயதொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. கொடுக்கல் வாங்கல் உதவும். புதிய தொழில் முயற்சிகள்ல வெற்றி உண்டு. குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடு, விரோத மனப்பான்மை மறையும். பெண்களுக்கு எதிர்ப்புகள் விலகும்.

ஈஷா தியோலுக்கு (தனுசு) எதிர்பாராத பண வரவு உண்டாமே!



## கும்பம் :

குருபலம் பூர்ணமாக இருப்பதால சுப காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். வழக்கு விவகாரங்கள்ல அனுகூலம் உண்டு. எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். அலுவலகத்தில் மேலதிகாரிங்க ஆதரவு, பாராட்டு கிடைக்கும். சிலருக்கு ஊதிய உயர்வு, இடமாற்றம் கிடைக்க வாய்ப்பிருக்கு. புதிய முயற்சிகள் இப்ப சாதகமாகும். நாடகம், சினிமா, போன்ற கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு பெயர், புகழ் கூடும்.

## மீனம் :

இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன், பொருளாதார நெருக்கடி, எதிர்ப்புகள், தடைகள், குறுக்கீடுகள்.... யப்பா எல்லாம் போச்! நிம்மதி தேடி வரும். பேச்சில் கடுமை வேண்டாம். நிதானம் அவசியம். எதையும் சிந்திச்சுச் செயல்பட்டா நன்மையே நடக்கும். கொடுக்கல் வாங்கல்ல நன்மை உண்டு; ஆனால் எச்சரிக்கை அவசியம். புதிய முயற்சிகள்ல யோசித்து காலை விடுவது நன்மை தரும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் காத்திருக்கு. உஷார்!

முதற்பார்வையிலேயே ஸ்ரீஅரவிந்தர் ஆத்மாவைத் தேடிக் கொண்டிருந்தார் என்பதையும், தமக்குள்ளே தெய்வீக அகத் தூண்டுதலின் மோன சக்தியை அவர் திரட்டியிருந்தார் என்பதையும் நான் உணர முடிந்தது. அவரது முகம் உள்ளொளியுடன் பிரகாசித்தது.. உள்ளச் சமநிலை பற்றிப் பண்டைய ரிஷிகளே ஸ்ரீஅரவிந்தர் மூலம் பேசினரென எண்ணுகிறேன். நான் அவருக்குச் சொன்னேன்: 'ஆண்டவனின் சொல் உங்களிடம் உள்ளது. உங்களிடமிருந்து அதை ஏற்றுக் கொள்ளக் காத்திருக்கிறோம். உங்கள் குரல் மூலம் பாரத நாடு உலகுடன் பேசும்... அரவிந்தா! ரவீந்திரனின் வணக்கத்தை ஏற்றுக் கொள் என்று மோனத்தில் பாட்டிசைத்தேன்!

*- ஸ்ரீ அரவிந்தரைப் பற்றி ரவீந்திர நாத் தாகூர் (மனோஜ் தாஸ் எழுதிய 'ஸ்ரீஅரவிந்தர்' என்ற நூலிலிருந்து.*

நள்ளிரவு - அரண்மனைச் சாளரத்தின் வழியே வெண்ணிலவின் ஒளி. பேரழகி யசோதரையின் முகத்தில் உறக்கத்திலும் புன்முறுவல். அருகே தளிராய்ப் படுத்துத் தூங்கும் குழந்தை ராகுல். பட்டு மெத்தையில் உறங்கும் மனைவியையும், மகனையும் உற்றுப் பார்க்கிறான், அந்த அழகுசொட்டும் ராஜகுமாரன். பலநாள் சிந்தனைகள் அவன் மனத்தில் ஒன்று திரள்கின்றன. இவர்களும் இறப்பார்கள். நானும் இறப்பேன். இந்தப் பிஞ்சுக் குழந்தைக்கும் நோயும் மூப்பும் வரும். அரச பதவியில் லாபமென்ன! முதுமை, நோய், மரணம் இவற்றால் விளையும் துக்கத்தை இது போக்குமா! துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணமென்ன...


# அன்புள்ள மிருணாளினி...

கண்டறிய வேண்டும்... அக்கணமே மனைவியையும், மகனையும், அரச போகத்தையும், திட சித்தத்துடன் ஓர் உதறு உதறுகிறான். நள்ளிரவில் ஞானம் தேடிக் கானகம் செல்கிறான். போதி மரத்தடியில் தவம் செய்து 'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்ற உண்மையைக் கண்டறிகிறான். புத்தராய் மலர்ந்த சித்தார்த்தனின் கதை இதுதானே!

குரு சுதீந்த்ர தீர்த்தர் அழைத்தபோது ஒரு கணத்தில் மனைவி ஸரஸ்வதியையும், மகன் லட்சுமிநாராயணனையும் துறந்து சன்னியாசியான ராகவேந்திரர் சரிதமும் இப்படித்தானே!

மனைவி புஷ்பவதி ஆன சடங்கின் காரணமாக, உணவு கிடைப்பதில் தாமதம் நேர்ந்தது சதாசிவத்திற்கு. இன்றே இப்படியெனில், சம்சார சாகரத்தில் சிக்கினால் என்ன ஆகும் என எண்ணி, வீட்டைத் துறந்தார் அவர் என்பது தானே, சதாசிவ பிரம்மேந்திரர் வரலாறு!

இவர்கள் தெய்வத்துக்காக மனைவியைத் துறந்தவர்கள். மனைவியையே தெய்வமாக்கி வழிபட்டால், மனைவியைத் துறக்கும் பேச்சுக்கே இடமில்லையே! 1873ம் ஆண்டு மே மாதக் கடைசியில், அமாவாசை நாளன்று, ஷோடசி பூஜை மூலம், மனைவி சாரதையின் மேல் தெய்வ சக்தியை ஆவாஹனம்



• மிருணாளினி

செய்து மனைவியையே வழிபட்ட சரிதம் ரமஹம்சருடையது.

திருமணமாகாமலே துறவு பூண்டவர் ஆதிசங்கரர். திருமணமாகி குழந்தை பெற்று, பின் துறவு பூண்டவர்கள் த்தரும், ராகவேந்திரரும். திருமண ானாலும், இல்லறத்திற்கு ஆட்படா லே துறவியானவர் பிரம்மேந்திரர். ண நாளிலிருந்தே மனைவியையும் துறவு நிலைக்கு ஆட்படுத்தி, தாம் மனைவியை வழிபட்டதோடு, மற்றவர் ளும் தம் மனைவியை ழிபடும் நிலைக்கு யர்த்திய அதிசயிக்கத் தக்க ஆன்மிகப் பெருவாழ்வு பரமஹம்சருடையது. மனைவிக்கும் பக்குவம் ஏற்படுத்தி அவளையும் ஆன்மிக நெறிக்கு இழுக்க முயன்ற வரலாறு ஸ்ரீ அரவிந்தருடையது.

பூபால் சந்திர போஸின் மகள் மிருணாளினி. அழகும் எளிமையும் நிறைந்தவள். வயது பதினொன்கு. அரவிந்தருக்கு வயது இருபத்

■ திருப்பூர் கிருஷ்ணன் ■

தொன்பது. 1901 ஏப்ரல் 30ம் தேதி இவர்களது திருமணம் இந்து முறைப்படி நடந்தது. அரவிந்தர் வெளிநாடு சென்று வந்தவராயிற்றே! பிராயச்சித்தச் சடங்கு செய்ய வேண்டாமா! தந்தையே செய்ய மறுத்த சடங்கை மகன் செய்வாரா! 'தலையை மழித்துக் கொண்டால் போதும், அதுவே பிராயச்சித்தம் தான்' என்ற எளிய வழியையும் அவர் ஏற்க வில்லை. அந்தத் திருமணத்திற்கு ஜகதீஷ் சந்திர போஸ் உள்படப் பலர் வருகை தந்தார்கள்.

பெரும்பாலும் தான் கல்கத்தாவிலும், அரவிந்தர் பரோடாவிலுமாக வாழ்ந்த வாழ்வு மிருணாளினியுடையது. தாயோடும் தந்தையோடும் அதிகம் சேர்ந்து வாழக் கிட்டாத அரவிந்தர், மனைவியோடும் அதிகம் சேர்ந்து வாழ வில்லை. எனினும் ஆழ்மன உணர்வு களையெல்லாம் கொட்டி, மனைவிக்குக் கடிதங்கள் எழுதினார். அத்தகைய இரு கடிதங்களின் சாரம் இதோ:

'அன்பு மிருணாளினி, கணவன் மனைவி பந்தத்தை ஏற்படுத்தி, விதியல்லவா நமக்குள் முடிச்சுப் போட்டி ருக்கிறது! நான் சற்று அசாதாரணமான வன் என்பதைப் புரிந்து கொண்டிருப் பாய். என்னை உலகம் பைத்தியக்காரன் என்று சொல்லக் கூடும். ஒரு பெண்ணுக்கு என் போன்ற பைத்தியக் காரனிடம் மாட்டிக் கொள்வது, எவ் வளவு துரதிருஷ்டம் என்பதை அறி வேன். பெரும்பாலான பெண்கள் உலகியல் சுக துக்கங்களிலேயே கட்டுப் பட்டு விடுகிறார்கள். நீயும் என்னைப் பைத்தியக்காரன் என்று ஒதுக்கிவிடப் போகிறாயா? பைத்தியக்காரன் தன் பைத்தியக்காரப் போக்கில்தான் சென்று கொண்டிருப்பான். யாரும் அவனைத் தடுக்க முடியாது. அவனுக்கு உன்னை விட பலம் அதிகம்.

என்ன செய்யப் போகிறாய்? அழப் போகிறாயா? அல்லது பார்வையற்ற திருதராஷ்டிரனை மணந்து, தானும் கண்ணைக் கட்டிக் கொண்ட காந்தாரி போல நீயும் பைத்தியக்காரியாகி, கணவ னோடு இணைந்து நடக்கப் போகிறாயா?

என்னைப் பிடித்துள்ள பைத்தி யங்கள் மூன்று. முதல் பைத்தியம் - கடவுள் எனக்குத் தந்துள்ள கல்வி,

## அருள்வாக்கு

'நாம்தான் காரியம் பண்ணி ஸாதிக்கிறோம்; அதனால் லோகத்தையே புரட்டி நல்லதாக்கி விடலாம்' என்ற எண்ணம் கார்ய லோகத்தில் ஏற்படத் தானே செய்கிறது? அது ஒரு 'ஈகோ' (அஹங்கார எண்ணம்) தானே? அது முற்றிவிடாமல் ஒரு போடு போடவேண்டு மென்பதற்குத் தான் இந்த லோகத்தை யெல்லாம் பண்ணியிருக்கும் பராசக்தி எந்த நல்லதானாலும் அதிலேயும் கெடு வாக ஏதாவது அம்சம் வந்து சேரும் படியாக வைத்திருக்கிறது போலிருக்கிறது.

செல்வம் எல்லாவற்றையும் கடவுளின் உடைமைகளே என நான் நம்புகிறேன். இன்றியமையாத தேவைக்கானதை மட்டுமே வைத்துக் கொண்டு, மற்ற வற்றைக் கடவுளிடமே கொடுத்துவிட விரும்புகிறேன். கடவுளுக்குக் கொடுத்தல் என்றால் என்ன? நல்ல செயல்களுக்குச் செலவழித்தல். முப்பது கோடி இந்திய மக்களும் என் வீட்டு வாசலில் வந்து நின்று, உதவி வேண்டிக் கதறுவது போல தோன்றுகிறது எனக்கு. சாதாரண மக்கள் வாழும் வாழ்வை நாமும் வாழ்வோம். நம் அன்றாடத் தேவைக்குப் போக மிஞ்சி யதை மற்றவர்களுக்குக் கொடுத்து விடு வோம். உனக்கு இது சம்மதமா?

என் இரண்டாம் பைத்தியம் கடவுளை நேருக்குநேர் காண வேண்டும் என்பது. இந்து மதம் கடவுளைக் காண் பதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளது. ஒரு மாதப் பயிற்சியிலேயே இந்து மதம் கூறுவது பொய்யல்ல என அறிந்தேன். அது கூறும் அடையாளங்களை, என் அனுபவத்தில் என்னிடமே காண்கிறேன். ஒரு நாள் கட்டாயம் இந்த உடலுட னேயே கடவுளைக் காண்பேன்.

என் மூன்றாம் பைத்தியம் - தேசம் பாரத நாட்டுக்காக நான் வாளையோ துப்பாக்கியையோ கொண்டு போரிடப் போவதில்லை. ஆனால் ஞான சக்தியைக் கொண்டு போரிடப் போகிறேன்.

நீ என்ன செய்யப் போகிறாய்? உன் அலட்சியத்தால், உன் கணவன் பலத் தைக் குறைப்பாயா? அல்லது உன் ஊக் கத்தால், அவன் பலத்தைப் பெருக்கு

இப்படி இல்லாவிட்டால், "நாம் எவ்வளவெல்லாம் நல்லதாக சாதித்துவிட்டோம்!" என்ற 'ஈகோ' கர்த்தா என்கிறவனுக்கு ஏற்படத்தான் செய்யும். அந்த ஸந்நிதியில் எத்தனைதான் ஃபிலாஸஃபி சொன்னாலும், நல்லது, நல்லது என்கிற எல்லாமும் 'ரிலேடிவ்'தான். ஏனென்றால் நல்லது கெட்டது என்பவை நடக்கிற த்வைத ப்ரபஞ்சமே 'ரிலேடிவ்'தானே?' என்று எத்தனை ஃபிலாஸஃபி சொல்லி, அது ஸரிதான் என்று மூளைக்குப் பட்டிருந்தாலுங்கூட,



சும்மாயிருக்க முடியாது. வெற்றிகண்ட ஜோர், நாமாக்கும் ஸாதித்தோம் என்ற பெருமை, சும்மா இருக்க விடாது. அதற்காகத்தான் தோல்வியையும் எடுத்துக் காட்டுவது - உபகாரம், உபகாரம் என்று பண்ணுவதிலும் அபகாரம் சேரத்தான் செய்கிறது என்று காட்டுவது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

யாயா? 'இன்பங்களை அனுபவிக்க வேண்டும்' என்ற நிலையில் தான் இருக்கப் போகிறாயா? இல்லை கடவுளின் வேலையைச் செய்ய என்னோடு சேரப் போகிறாயா?

நான் சொல்லியுள்ளவற்றை அமைதியாகச் சிந்தித்துப் பார். இதில் பீதியடைய ஒன்றுமில்லை. நீ அப்பாவி. யார் சொன்னாலும் கேட்கிறாய். என் கருத்தைப் பற்றி வேறு யாரிடமும் கருத்துக் கேட்காமல், பொறுமையாக யோசனை செய்.

நான் உன்னை ஜனவரி எட்டாம் தேதி பார்த்திருக்க வேண்டும். முடியவில்லை. நான் உன்னைப் பார்க்க விரும்பவில்லை என்பதல்ல பொருள். கடவுளின் சித்தம் வேறு மாதிரி. நான் ஒரு பொம்மையைப் போல் ஆகிவிட்டேன். அவன் எதைச் செய்ய வைக்கிறானோ அதைச் செய்கிறேன். கடவுள் எனக்குக் காட்டியதைப் போல, உனக்கும் தன் அருள் ஒளியைக் காட்டுவான் என நம்புகிறேன். ஆனால் அவன் திருவுள்ளம் எப்படியோ! நீயும் ஆன்மிக வாழ்வு வாழ விரும்பினால், உனக்கும் அவனது வழியைக் காட்டும்படி பிரார்த்தனை செய். நான் எழுதியிருப்பது மிக மிக ரகசியமானது. உனக்கு மட்டுமே தெரிய வேண்டியது. வேறு யாரிடமும் இதைப் பற்றி நான் பேசவில்லை. அதற்கு அனுமதி இல்லை.

மிருணாளினி சராசரி இந்தியப் பெண். ஆனால் ஓர் அவதார புருஷருக்கு வாழ்க்கைப் பட்டாள். அவள் தந்தை பார்த்து நல்ல பிள்ளை என்று கண்டுணர்ந்து, செய்து வைத்த திருமணம் தான். கணவரும் நல்லவரே. ஆனால் கணவரின் ஆன்மிக வேட்கை இவ்வளவு தீவிரமாக இருக்கும் என்பது, யாருமே எதிர்பார்க்கக் கூடியதல்லவே! 'கடவுளை நேரில் காண வேண்டும், அது இயலும்' என்று உண்மையாகவே நம்பும் ஒரு மனிதர்! இப்படிப்பட்டவரை எப்படிப் புரிந்து கொள்வது! மிருணாளினி திகைத்தாள். ஏழு ஆண்டுகள் ஓடின. திடீரென ஒரு செய்தி. ஸ்ரீ அரவிந்தர் அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் கைது செய்யப் பட்டாராம்.


'கணவர் குற்றமற்றவர் என்று தீர்ப்பாகி, நல்லபடியாக விடுதலை பெற்று வருவாரா! அவர் என்னைத் தேடி வருவாரா, அல்லது இறைவனைத் தேடி எங்கேனும் சென்று விடுவாரா! ஒன்றும் புரியவில்லையே தெய்வமே! என்ன செய்வேன்! இந்தப் பிரச்னை குறித்து யாரிடம் கருத்துக் கேட்பேன்! என்னைப் போலவே வாழ்க்கை அமைந்தவர்கள் யாரேனும் இருந்தால், அவர்களிடம் கேட்டுப் பார்க்கலாம். அப்படி இந்தப் பரந்த உலகில் யார் உண்டு? ஆகா. ஏன் மறந்து போனோம்! அப்படி ஒரே ஒருவர் உண்டு. அவரிடம் சென்று முறையிடுவோம். ஒரு வழி பிறக்கும்.' தன்னைப் போலவே வாழ்க்கை அமைந்த உலகப் புகழ்பெற்ற அந்த இன்னொரு பெண்மணியைத் தேடிச் சென்றார் மிருணாளினி.

(அமுதம் பெருகும்)

# கல்கி – கல்யாண மாலை

இணைந்து வழங்கும்

## திகட்டாத தேன் நிகழ்ச்சி :



# கல்யாண விருந்து

| | |
|---|---|
| முதல் விருந்து | : தம்பதிகள் பங்கேற்கும் 'சூப்பர் ஜோடி' – அனுபவ பரிமாற்றம் |
| முகூர்த்த நாள் | : ஞாயிறு, ஜூன் 20, 2004 |
| நேரம் | : மாலை 5.30 மணி |
| பந்தல் | : கம்பன் கலையரங்கம், பாண்டிச்சேரி |

**அழைப்பிதழ் : 20.6.2004 தேதியிட்ட கல்கி இதழ்.**
**(ஆளுக்கொரு அழைப்பிதழ் அவசியம், அவசியம்!)**


சுற்றமும் நட்பும் சூழ வந்து சேருங்க
குதூகலக் குடும்ப விருந்து காத்திருக்கு...

ஞாயிறுதோறும் சன் டி.வியில் ஒளிபரப்பாகும்
**கல்யாண மாலை** நிகழ்ச்சியில்
**கல்கி** வாசகரான நீங்களும் தோன்ற வாய்ப்பு.

அழைப்பிதழ், மேலும் விவரங்கள் 20.6.2004 கல்கி இதழில்...

*குடும்பத்தின் குத்து விளக்கு*

கல்யாண மாலை



*குடும்பத்தின் குதூகலம்*

கல்கி

ஜூன், 13-2004

# மினி கல்கி

# காசு கொட்டும் மல்டி மீடியா!

ஓவியர் மருது
டாக்டர் கே.ஸ்ரீதர்
டாக்டர் எஸ்.அசோக்
டாக்டர் எல்.மகாதேவன்
சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி
வழக்கறிஞர் கே.சுமதி
டாக்டர் இரா.அன்புமணி
பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்
டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்







– காம்கேர் கே. புவனேஸ்வரி



•காம்கேர் கே. புவனேஸ்வரி

**தமிழில் கம்ப்யூட்டர் புத்தகங்களை அதிக அளவில் எழுதியவரும், மல்டி மீடியா சி.டி. தயாரிப்பில் முன்னணியில் இருப்பவருமான, காம்கேர் சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் நிறுவன உரிமையாளர் கே. புவனேஸ்வரி மல்டி மீடியா மகத்துவம் பற்றி விளக்குகிறார்.**

*அந்த லேடீஸ் ஹாஸ்டல் முன்பு கன்னா பின்னாவென்று கார்களைத் தள்ளிக் கொண்டு வந்து நிறுத்தி, சூர்யாவும் மாதவனும் 'ஐ லவ் யூ' சொல்லும் உதார் விளம்பரத்தைப் பார்த்திருப்பீங்களே? ப்ரீத்தி ஜிந்தாவின் முகத்தில்தான் எவ்வளவு குஷி? அவரது குதூகலத்தை ரசிக்கவே நமக்கு நேரம் சரியாக இருப்பதால், அந்த பெப்ஸி விளம்பரம், கிராஃபிக்ஸ் கலக்கல்ஸ் என்பதை கவனிக்காமலே ஜஸ்ட் லைக் தட் ரசித்து மகிழ்கிறோம். மல்டி மீடியாவின் மெச்சத் தகுந்த தொழில்நுட்ப சாத்தியத்துக்கு சின்ன உதாரணம் இது!*


மல்டி மீடியா! பெயரிலேயே விளக்கம் இருக்கிறதே! பல்வேறு வடிவத்தில் தகவல்களைப் பரப்புதல் என்று அர்த்தம். மல்டி மீடியா தொழில் நுட்பத்தில் தகவல்கள் அனைத்தும் ஒலி, ஒளி படங்கள், வார்த்தைகள், உரைகள் என பல ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும்.



கையில் ஒரு மவுஸ், எதிரே சர்வ வல்லமை படைத்த கம்ப்யூட்டர். நீங்கள் நினைத்ததை சாதிக்க முடியும். வரையலாம், பேசச் செய்யலாம், பாட வைக்கலாம், குதிக்கச் செய்யலாம், ஆடச் செய்யலாம்– மல்டி மீடியா என்னும் மாபெரும் கடலில், சின்ன பக்கெட் அளவு ஞானம் இருந்தால் கூட.... சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறலாம். பணமும் புகழும் தடதட என்று கொட்டும். முதலில், எந்தெந்த துறையில் மல்டி மீடியா தொழில் நுட்பம், பட்டொளி வீசிப் பறக்கிறது என ரத்தினச் சுருக்கமாகப் பார்ப்போம்.

# திரைப்படத்துறையில்...

" 'பாய்ஸ்' படம் பார்த்தியா? அதுலே 'மாரோ மாரோ' பாட்டு செம சீன்! எப்படிடா ஒரே காஸ்ட்யூமிலே, அத்தனைப் பேரை, துல்லியமா டான்ஸ் பண்ண வைச்சாங்க?"




"ச்சை! அங்க அத்தனை பேரும் ஜூனியர் ஆர்டிஸ்ட் இல்லடா! எல்லாமே கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ்." என்று கொங்கு நத்தம்பட்டி ரசிகர்கள் கூட பேசிக் கொள்ளும் அளவுக்கு மல்டி மீடியா அறிவு வளர்ந்து விட்டது.

கருப்பாயி அப்பத்தாவின் சுருக்குப் பையில், பத்து ரூபாயை லவட்டிக் கொண்டு திருட்டு ரயிலேறி (பாவம்... அது நல்ல ரயில்தான்! என்னவோ.. அப்படி ஒரு பெயர்!) வெறும் பால்பாயிண்ட் பேனாவை மட்டும் நம்பி, சினி மாயா பஜாரில் கடை விரிப்பது எல்லாம் இனி கொஞ்சம் கஷ்டம்தான்!

த்ரீடி, கிராஃபிக்ஸ், அனிமேஷன் என சில செப்படி வித்தைகள் தெரிந்திருப்பது நல்லது. ஹாலிவுட்டில் ஸ்பெஷல் எஃபெக்ட்ஸுக்கு என்றே தனிப் பரிசுகள் உண்டு. வெளிநாட்டு சினிமா பொன் வைக்கிற இடத்துலே, நாம பூவாவது வைச்சாதானே மரியாதை?

இந்தியாவில், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் படங்கள் சமீப காலமாக அதிகரித்துள்ளது சந்தோஷமான விஷயம். குட்டீஸ்களின் மாபெரும் ஆதரவு பெற்ற 'சக்திமான்' த்ரீ டி படமாச்சே!

'மம்மி', 'ஹாலோ மேன்', 'ஸ்பைடர்ஸ்' போன்ற படங்கள் கிராஃபிக்ஸுக்காகவே வசூலை அள்ளிய படங்கள். 'மம்மி' படத்தில் பாலைவன மண் மேடு, ராக்ஷஸ உருவமாக மாறி, பார்வையாளர்களை 'ஹோ' என்று பிரமிக்க வைத்த த்ரில்லை மறக்க முடியுமா? முழுக்க முழுக்க த்ரீடி தொழில் நுட்பத்தில் வெளிவந்த shrek'ம் தமிழ் 'பாண்டவாஸும்' திரைப்பட உலகைப் புரட்டிப் போட்ட படங்கள்.



'ஆளவந்தான்', 'ஜீன்ஸ்', 'முதல்வன்', ஆட்டோகிராஃப்' போன்ற திரைப்படங்களில் மல்டி மீடியா தொழில் நுட்பம் மிகச் சரியான


அளவில் பயன்படுத்தப்பட்டு, ரசிகர்களின் மனத்தைக் கவர்ந்தது.

டீ.வியில் மட்டும் என்னவாம்? 'ஆலம்', 'வேலன்', 'மை டியர் பூதம்', 'விக்கிரமாதித்யன் கதை', 'ருத்ரவீணை', என ஏகப்பட்ட மாயாஜாலத் தொடர்கள். எல்லாமே மல்டி மீடியா ஜகஜ் ஜாலத்தை நம்பி!

அடிப்படை சினிமா அறிவோடு, மல்டி மீடியா டெக்னிக்கும் தெரிந்திருந்தால், சினிமா, டீ.வி தொடர்களில் அனிமேட்டராக பணி புரியலாம். உங்கள் கற்பனை விரிய விரிய, சம்பளமும் எகிறும்!

## விளம்பரத்துறையில் மல்டி மீடியா...

இதுவும் குளிர்பான விளம்பரம்! 'ஏக சதுர காக்க' என்று எட்டுக் கட்டையில் குரல் ஒன்று ராகமெடுத்துப் பாடும். தண்ணீர் தேடி வரும் காகம் ஒன்று, கண்ணாடி ஜாடியில் சிறுசிறு கற்களைப் போட்டு, களைத்துப் போகும்! இன்னொரு காகமோ, புத்திசாலித்தனமாக, அலகால் குத்தி, ஜாடியில் ஓட்டை போட்டு தண்ணீர் குடித்து உற்சாகமாகப் பறக்கும். சச்சினை ஆட விட்டும், ஐஸ்வர்யா ராயை ஸ்விட்ஸர்லாந்தில் ஓட விட்டும் மாபெரும் பட்ஜெட் பரத்தாமல், சிக்கனமாகவும், சிறப்பாகவும் அசத்திய விளம்பரம் இது! நிச்சயம் அந்த க்ரியேடிவ் டீமுக்கு ஏகோபித்த பாராட்டும், பெரிய தொகைக்கான காசோலையும் கிடைத்திருக்கும்!



சினிமா, டீ.வி சீரியல்களில் டைட்டிலிங் வேலைகள் செய்வதும் சவாலான வேலைதான்! வெவ்வேறு திசைகளில் இருந்து குதித்து விழும், பெயர்கள், திரையில் பூவாக மலர்ந்து, நெருப்புத் துண்டமாக வெடித்துச் சிதறும் ஜால வித்தைகளை அனைவருமே ரசிக்கிறார்கள்.

"பெண்ணே... எழுது! புதுக் கோலம் எழுது" என்று தேவயானி புறப்பட்டதும், பூக்கோலம் அப்படியே பாயாக மடிந்து, சுருண்டு, விரிந்து வேறு கோலமாக மாறும் அழகு, பெண் ரசிகைகளைக் கட்டிப் போடுவதில் ஆச்சரியம் என்ன?

## ஃபான்டுகளை உருவாக்கலாம்

உங்கள் கம்ப்யூட்டரில் இருக்கின்ற ஃபான்டுகளைப் பயன்படுத்தி, போரடித்து விட்டதா? புது ஃபான்டுகளை நீங்களே உருவாக்க முடியும் மல்டி மீடியா தெரிந்திருந்தால்...



## ஓவியர்களும் ஒளிரலாம்

பத்திரிகைகளுக்கும், மற்ற மீடியாக்களுக்கும் ஓவியம் வரைபவர்கள், இனி பென்சிலோ, தூரிகையோ பயன்படுத்த வேண்டாம். மல்டிமீடியா பேக்கேஜ் மூலம், நேர்த்தியாகவும், நுணுக்கமாகவும் கம்ப்யூட்டர் திரையிலேயே படங்களை வரைந்து கொள்ள முடியும். ஸ்கேன் செய்த படங்களைக் கூட மாற்றம் செய்து, துளியும் சம்பந்தம் இல்லாத அளவுக்கு, புத்தம் புதிய படமாக மாற்றலாம். கையால் வரையக் கூடிய ஆற்றல் இல்லாதவர்கள் கூட, மல்டி மீடியா பேக்கேஜ் மூலம் கைதேர்ந்த ஓவியராகலாம். நிறைய சம்பாதிக்கலாம்.


## டிசைன்களில் மல்டி மீடியா...

எந்த வண்ண பெயின்ட்டுடன், எந்த வண்ணம் கலந்தால், புதுவிதமான வர்ணப் பூச்சு கிடைக்கும் என்று ஆராய்வதிலிருந்து, புடைவை, போர்வை டிஸைன் என மல்டி மீடியாவால் நிறைய சாதிக்க முடியும். குறிப்பாக, ஃபேஷன் டிஸைனிங், இன்டீரியர் டெகரேஷன் துறைகளில் மல்டி மீடியா மிகப் பெரிய புரட்சி செய்து வருகிறது. புரட்சியாளர்கள் பொற்கிழியுடன் கௌரவிக்கப்படுவார்கள்!



மினி கல்கி

# இன்டர்நெட்டிலும் மல்டி மீடியா...





நடிகர் விஜய் பற்றிய செய்திகள் அறிய கலாட்டா டாட் காம் பார்க்கலாம். சச்சின்ஸ் டாட் காம் திறந்தால் டெண்டுல்கர் பற்றிய லேட்டஸ்ட் தகவல்கள் விரிகின்றன. சுற்றுலாத் துறையிலிருந்து, கொசு வலை கம்பெனி வரை, விளம்பரம், லோகோ, தலைப்புச் செய்தி, சொந்த வலைத்தளம் அமைத்தல், என செலவு செய்ய, நிறையப் பேர் செக் புக்குடன் காத்திருக்கிறார்கள். மல்டி மீடியா திறமை இருந்தால் வானமே எல்லை! வலையே விலை!

## கல்வித்துறையில் மல்டி மீடியா...

வெளிநாடுகளில் எல்லாம் பிரம்பு வாத்தியும் கிடையாது, சுரியும், ஊமத்தைகாயும் சேர்த்து அரைத்து கரும்பலகைக்குப் பூசும் வேலையும் கிடையாது. சிடி.போட்டு பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியதுதான்!

இனி வரும் நாட்களில் இந்தியாவிலும், கல்வி கற்றுத்தர கம்ப்யூட்டர் மட்டுமே இருக்கும் நிலை உருவாகி விடும். பிரபல கல்வி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும், Computer Based Tutorial (CBT) முறையில் சிடிகளை வெளியிட்டு வருகின்றன. பாடங்கள் அனைத்தையும் கம்ப்யூட்டர் சொல்லித் தரும்; தெளிவு படுத்தும் 'refreshment class'களை மட்டும் ஆசிரியர்கள் எடுப்பார்கள். கல்வி சம்பந்தப்பட்ட சிடிகளைத் தயாரிக்கும் ஆசிரியர்களுக்கு


இப்போதே ஏகப்பட்ட டிமாண்ட்! பாட அறிவோடு, மல்டி மீடியா அறிவும் இருக்கும் ஆசிரியர்களின் சம்பளம் கற்பனைக்கு எட்டாத அளவில் இருக்கும்.

## விளையாட்டில் மல்டி மீடியா...

ஒரு கையில் ஃபீடிங் பாட்டிலில் பால் குடித்துக் கொண்டே, இன்னொரு கையால் செல்ஃபோனில் மொபைல் கேம்ஸ்களை விளையாடும் குழந்தைகளை நாம் பார்க்கிறோம். வீடியோ கேம்ஸ், கம்ப்யூட்டர் கேம்ஸ், என வளர்ந்து இப்போது செல்ஃபோன் கேம்ஸாக உருமாறியுள்ளது. வெளிநாடுகளில் இத்தகைய கேம்ஸ் உருவாக்குபவர்களின் சம்பளம் மிகவும் வசீகரமானது! நம்ம ஊர் தேர்தலில் எம்.பி. சீட்டு வாங்கிவிடலாம்!

## சகலமும் மல்டி மீடியா...

டாக்டர், இன்ஜினியர், கட்டடக் கலை வல்லுநர், எழுத்தாளர், வழக்கறிஞர், வாஸ்து நிபுணர், சோழி ஜோதிடர், ராணுவம், தடய அறிவியல், விண்வெளி என எல்லா துறையிலும் அனிமேஷன் சார்ந்த மல்டி மீடியா புகழ் பரவி நிற்கிறது. மல்டி மீடியா துறையின் ஆதார சக்தியே அனிமேஷன்தான். எடுத்தவுடன் அனிமேஷனை உருவாக்கிவிட முடியாது. அதற்கு நான்கு அடிப்படை நிலைகள் உள்ளன.



1. டிராயிங்
2. 2D அனிமேஷன்
3. 3D அனிமேஷன்,
4. மார்ஃபிங்

## படம் வரைதல்

மவுஸைப் பயன்படுத்தி கம்ப்யூட்டரில் படம் வரைய நல்ல பயிற்சி வேண்டும்.



இப்போது Wacom Board வந்து விட்டது. இதில் ஸ்பெஷல் பேனா இணைக்கப்பட்டுள்ளது. வேக்கம் போர்டு மவுசின் பேட் (mouse pad) போலவே இருக்கும். அதன் மீது பேனாவை வைத்து அழுத்தி, தாளில் வரைவது போலவே வரையலாம். மல்டி மீடியாவில் படங்கள் வரைவதற்கான சிறப்பு சாஃப்ட்வேர்கள் உள்ளன. இவற்றை கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொண்டு படங்களை வரையலாம்.

## 2D அனிமேஷன் (இரு பரிமாண அனிமேஷன்)

கம்ப்யூட்டரில் நாம் வரைகின்ற நிலையான படங்களுக்கு, அசைவுகளை ஏற்படுத்தி இயக்குவது 2D அனிமேஷன். ஒரு குழந்தை நடமாடுவதைப் போல அனிமேட் செய்ய விரும்பினால், முதலில் குழந்தை நடனமாடுகின்ற பல்வேறு போஸ்களை வரைந்து கொள்ள வேண்டும். பிறகு இரு பரிமாண அனிமேஷன்களை ஏற்படுத்துகின்ற சாஃப்ட்வேர் மூலம் 2D அனிமேஷன்களை உருவாக்கலாம். நடனமாடும் குழந்தையின் முன் பகுதியை மட்டுமே 2D அனிமேஷன் மூலம் பார்க்க முடியும்.



## 3D அனிமேஷன் (முப்பரிமாண அனிமேஷன்)

நடனமாடும் குழந்தையை, மேலிருந்து, கீழிலிருந்து, இரு பக்கங்களிலிருந்து, வித்தியாசமான கோணங்களிலிருந்து பார்க்கும் வண்ணம் வடிவமைப்பது 3Dஅனிமேஷன். இதற்காக பிரத்யேகமான சாஃப்ட்வேர்கள் உள்ளன. 3D அனிமேஷன்களை உருவாக்க, நேரமும் உழைப்பும் மிக அதிகம்!

## மார்ஃபிங் (morphing)

டி.வி. சீரியல்களில் நிறைய மார்ஃபிங் வித்தை



பயன்படுத்தப்படுகிறது. ஆலம் ஒன்று பாம்பாகி, பாம்பு அம்மனாகி, அருள் புரியும். மோட்டார் சைக்கிள் சிறுத்தையாக மாறி வேகமெடுக்கும். ஓர் உருவத்திலிருந்து இன்னொரு உருவத்தை அசைவுகளோடு மாற்றம் செய்வதே மார்ஃபிங் சாகசம்! 'நாலும் தெரிஞ்சவன் நல்லா பிழைச்சுக்குவான்' என்பார்களே! நாலும் தெரிஞ்ச மல்டி மீடியாக்காரரைச் சொல்லியிருப்பாங்க போலிருக்கு.

## மல்டி மீடியா பேக்கேஜுகள்

- Flash
- Photo Shop
- Director
- Image Ready
- Sound forge
- Dream weaver
- Fire works
- 3D studio max
- Maya
- Illustrator
- Corel Draw
- Swish
- Adobe premier
- Animo

இந்தப் பாக்கேஜ்கள் எல்லாம் ஜகஜாலம் புரிந்த உதவும் கருவிகள்.

## Flash


ஃபிளாஷ் மூலம் அனிமேஷன்களைச் சிறந்த முறையில் உருவாக்கலாம். நகரும் தன்மை கொண்ட படங்களை உருவாக்கலாம்.



மினி கல்கி

ஸ்கிரிப்ட்டிங் புரோகிராம்களை எழுதி, இன்டர்நெட் பயன்பாடுகளுக்குக் கூடப் பயன்படுத்த முடியும். சவுண்டு ஃபைல்களையும் படங்களுடன் இணைத்து உயிருள்ள படங்களாக மாற்றியமைக்க முடியும்.

## Photo Shop



படங்களை வரைவதற்கென்றே உருவாக்கப்பட்ட பேக்கேஜ் ஃபோட்டோ ஷாப்! புகைப்படங்களையும் படங்களையும் விருப்பத்துக்கு ஏற்ப மாற்றலாம். உடலமைப்பு, நிறம், பின்புலம் என எதையும் மாற்றியமைக்க முடியும். வாழ்த்து அட்டைகளை மிகச் சிறப்பாக உருவாக்கலாம்.

## Director

ஃப்ளாஷ் மற்றும் இதர சாஃப்ட்வேர்களில் உருவாக்கிய கிராஃபிக்ஸ் படங்களைத் தொகுத்து பேக்கேஜாக உருவாக்க உதவும். திரையில் தெரிவதைப் பார்த்துக் கொண்டே இருப்பது ஒரு வகையான புரோகிராம். பட்டனை 'கிளிக்' செய்தால், பூனை வருவது போலவும், பட்டன் மீது மவுஸைக் கொண்டு சென்றால் குழந்தை அழுவது போலவும் புரோகிராம் எழுதி வடிவமைக்க, டைரக்டர் உதவுகிறது. ஒலிகளை உருவாக்கும் ஃபைல்களை டைரக்டர் கொண்டு பராமரிப்பது எளிது. கண்களைப் பறிக்கின்ற அழகான படைப்புகளைச் சுலபமாக உருவாக்கலாம்.

## Image Ready

ஃபோட்டோ ஷாப்பின் ஒரு பகுதி இது. ஃபோட்டோ ஷாப்பில் அனிமேஷன்களை உருவாக்க



முடியாது. அதற்கு இமேஜ் ரெடி பயன்படுகிறது.

## Sound Forge

ஒலிகளைக் கண்காணித்து, பராமரித்து, முறைப்படுத்த உதவும். முப்பது வயதுப் பெண்ணின் குரலைப் பதிவு செய்த பிறகு, அதை இரண்டு வயதுக் குழந்தையின் மழலைக் குரலாக மாற்ற முடியும்!

## Dream weaver

ட்ரீம் வீவர் மூலம் திறமையான வெப்சைட்டுகளை உருவாக்க முடியும். ஃப்ளாஷ் கிராஃபிக்ஸ்களை ட்ரீம் வீவரிலேயே உருவாக்கலாம். இதில் உருவாக்கப்படும் ஃபைல்களை இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரில் பார்வையிடலாம்.

## Fire works


வெப் அனிமேஷன்களை உருவாக்கலாம். மாற்றங்களைச் செய்யலாம். உருவாக்கியவற்றை ட்ரீம் வீவர், எச்.டி.எம்.எல் எடிட்டர்களுக்குக் கொண்டு செல்லலாம். உருவாக்கிய படங்களிலும், கிராஃபிக்ஸ்களிலும் ஒரு குறிப்பிட்ட பகுதியை கம்ப்ரெஸ் செய்ய முடியும். இதனால் படங்களுக்குத் தெளிவு கிடைக்கிறது.



## 3D Studio Max

முப்பரிமாண உருவங்கள் வரைந்து அனிமேஷன் செய்ய பயன்படுகிறது.

மினி கல்கி




## MAYA

3D ஸ்டூடியோ மாக்ஸை விட, மாயாவில் உருவாக்கப்படும் படங்களில் துல்லியம் அதிகம். கையாள்வதும் எளிது.

## Illustrator

அடோப் நிறுவனத்தின் பேக்கேஜ். இது வெக்டார் மற்றும் டிராயிங் செய்ய உதவுகிறது.

## Corel Draw

கோரல் டிரா பேக்கேஜ் மூலம் திறமையாக வரையவும் 'லோகோ' உருவாக்கவும் முடியும். படங்களுக்கு 2D, 3D வடிவமைப்புகளைக் கொடுக்கிறது.

## Swish

டைட்டிலிங் செய்யும் போது, எழுத்துகள் விதவிதமாக குதித்து விழுந்து, வெவ்வேறு திசைகளில் பறந்து, சுருண்டு வருமாறு ஜாலம் செய்ய உதவும்.

## அடோப் ப்ரீமியர்

இது, வீடியோ ஃபைலான எம்பெக் (Mpeg) ஃபைல்களை உருவாக்க உதவுகிறது. அதாவது,

உருவாக்கிய படத் தொகுப்புகளில் எடிட்டிங் பணிகளைச் செய்யப் பயன்படுகிறது.

## அனிமோ

இந்த சாஃப்ட்வேர் மூலம் தொலைக்காட்சிகளில் வெளிவரும் கார்ட்டூன் நெட்வொர்க் போன்ற தொடர்களை உருவாக்க முடிகிறது. 2D, 3D அனிமேஷன்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த உதவுகின்ற சாஃப்ட்வேர் தொகுப்பில் அனிமோ சாஃப்ட்வேரே முதலிடம் வகுக்கிறது.



## அனிமேஷன் துறையில் உள்ள பணிப் பிரிவுகள்

- விஷுவல் டெவலப்மெண்ட் ஆர்டிஸ்ட்
- ஸ்டோரி போர்ட் ஆர்டிஸ்ட்
- லே அவுட் ஆர்டிஸ்ட்
- கேரக்டர் அனிமேட்டர்
- க்ளீன் அப் ஆர்டிஸ்ட்






- எஃபெக்ட்ஸ் ஆர்டிஸ்ட்
- பேக்கிரவுண்ட் ஆர்டிஸ்ட்
- கலர் ஆர்டிஸ்ட்
- கம்ப்யூட்டர் அனிமேட்டர்கள்

மினி கல்கி

* எஃபெக்ட் அனிமேட்டர்கள்
* மாடலர்ஸ்
* கம்போசிட்டர்ஸ்
* இயக்குநர்கள்
* ஆர்ட் டைரக்டர்
* தொழில்நுட்ப இயக்குநர்
* எடுடெயின்மெண்ட் புரோகிராமர்
* இன்ஃபோடெயின்மெண்ட் புரோகிராமர்
* கேம் டெவலப்பர்
* வெப் ஸைட் வடிவமைப்பாளர்
* கிராஃபிக்ஸ் டிஸைனர்
* மல்டிமீடியா ஆர்டிஸ்ட்
* வெர்சுவல் ரியாலிடி / சிமுலேஷன்
* ஆடியோ ஸ்பெஷலிஸ்ட்
* விஷுவலைஸர்



## வேலை வாய்ப்புகளும் தொழில் வாய்ப்புகளும்

குத்து மதிப்பாகச் சொல்லாமல், குறி[illegible] பிட்டே ஆய்வுகள் தெரிவிக்கும் செய்தி இதுதான்.

2006 பிறந்து, 'ஹாப்பி நியூ இயர்' என மெரீனாவில் பலூன்கள் பறக்க விடுவதற்குள், இந்திய அனிமேஷன் துறையில் சுமார் 150 கோ[illegible] அமெரிக்க டாலர்கள் புழங்குமாம்! அமெரிக்காவின் மிகப் பெரி[illegible] அனிமேஷன் நிறுவனங்கள் இந்தியாவில் கால் பதிக்க இடம் பார்த்து வாஸ்து பூஜையும் செய்து விட்டதாகக் கேள்வி! அமெரிக்கா போலவே பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளும் இந்திய மல்டி மீடியா நிபுணர்கள் மீ[illegible] அலாதி மரியாதை வைத்திருக்கிறது. அவர்களும் தங்கள் அனிமேஷன் மையங்களை இங்கே திறக்க நல்ல நாள் பார்த்திருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலை நாட்டினர் ஒரு புறம் இருக்க, இந்தியாவிலேயே இதற்கா[illegible] தேவைகள் அதிக அளவில் வளர்ந்து வருகின்றன. பரதம் முத[illegible] பேரன் பேத்தி பாடல் வரை, யோகா முதல் அடாமிக் ஃபிஸிக்ஸ் வரை சிடிகளே சொல்லிக் கொடுக்கும் நிலை உருவாகி வருகிறது.






இந்தியாவில் பல சிறந்த தொழில் நுட்ப வசதி கொண்ட, அனிமேஷன் ஸ்டுடியோக்கள் இயங்கி வருகின்றன. இந்திய அனிமேஷன் துறையின் முன்னோடியான ராம் மோகனால் தொடங்கப் பட்ட UTV Toons (மும்பை) டூன்ஸ் அனிமேஷன் இந்தியா (திருவனந்தபுரம்), ஜாதுவர்க்ஸ் (பெங் களூர்) பத்மாலயா, எஸ்கா டூன்ஸ் (சென்னை) போன்றவை மேலை நாட்டுத் திட்டங்களை எடுத்துச் செய்து வருகின்றன.

TASI- The Animation Society of India என்ற அமைப்பு ராம்மோகன் தலைமையில் அனிமேஷன் துறைகளுக்காகவே செயல்பட்டு வரும் இயக்கம். இதன் வெப் சைட் முகவரி www.tasionline.org. இதில் நுழைந்தால், மல்டி மீடியா சம்பந்தப்பட்ட அனைத்து விதமான தகவல்களையும் பெறலாம்.

வெளிநாடோ... உள்நாடோ... படைப்பாற்றலும், தொழில் நுட்பத் திறமையும் இருந்தால், மல்டி மீடியா என்பது கிம்பர்லி வைரச் சுரங்கம் மாதிரி. வெட்ட வெட்ட, வைரம் கொட்டும்! காற்று வீசும் போதே, தூற்றிக் கொள்ளுவது புத்திசாலி இளைஞர்களின் அடையாளம். அதற்காக உங்களை முழுமையாகத் தயார் படுத்திக் கொள்ள உழையுங்கள். அனிமேஷன் தேவதை மவுஸ் எடுத்து கொடுத்து ஆசீர்வதிப்பாள். இது அனுபவ சாலியின் வார்த்தைகள். நம்புங்கள்... வெற்றி நமதே! வாழ்த்துகள்!



தொகுப்பு: அனுராதா சேகர்

மினி கல்கி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05" Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 " Registered as a Newspaper in Srilanka Supplement to the Kalki issue Dated 13.6.2004





கல்கி GOKULAM கோகுலம் மங்கையர் மலர்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. இந்தியா

# YOU CAN CHOOSE YOUR DOOR

THAT IS YOUR RIGHT & RESPONSIBILITY

# MAYURAM TIMBER

Offers you wide variety of Doors at
Varying prices suiting your budget



BE AWARE




Contact :

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPORATION

No.83 GST Road, West Tambaram, Chennai - 600 045.


Phone : 22415297 / 22381281

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka


ISO 9001:2000

# இணைந்திடுவீர் இன்றும், என்றும் தரமான தங்கத்துடன்

நாங்கள் விற்கும் ஆபரணங்களை மத்திய அரசால் அங்கீகாரம் பெற்ற BIS நிறுவனத்தார் தர ஆய்வு செய்து தங்கத்தின் அளவு 91.6% இருப்பதால் எங்களது ஒவ்வொரு தங்க ஆபரணங்களிலும் கீழ்கண்ட 916 ஹால்மார்க் முத்திரையை பதிவு செய்கிறார்கள்




SST : சரவணா ஸ்டோர்ஸ் தங்க நகை மாளிகை
916 : தங்கத்தின் அளவு
: Bureau of Indian Standards
BA : பாரத் அஸாயர்ஸ், தர ஆய்வு நிறுவனம்
E : வருடம் (2004)

தினசரி காலை 8.30 மணிக்கு
ஷோரூம் திறக்கப்படும்

115, உஸ்மான் ரோடு

## சரவணா ஸ்டோர்ஸ்

தங்க நகை மாளிகை

• வைரம் • தங்கம் • பிளாட்டினம் • வெள்ளி

115, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை - 600 017 போன் : 2435 6060 / 2435 6061
e-மெயில் : saravanastores_tnm@yahoo.com
Visit us : www.saravanastores-tnm.com www.saravana-stores.com
அனைத்து பேங்க் கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

